Registered as a News Paper in Sri lanka


விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
யாழ். நகரின் மத்தியில் புதுப் பொலிவுடன் முற்றிலும் குளிரூட்டப்பட்டது.
ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் விசேட விலையில் BBQ
தொடர்பு: 0771064385 0776943479 70/6, K.K.S. Road, JAFFNA
(C/1615)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 28 ஞாயிற்றுக்கிழமை (12.08.2012) பக்கங்கள் 20 ஓசை – 316













## உயர்தர வினாத்தாளில் குளறுபடி காரணமானவர்கள் மீது நடவடிக்கை

### இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சை ஆரம்பமான நாள் தொடக்கம் தொடர்ச்சியாக வினாத்தாள்களில் மாற்றங்கள் செய்யப்பட்டு வருவதால் பரீட்சை மீது மக்களுக்கு நம்பிக்கை வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதென இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

பரீட்சை ஆரம்பமான தினத்தில் இணைந்த கணிதம் வினாத்தாளில் திருத்தம் செய்யப்பட்டதாகவும் நேற்று விவசாய வினாப் பத்திரத்தில் வினாவொன்று திருத்தப்பட்டுள்ளதாக சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இந்த நிலை ஏற்படக் காரணமானவர்கள்

19 ஆம் பக்கம் பார்க்க

## போதனா வைத்தியசாலை ஊழல் கணக்காய்வு திணைக்களம் விசாரணை

(யாழ்ப்பாணம்)


யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் சம்பவங்கள் தொடர்பாக கணக்காய்வுத் திணைக்களம் விசாரணை மேற்கொண்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.சிறிபவானந்தராஜா தெரிவித்தார்.

கடந்த 2 நாட்களாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்ட அரச கணக்காய்வுத் திணைக்கள அதிகாரிகள் யாழ். போதனா வைத்தியசாலையில் அரச நிதி உதவிகள் மற்றும் முன்னைய பதிவுகள், ஆவணங்கள் என்பவற்றை பரிசீலனை மேற்கொண்டனர்.

கடந்த காலத்தில் அரசினால் வழங்கப்பட்ட சொத்துக்களின் கணக்கு விபரங்கள் மற்றும் நிதி உதவிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகளினால் வழங்கப்பட்ட நிதி உதவிகள் தொடர்பான ஆவணங்களை அவர்கள் திரட்டியுள்ளதாக அவர் தெரிவித்தார். வைத்தியசாலை ஊழியர்களிடம் எந்த

19 ஆம் பக்கம் பார்க்க

# இந்திய அணுகுமுறைக்கு ஜனாதிபதி விமர்சனம்



(கொழும்பு)

அண்டை நாடுகளின் விவகாரங்கள் தொடர்பாக தீர்மானம் எடுக்கும்போது இந்தியா நிதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்திருந்தாலும் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நெருக்கமான பிணைப்பில் எவ்வித விரிசலும் ஏற்படவில்லையென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து வெளிவரும் 'ரைம்ஸ் ஒவ் இந்தியா' ஊடகவியலாளருக்கு அலரி மாளிகையில் வைத்து நேற்றுமுன்தினம் அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தனது பேட்டியில் மேலும் தெரிவித் துள்ளதாவது,

இலங்கை மீது இந்தியா மெய்யாகவே கரிசனை கொண்டிருந்தால் ஐ.நா.வின் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்திருக்கக் கூடாது. மாறாக தீர்மானம் நிறைவேற்ற முனைப்பு காட்டி நாடுகளை தடுத்திருக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இந்தியா, இலங்கைக்கு ஆதரவாக செயற்பட்டிருந்தால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்காது.

பிராந்திய வலயத்தின்

19 ஆம் பக்கம் பார்க்க

## தாய்ப்பால் புரைக்கேறி 3 மாத சிசு உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தாய்ப்பால் அருந்திய பின் நித்திரை கொண்ட 3 மாதம் நிரம்பிய சிசு புரைக்கேறியதால் மரணமான சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை, கற்கோவளம் புனித நகரைச் சேர்ந்த பிரதீப் சானுகா என்ற சிசுவே மரணமானது.

நேற்று முன்தினம் 4.00 மணியளவில் தாய்ப்பால் அருந்திய பின் நித்திரை கொண்ட குழந்தையை எந்தவித அசைவு மற்ற நிலையில் இரவு 7.00 மணியளவில் காணப்பட்டதால் உடனடியாக மந்திகை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர்.

குழந்தை இறந்துபோனதை வைத்தியர்கள் உறுதிசெய்தனர். குறித்த சிசு தாய்ப்பால் புரைக்கேறியதால் மரணமானதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சடலம் நேற்றுக்காலை பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (12,01)

## மனித உரிமை மீறல் குறித்து சுயாதீன விசாரணை அவசியம்

### சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பிலான நியாயங்களைத் தேட ஐக்கிய நாடுகள் சபை தலைமையிலான பக்கசார்பற்ற விசாரணையே ஒரே வழியென சர்வதேச மன்னிப்புச் சபையின் இந்தியாவுக்கான பிரதம நிறைவேற்று அதிகாரி ஆனந்த பத்மநாபன் தெரிவித்துள்ளார்.



பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாடு விரைவில் நடைபெறவுள்ள நிலையில் இலங்கையின் பிரச்சினை சர்வதேச கண்ணுக்கு மீண்டும் வெளிப்படும்.

எனினும் இதன்போது ஒரு பக்கம் அல்லாது இலங்கைப் படையினரும் அதேநேரம் விடுதலைப் புலிகளும் செய்த போர்க் குற்றங்களும் முன்னிலைப்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், மனித உரிமை மீறல் தொடர்பில் பக்கச் சார்பற்ற விசாரணைகளை மேற்கொள்ளவேண்டிய பாரிய

19 ஆம் பக்கம் பார்க்க

## லீசிங் கட்டத் தவறியவருக்கு கிளிநொச்சியில் தாக்குதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, செல்வாநகர் கிராமத்தில் தவணைக் கடனில் வாகனத்தை வழங்கும் (லீசிங்) வங்கியொன்றினூடாக வாகனத்தைக் கொள்வனவு செய்த நபர் கடனை 3 மாதமாகியும் மீளச் செலுத்தாததால் லீசிங் வங்கி உத்தியோகத்தர்களால் தாக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த பகுதியில் வசிக்கும் லீசிங் பெற்ற நபர் தனது மகனுடனான இணைந்த கணக்கில் உழவு இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்ததாகவும்,

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை நிலைமையை ஆராய ஜெனிவாவில் விசேட கூட்டம்

(கொழும்பு)

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பாக ஆராய்வதற்காக அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்களின் கருத்துக்களை கேட்டறியும் வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நாயகம் நவநீதம் பிள்ளை விசேட கூட்டம் ஒன்றை கூட்டவுள்ளார்.

இந்தக் கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி ஜெனிவாவில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு இலங்கை அரசாங்கத்திற்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தின் போது, இலங்கை தொடர்பில் சுமத்தப்பட்ட மனித உரிமை மீறல்

19 ஆம் பக்கம் பார்க்க


## டெல்றொக்சனின் பூதவுடல் கண்ணீருடன் நல்லடக்கம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்தில் படுகாயமடைந்த நிலையில் மகர சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டு கோமா நிலையில் உயிரிழந்த தமிழ் அரசியல் கைதியான மரியதாஸ் டெல்றொக்சனின் இறுதிக் கிரியை நேற்றைய தினம் நூற்றுக்கும் அதிகமான மக்களின் கண்ணீர் அஞ்சலிக்கு மத்தியில் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து அவரது சொந்த இடமான யாழ்ப்பாணம் பாஷையூருக்கு எடுத்துவரப்பட்டு அவரது சடலம்

19 ஆம் பக்கம் பார்க்க



# நல்லூரில் சுகாதாரமற்ற உணவு விற்பனை

# இருவருக்கு எதிராகச் சட்டநடவடிக்கை

## பொதுச் சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கை



(கிரு-சிகரம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவத்தை முன்னிட்டு ஆலயத்தை அண்மித்த பகுதியிலும் ஏனைய யாழ். மாநகராட்சி மன்ற பகுதியிலும் உணவு மாதிரிகள், ஐஸ்கிறீம் மாதிரிகள் ஒரு தொகுதி பெறப்பட்டு இரசாயன உயிரியல் பகுப்பாய்விற்காக கொழும்பு அரசாங்கத் திணைக்களத்திற்கும், பொறளையில் அமைந்துள்ள மருத்துவப் பகுப்பாய்வு நிலையத்திற்கும் பகுப்பாய்விற்காக அனுப்பப்பட்டிருந்தது. அனுப்பப்பட்ட நான்கு ஐஸ்கிறீம் மாதிரிகளில் இரண்டு மட்டுமே பாவனைக்கு உகந்தது எனவும் ஏனைய இரண்டு கடை ஐஸ்கிறீம் மாதிரிகள் பாவனைக்கு உகந்த முறையில் தயாரிக்கப்படவில்லை. இந்த இருகடைசள் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பொது சுகாதார பரிசோதகர் ஜீவநாதன் தெரிவித்தார்.

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவகாலத்தில் உணவுப் பொருள் விற்பனையில் ஈடுபடும் கடை உரிமையாளர்கள் தமது கடையில் உள்ள உணவுப் பொருட்களை எவ்வாறு பாதுகாப்பினை மேற்கொள்ளவேண்டும் என்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்றுக் காலை 9.30 மணிக்கு யாழ். மாநகர சபை சுகாதாரப் பணிமனையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

தற்காலிக கடைகளில் பணிபுரிகின்ற ஊழியர்கள் யாராவது இதுவரை இரத்த பரிசோதனைகள் மேற்கொள்ளாது இருப்பின் தமது சுகாதார பணிமனையில் வந்து பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

யாழ் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி ஞானசோதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதிகளில் உணவு விற்பனையில் ஈடுபடும் உணவு நிலைய உரிமையாளர்கள் கலந்துகொண்டனர்.

## கலந்துரையாடல்

ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் 20 ஆம் ஆண்டு நிறைவு பற்றிய சஞ்சிகை வெளியீடு, மற்றும் மலர்க் குழுத் தெரிவு தொடர்பான ஆரம்ப கலந்துரையாடல், இன்று பிற்பகல் 4.00 மணியளவில், சாவகச்சேரி டச் வீதி, அகிலாண்டம் சன சமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் கலந்துகொண்டு தங்கள் ஆலோசனைகளை வழங்கி உதவுமாறு சங்கத் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# தொடரும் படகு எரிப்பு

(வடமராட்சி)

பொலிகண்டியில் உள்ள மாதா கோயில் முன்றலில் நேற்று முன்தினம் பகல் வேளையில் படகு ஒன்றுக்கு தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளது. இதே இடத்தில் கடந்த வாரங்களில் மூன்று படகுகள் தீ வைத்து எரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இது பற்றி பொலிஸார் தெரிவிக்கையில் உரிமையாளர் எவரும் முறைப்பாடு எதுவும் செய்யவில்லை. இதனால் எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாது எனத் தெரிவித்தனர். (116)

# நாவலர் மண்டபத்தில் மாண்டலின் கச்சேரி

பாரம்பரிய கலை இலக்கிய அரங்கின் ஆதரவில் யாழ். மாநகர சபையின் கலாசாரப் பிரிவு ஏற்பாடு செய்துள்ள மாண்டலின் கச்சேரி நாளை திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறும். உலகப் புகழ்பெற்ற மாண்டலின் இசை விற்பனர் ஸ்ரீனிவாஸ் அவர்களின் முதன்மை சிஸ்யன் சென்னை அரவின் பார்ரப் மாண்டலின் இசை வழங்க, அணிசெய கலைஞர்களாக சென்னை ஹரிகர சுப்பிரமணியன் மிருதங்கமும் சென்னை சத்தியநாராயணன் கடமும் வழங்குவர்.


நல்லூர் கந்தனின் திருவிழாவை முன்னிட்டு

சந்நிதி முருகன் வேக் சொப் வழங்கும்

இலவச விசேட சேவை



* எமது தொழில்நுட்ப வல்லுநர்களின் இலவச சேவை
* அசல் பஜாஜ் உதிரிப்பாகங்களிற்கு 10 வீத விலைக்கழிவு
* திருத்த வேலைகளிற்கு 10 வீத விலைக்கழிவு



எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை

இல. 241, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(வீரகாளி அம்மன் கோயில் அருகாமை)
தொ.பே. 0212228076,
0777110199, 0772018275



DAMRO

# SALES ASSISTANTS

(Trainee)

## Jaffna Showroom

We seek to recruit dynamic & self motivated individuals for the above showroom, who are expected to welcome, treat & fulfill the needs of our customers to their entire satisfaction.

**APPLICANTS SHOULD :**

- be males below 26 years of age.
- be permanent residents within 20km from the above showroom.
- have G.C.E (A/L) qualification.
- have a flair for customer relations.

Total earnings will not be less than Rs. 25,000/- p.m.

If the above positions are of interest to you, please forward a detailed resume with your contact numbers & contact details of two non-related referees to reach us within ten days of this advertisement.

The Human Resources Manager,
DAMRO
No: 361, Kandy Road, Nittambuwa.
E-mail: hrm@damro.lk

(C/1688)


# குடாக்கடலில் வலம்புரிச்சங்கு

குடாக்கடல் நீரேரியில் வீச்சு வலையில் ஒரு வலம்புரிச் சங்கு அகப்பட்டதாக அறியவந்துள்ளது. திருநகர் வாசியும், தற்சமயம் நாவற்குழிப் பகுதியில் வசித்து வருபவருமான ஒருவர் பாசையூர் கடலில் அந்தோனியார் சிலை நிறுவப்பட்ட பகுதியில் .வீச்சு வலைத் தொழிலில் ஈடுபட்டிருந்த சமயம் அவரது வலையில் வலம்புரிச் சங்கு சிக்கிக்கொண்டதாகக் கூறப்படுகிறது. வலம்புரிச் சங்கை 40 இலட்சம் ரூபாவுக்கு வியாபாரி ஒருவர் வாங்கிக்கொணடதாகவும் மேலும் தெரியவந்துள்ளது. செய்தியைக் கசியவிட்டால் சங்கை அரச அதிகாரிகள் பறிமுதல் செய்துவிடுவார்கள் என்ற அச்சத்தில் மறைத்து வைத்திருந்ததால் தாமதித்தே தகவல் கசியத தொடங்கியுள்ளது. செய்தியை எழுதும் வரை வலம்புரிச் சங்கைப் பெற்றுக்கொண்டவரை சந்திக்க முடியவில்லை. ஆயினும் சம்பவம ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது.(68)


சிறு விளம்பரம்

**வீடு விற்பனைக்கு**


சுதுமலை தெற்கில் ஒரு பரப்பு காணியில் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :- க.சீவரட்ணம், றிஜிஸ்ரர் சம்பந்தர் ஒழுங்கை, சுதுமலை தெற்கு. (R/152)


## தலை அலங்காரம்; பயிற்சி ஆரம்பம்

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் தலை அலங்காரம், முக ஒப்பனை, மனையியல் போன்ற பயிற்சிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப் படவுள்ளது. தொடர்ந்து 3 மாதகாலம நடைபெறும் இப்பயிற்சியில் சேர விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களைச் சண்டிலிப்பாய் பிரதேச செயலரிடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(104)

## தினமுரசின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்



1 ஆவது அகவையில்




பெயர்: இ.ஜனனி

முகவரி: பீட்டியெல்லை, களபூமி, காரைநகர்.

# ஒழுக்கத்துடன் கூடிய கல்வியே வளமான வாழ்க்கைக்கு அடித்தளம்

## — இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் —



(யாழ்ப்பாணம்)

வளர்ந்து வரும் சின்னச் சிறு பிஞ்சு உள்ளங்களிடத்தில் நஞ்சு விதைகளை விதைக்காமல் நல்ல விதைகளை விதைத்து நல்லதொரு எதிர்கால சந்ததியினரை மண்ணில் துளிர்விட நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடவேண்டும் என இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.மகிந்தினி விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் உடுப்பிட்டி சந்தை வீதி, சைவத்திருத்தொண்டார் அறநெறிப்பாடசாலையும் இணைந்து நடாத்திய சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை அண்மையில் வல்லைவெளி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் இடம் பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஆன்மிக சிந்தனைகள் அருகிக்கொண்டு வரும் இன் றைய காலகட்டத்தில் இளைய தலைமுறையினர் எமது சமயம் பற்றி விழிப்புணர்வு அடைந்து எமது சமயப் பெரியவர்கள் நினைவுகளை நெஞ்சங்களில் நிலைநிறுத்திக் கொள்ளும் பொருட்டு எமது திணைக்களம் இவ்வாறான நாயன்மார்களின் குருபூசை விழாக்களை ஒழுங்கு செய்து நடாத்தி வருகின்றது.

அறநெறிப்பாடசாலைகள் மூலம் தான் ஆன்மிக சிந்தனைகளையும் சமயம் சார்ந்த உண்மைகளையும், சமயபபழக்க வழக்கங்கங்களையும் அற நெறிப் பண்புகளையும் கலாசாரம் மற்றும் இந்து சமயப்பண் பாட்டு விழுமியங்களையும் நிலை நிறுத்த முடியும்.

எமது இளைய சமூதாயம் திசைமாறிப் போவதை நாம் அன்றாடம் பத்திரிகை வாயிலாக செய்திகளை அறிகின்றோம். எமது இனத்தின் பண்பாட்டையே சீரழிக்கும் வகையில் மனதை உலுக்கும் வகையில் பல சமூதாயச் சீர்கேடுகள் இன்று தலைதூக்கித்தாண்டவமாடுகின்றன. இந்நிலைமை நீண்டு சென்றால் எமது சமூதாயத்தின் நிலை கேள்விக் குறியாகவே அமையப்போகின்றது. ஆகவே இந்நிலையில் இருந்து எமது இளைய சமூதாயத்தை காப்பாற்ற வேண்டிய பொறுப்பிலிருந்து பெற்றோர்கள் ஆசிரியர்கள் புத்திஜீவிகள் சமூதாயத்தில் உள்ள பெரியோர்கள் எவருமே விலகிவிடமுடியாது.

காலத்தின் தேவையுணர்ந்து ஒவ்வொருவரும் தமது பிள்ளைகளை பொறுப்புணர்வோடு வளர்க்க வேண்டும். எவ்வளவு தான் கல்வி கற்று பெரியோரானாலும் அவர்களிடத்தே ஒழுக்கம் என்ற ஒன்று இல்லையென்றால் அனைத்தும் பயனற்றதாகிவிடும் பயனுள்ள ஒழுக்கத்தோடு கூடிய கல்வியை குழந்தைகளுக்கு வழங்குங்கள் என்றார். (116)

## குடிநீர் விநியோகம்

காரைநகர் பிரதேசத்திற்கு இலவச வறட்சிக்கான குடிநீர் விநியோகம் தற்போது வழங்கப்பட்டுவருவதாக ஈ.பி.டி.பி கட்சியின் காரைநகர் பிரதேச அமைப்பாளரும், எதிர்கட்சித் தலைவருமான வி.கண்ணன் தெரிவித்துள்ளார். குடும்பத்தில் உள்ள ஒரு நப ருக்கு 4லீற்றர் குடிநீர் வீதம் வழங்கப்பட்டு வருகிறது என் மேலும் தெரிவித்தார்.

## காட்சிக்கூடம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய பார்வையற்றோர் சம்மேளன வடமாகாணக்கிளை பார்வையற்றவர்களின் "திறன் விருத்தியை" வெளிப்படுத்தும் காட்சிக்கூடம் ஒன்றினை நல்லூர் ஆலயசூழலில் அமைத்துள்ளது. இக்காட்சிக் கூடம் நல்லூர் கோயிலுக்கு முன்பாக பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ளது. பெரும் திரளான பக்தர்கள் அக்காட்சிக்கூடத்திற்கு விஜயம் செய்து பார்வையிட்டுவருவதுடன் அங்கு விற்பனை ஆகும் பொருட்களையும் வாங்கிச் செல்கின்றனர். (54)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று...

(நல்லூர்)

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் கைலாய வாகனத் திருவிழாவான இன்று சென்னை அரவிந்பார்கவின் மென்டலீன் இசைக்கச்சேரி இடம்பெறவுள்ளது.

இதில் அணிசேர் கலைஞர்களாக சென்னை சத்தியநாரயணன் (மிருதங்கம்), எஸ்.ஹரிஹரசுப்ரமணியன் (கடம்) ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் ஆன்மிக சிந்தனையும் சமய சொற்பொழிவும் கலைநிகழ்வுகளில் "சிந்தனை செய்வோம" என்னும் விடயம் பற்றி விகடகவி மு.திருநாவுக்கரசு சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார்.


கலைநிகழ்வுகளில் வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் அறநெறிப்பாடசாலை, அரியாலை ஞானவைரவர் அறநெறிப்பாடசாலை ஆகியன கலந்து கொள்ளவுள்ளன.

சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகத்தினால் நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடாத்தி வரும் "தெய்வீகப் பேருரைகளும் கலை நிகழ்வுகளும்" இன்று 20ஆம் திருவிழாவான ஞாயிற்றுக்கிழமை "திருக் கோயில் வழிபாடு" என்ற தலைப்பில் சிவத்திரு.நடராசாதேவராசா அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

சைவ மகாசபை நடாத்தும் தெய்வீக இசைப்பேருரை தொடரில் நல்லை ஆதின குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா வழங்கும் கந்தபுராண சொற்பொழிவு இடம் பெறவுள்ளது.

மகேஸ்வரன் மணிமண்டபத்தில் டான் தொலைக்காட்சி நிறுவனத்தின் ஏற்பாட்டில் கலைநிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது இதே போல் மனோன்மணி அம்மன் ஆலயத்திலும் கலைநிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (60,42)

## நல்லூர் முருகனுக்கு இன்று கைலாகலாகனத்திருவிழா



### ஆணவத்தைப் போக்கிடு முருகா!

தூக்கிய ராவணனுந் துன்புற்றருள்வேண்ட
ஆக்க மளித்தருளும் ஆண்டவனின் - நோக்கத்தை
நல்லூரிற் கயிலை விழா நிகழ்விற்காணவே
நல்லறிவு கூடும் நமக்கு

-நல்லூர் கந்தன் பாமாலை-

### எண்ணமதில் ஞானம்சிலிர்த்து விடும்!

கண் மலர்த்தி நீ பார்த்தால்
கண்டவினை ஓடிவிடும்
மண்மலர நீ இறங்கி நடந்தால்
மால் வினையும் மறைந்து விடும்
குஞ்சி யழகுகண்டு எந்தன்
கொடுவினைகள் பறந்தோடும்
வண்ணமயில் ஏறும் வடிவழகா
எண்ணமதில் ஞானம் சிலிர்த்துவிடும்.

-மகிந்தன் மண்டைதீவு-

### வேல் முருகா சரணம்!

சிங்காரக் காட்சிதரும் சிவனார் திருமகனே முருகா
மங்காத ஒளி விளக்காய் நம் வாழ்வு மலர்ந்திடவே நீயும்
சங்காரஞ் செய்தாய் அசுரர் குலமதையே மால் மருகா
உங்காதல் வள்ளியுடன் வரவேண்டும் வேல் முருகா சரணம்!

-இரசையா ஸ்ரீதரன்-




## கடும் வறட்சியால் கால்நடைகள் இறப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சி பகுதியில் கடும் வறட்சி நிலவுவதால் குளங்களின் நீர்மட்டம் வற்றிக் காணப்படுவதுடன் கால்நடைகளும் இறப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இப்பகுதியில் உள்ள குளங்கள் கடந்த பல ஆண்டுகளாக புனரமைப்பு செய்யப்படாத நிலையில் நன்னீர் ஊற்றுக்கள் அடைக்கப்பட்டுக் குளங்களின் நீர் வற்றிக் காணப்படுகின்றது.

குறிப்பாக வல்லிபுரம் பகுதி, துன்னாலைப் பகுதி ஆகிய பிரதேசங்களில் கால்நடைகள் நீர்நிலைகளை நாடி வருவது காணக்கூடியதாக உள்ளது. சில இடங்களில் நீர் இன்றி பல கால்நடைகள் இறந்துள்ளன. எனவே கால்நடைகளைப் பாதுகாக்கும் வகையில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர். (109)

## வீதிப்புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

(சுன்னாகம்)

மாங்குளத்தில் இருந்து வெள்ளாம் குளம் வரையிலான வீதிப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

கிரவல் கொண்டு அமைக்கப்பட்டிருந்த இவ்வீதி தற்போது காப்பெற் வீதியாக மாற்றப்படும் முதற்கட்ட வேலை மாங்குளம் சந்தியில் இருந்து மூன்று முறிப்பு சந்திவரையான மூன்று கிலோமீற்றர் நீளமான பகுதியில் தற்போது பணி நடைபெற்று வருகின்றது. (148)

## சுனாமி எச்சரிக்கை செய்ய அதிநவீன மின் உபகரணங்கள்

(யாழ்ப்பாணம்)

மின்சாரத்தில் இயங்கவல்ல சுனாமி முன்னெச்சரிக்கை உபகரணங்கள் (sirem) யாழ். மாவட் டத்தின் மூன்று பிரதேச செயலர் பிரிவுகளுக்கு அனர்த்த முகா மைத்துவ மத்திய நிலையத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்துறை, காரைநகர் மற்றும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவுகளுக்கே இந்த உபகரணம் வழங்கப்பட்டுள்ளது. இந்த உபகரணத்தை அந்தந்தப் பிரதேச செயலர் பிரிவில் பொருத்தமான பகுதியில் பொருத்தி அனர்த்தங்களின் போது முன்னெச்சரிக்கை நடவடிக்கையை மேற்கொள்ள முடியும்.

இதேவேளை வடமராட்சி சுப்பர்மடம் பகுதியில் செயலிழந்து போயிருக்கும் சுனாமி எச்சரிக்கைக் கோபுரத்தில் பொருத்தப்பட்டிருக்கும் மின்சாரத்தில் இயங்கும் திறன்கொண்ட மின்னெச்சரிக்கைக் கருவியை அங்கிருந்து அகற்றி சூரிய மின்கலத்தில் இயங்கவல்ல முன்னெச்சரிக்கைக் கருவியைப் பொருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ். செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் ஒருமாத கால அவகாசத்தில் இந்த எச்சரிக்கைக் கோபுரம் செயற்படும் எனவும் தெரிவிக்கப்படுவதாகவும் யாழ். செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (பா)

பயத்தை உன்னிடமே வைத்துக்கொள், உன் துணிவை மட்டும் மற்றவர்களிடம் பகிர்ந்துகொள். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## உண்மையாக நடந்தால் உய்வுண்டாம்!

நாம் எமது கோரிக்கைகளையும் நியாயங்களையும் முழுக்க முழுக்க உண்மைகளின் அடிப்படையில்தான் கட்டியெழுப்பிக் கொள்கிறோமா என்று கேட்டுக் கொள்ள வேண்டியிருக்கிறது. இராணுவத்தினர் மக்களின் அன்றாட வாழ்க்கையில் தலையிடாமல் விலகிவிட வேண்டும் என்று கேட்பது நியாயமான கோரிக்கை. ஆனால் காவலரண்களை அதிகரித்து வருகிறார்கள், இரணைமடுக் குளத்தை வற்றச் செய்தார்கள் என்றெல்லாம் இட்டுக்கட்டிப் பொய்யாக குற்றச்சாட்டுகளை அடுக்கும்போது நம்பகத்தன்மையை இழந்துவிடுகிறோம். வெறும் உணர்ச்சிவசப்பட்ட கோஷங்களாகவே அவை எஞ்சிவிடுகின்றன.

சிறைச்சாலைகளில் உள்ள அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று கோருவதும், சிறைக்குள் கைதிகள் கொல்லப்படுவதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டியதும் நியாயமானது. அவசியமானது. அதற்காக கைதிகள் நடந்துகொண்ட முறையை நாம் மறைத்து இரகசியப்படுத்த வேண்டியதில்லை. அதன்மூலம் சிறையதிகாரிகளைக் கைதிகள் பணயமாகப் பிடித்துவைத்திருந்ததை ஊக்கப்படுத்துகிறோம் என்று மற்றவர்களுக்குத் தோன்றும்படி நடந்துகொள்வது நல்லதல்ல. உண்மையிலேயே சிறையிலுள்ள ஏனைய கைதிகளினதும் பாதுகாப்பின் மீதான அக்கறையிலேயே கொலைகளைக் கண்டிப்பதாக அது அமைய வேண்டும்.

பிரச்சினைகளை யதார்த்தபூர்வமாகவும் நேர்மையோடும் அணுகாமல் உணர்ச்சிநிலையில் பொய்யான எழுச்சிகளைத் தோற்றுவிப்பதால்தான் எமது மக்களையும் இளைஞர்களையும் தொடர்ந்து அவலத்துள் தள்ளிக்கொண்டிருக்கிறோம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். பொய்களின் நிழலில் பதுங்கிச்சென்று நமது தேவைகளையும் உரிமைகளையும் ஒருபோதும் பெற்றுவிட முடியாது. உண்மைத்தன்மையும் உணர்ச்சிகளில் அள்ளுப்படாத நிதானமுமே நம்மைப் போகவேண்டிய ஊருக்கு கொண்டுசேர்க்கும்.

நாம், பிரச்சினைகளை மிகையாகப் புனைந்து மிகையாக ஆவேசப்பட்டு, சுவாசிப்பதும் சாப்பிடுவதும் போலப் பொய்களில் திளைப்பதும் நமக்கு இயல்பாகிப் போயிருப்பதுதான் சோகம். பொய்களோடு பொய்களிலேயே வாழ்பவர்களுக்கு ஆரோக்கியமும் பொய்த்து ஆயுளும் குறைவாகிவிடும் என்பதை விஞ்ஞானபூர்வமாகவும் நிரூபித்துச் சொல்கிறார்கள். ஆமாம், உண்மையே பேசினால் உடலும் மனமும் ஆரோக்கியமாக இருக்கும் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள் அமெரிக்க விஞ்ஞானிகள்.

உண்மையைப் பேசி உண்மையாக வாழ்பவர்களிடம், 'மனதில் இறுக்கம் இல்லை, மகிழ்ச்சி ததும்புகிறது, உறவினர்கள் நண்பர்கள் அயலவர்களுடன் நெருக்கம் அதிகரிக்கிறது, தலைவலி எரிச்சல் மனக்குமைச்சல் எதுவுமின்றி நன்றாகத் தூங்க முடிகிறது' என்றெல்லாம் கூட பலரை ஆய்வுக்குட்படுத்திக் கண்டுபிடித்திருக்கிறார்கள். மிகைப்படுத்துவது, உணர்ச்சிவசமாகக் கதை சிருஷ்டிப்பது எல்லாம் நம் உடம்புக்கும் கூடாதாம். அவைகளை நிறுத்திவிட்டால் நாங்கள் நேர்மையாக இருக்கிறோம் என்ற திருப்தி உண்டாவதால், பிறர் பார்வையில் நாம் நம்பகத்தன்மையுள்ளவர்களாக மாறுகிறோம் என்கிறார்கள்.

அவர்களது ஆய்வில் பொய் சொல்ல அனுமதிக்கப்பட்டவர்களில் எவருக்கும் உடல்நலத்திலும் முன்னேற்றம் கிட்டவில்லை, பிறர் மத்தியிலும் மதிப்பு ஏற்படவில்லை. உடல் நலத்துக்கும் நேர்மைக்கும் உள்ள தொடர்பு குறித்த முதலாவது ஆய்வு இது. இந்த ஆய்வு மனநல மருத்துவர்களை பிரமிக்க வைத்திருக்கிறது.

நாமும் கவனத்தில் கொள்ள வேண்டிய உண்மை இது. உணர்ச்சியாவேசங்களில் மிதந்து பொய்மையில் நீந்திச் செல்லாமல், உண்மைகள் நமக்கு நல்ல வாழ்வு தரும் என்று நம்புவோம். நம்மைக் குறித்த நம்பகத்தன்மையை ஏற்படுத்திக் கொள்வதே நாம் மீட்சி பெறுவதற்கான முதல்தேவை.

- ஆசிரியர்

# தொண்டர்களுக்கு முதலுதவிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கத்தின் யாழ். கிளையினால் நடத்தப்படும் முதலுதவிப் பயிற்சி நெறிக்கான நேர்முகப்பரீட்சை அடுத்த மாதம் முதலாம் திகதி யாழ். கிளைக்காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அதற்கு முன்பாக ஆரம்ப முதலுதவிப்பயிற்சியைப் பெறவிரும்புவோர் செஞ்சிலுவைச்சங்கத்தின் யாழ்.கிளைத்தலைமையகத்தில் எதிர்வரும் 13 ஆம், 14 ஆம் திகதிகளில் காலை 8.00 மணிக்கும் மாலை 4.00 மணிக்குமிடையே பதிவு செய்து கொள்ளுமாறு கிளைத்தலைவர் பேராசிரியர் கணேசலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை இவர்களுக்கான எழுத்துப் பரீட்சையும் எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ். கிளையில் நடைபெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (பா)

# முறைகேடு நடந்தால் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

உலக உணவுத் திட்டத்தின் கீழ், விநியோகிக்கப்படும் உணவுப் பொருட்களை நியாயமான விலையில் பயனாளிகளுக்கு விற்பனை செய்யத் தவறும் பலநோக்கு கூட்டுறவுச் சங்க முகாமையாளர்களின் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நேற்றுப் பிற்பகல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புதிய ஒழுங்கமைப்பின் ஊடாக பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படும் விநியோக நடைமுறைகளில் வெற்றி பெற்றுள்ளமையினால் ஏனைய பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் இச்செயற்பாட்டினை மேற்கொள்வதற்கான நடைமுறைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

இதற்கு பல மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் அந்த நிதியினை சரியான முறையில் பயன்படுத்தி பயன்பெறுமாறும் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

## முன்னாள் முதல்வருக்கு நீதிமன்று அழைப்பாணை

(கொழும்பு)

வடமத்திய மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் பேர்ட்டி பிரேம்லால் திஸாநாயக்க மற்றும் மேலும் 13 பேரை எதிர்வரும் 22 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு அநுராதபுரம் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தேர்தல் பிரசாரங்களுக்கு அரசசொத்துக்களை துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம் சுமத்தி ஒரு குழுவினர் தாக்கல் செய்த மனுவொன்றையடுத்தே மேல்நீதிமன்றம் இந்த உத்தரவை விடுத்தது.

## கலாசார பேரவை கூட்டம்

வலி-தெற்கு பிரதேச சலாசார பேரவையின் கூட்டம் நாளை மாலை 3.00 மணிக்கு நடைபெற உள்ளது. உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலரும் கலாசார பேரவையின் தலைவருமான எம்.நந்தகோபாலன் தலைமையில் இக் கூட்டம் நடைபெற உள்ளது.

பிரதேசத்துக்கான கலாசார விழா ஒன்றை முன்னெடுப்பது பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்பட உள்ளது. (120)

## வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

(ஆனைக்கோட்டை)

வலி. தென்மேற்கு பிரதேச சபையின் அனுசரனையுடன் ஜே/134 நவாலி வடக்கு வரகு சாட்டி வீதி புனரமைப்பு செய்யப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப வேலைக்கான முதலாவது கல்லை பிரதேச சபையின் தவிசாளர் க.ஜெபநேசன் நாட்டி ஆரம்பித்து வைத்தார்.

இவருடன் உபதவிசாளர் க.சிவகுமாரன், ஈ.பி.டி.பி உறுப்பினர் எஸ்.ஜே.செல்வராசா, கௌரிகாந்தன், ஈ.பி.டி.பி மானிப்பாய் அமைப்பாளர் அன்ரன் ஜோன்சன் ஜீவா, ஈ.பி.டி.பி உறுப்பினர் அ.நடராசா ஆகியோரும் அப்பகுதி பொதுமக்களும் கலந்து கொண்டனர். (104)

## மண்ணெண்ணெய் முத்திரை விநியோகத்தில் குளறுபடி

(நயினாதீவு)

நயினாதீவு பிரதேசத்தில் மின்சார வசதியற்ற மக்களுக்கு வழங்கப்படும் சமுர்த்தி மண்ணெண்ணெய் முத்திரை மின்சார வசதியுள்ள மக்களுக்கும் வழங்கப்படுவதாக இப்பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இப்பிரதேசத்தில் மின்சார வசதிகள் இன்றி மண்ணெண்ணெய் விளக்கில் வாழ்ந்து வரும் மக்களுக்கு சமுர்த்தி மண்ணெண்ணெய் முத்திரை விநியோகம் செய்யப்படுகிறது. எனினும் இந்த முத்திரை விநியோகம் மின்சாரம் உள்ளவர்களுக்கும் வழங்கப்படுகிறது. இது எவ்வாறு வழங்கப்படுகிறது என இப்பிரதேச மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (175)

## பன்முகப்படுத்தப்பட்ட நிதி பகிர்ந்தளிப்பதில் பாரபட்சம்

(கரணவாய்)

யாழ்.மாவட்டத்திலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டில் பாகுபாடு காட்டுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவர்களினால் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நிதி ஒதுக்கப்படுகிறது. எனினும் ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரே பகுதிக்கு இரண்டு மூன்று தரம் நிதி ஒதுக்கியுள்ளார்கள். இதனால் நிதி கிடைக்காத அமைப்புக்கள், சனசமூகநிலையங்கள் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கமுடியாது உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக உண்மையாக தேவையாகவுள்ள சனசமூகநிலையங்களுக்கு நிதி ஒதுக்கவில்லை கடந்த வருடம் நிதி ஒதுக்கப்பட்ட சனசமூகநிலையங்களுக்கு இந்த வருடமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாடு பாகுபாடாக காணப்படுவதாகவும் நிதி ஒதுக்காத சனசமூகநிலையங்கள் தமது அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாதுள்ளதாக விசனம் தெரிவிக்கின்றன. (18)

## பஸ்தரிப்பிடம் இன்மையால் சிரமப்படும் பயணிகள்

(சுன்னாகம்)

கே.கே.எஸ் வீதியில் வீதி அகலிப்புப் பணிகள் நடைபெற்றபோது அகற்றப்பட்ட பஸ்தரிப்பிடங்களுக்கு பதிலாக புதிய பஸ்தரிப்பிடங்கள் அமைக்கப்படாததன் காரணமாக இவ் வீதியில் பயணம் செய்வதற்காக காத்திருக்கும் பயணிகள் கடும் வெயிலிற்கு மத்தியில் நின்று சிரமப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

மருதனார் மடம், சுன்னாகம் பொதுநூலகம், மல்லாகம், மல்லாகம் வங்களா வீதிச் சந்தி, மல்லாகம் 7 ஆம் கட்டைச் சந்தி, மல்லாகம் சந்தி, தெல்லிப்பளை 8 ஆம் கட்டைச் சந்தி, மாவிட்டபுரம் போன்ற பகுதிகளில் பயணிகள் இவ்வாறான கஷ்ரநிலைகளை எதிர்நோக்குகின்றனர். அத்துடன் உரிய வீதிக் குறியீடுகளும் காணப்படாமையினால் பொதுமக்கள், சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதும் குறிப்பிடத்தக்கது. (148)

# தோற்றுப்போன தலைமை? தொடரத்தான் வேண்டுமா

> மக்களின் வாக்குகளைப் பெற்றுப் பாராளுமன்றம் சென்ற தமிழ்த் தலைவர்கள் இன உரிமைக்குப் பின்னரே அபிவிருத்தி என்று தங்களுக்கு வசதியான ஒரு கருத்தை முன்வைத்தார்கள். அவர்கள் மக்களுக்கு இன உரிமையையும் பெற்றுக் கொடுக்கவில்லை. அபிவிருத்தியையும் பெற்றுக் கொடுக்கவில்லை. இப்போது தான் வடமாகாண மக்கள் அபிவிருத்தியைப் பார்க்கின்றார்கள்.

> அறுபத்தைந்து வருட காலமாகத் தமிழ் மக்களின் இன உரிமைப் போராட்டத்தில் சிறிதளவாவது முன்னேற்றத்தை அடைய முடியாததற்கும் தமிழ் மக்களுக்கு இழப்புகளும் அழிவுகளும் ஏற்படக்கூடிய வகையில் அவர்களைத் தவறாக வழி நடத்தியதற்கும் தமிழ் மக்களின் இருப்புக்கு அச்சுறுத்தலான பாதிப்புக் களைத் தவிர்ப்பதற்குப் பயனுறு வகையில் செயற்படாததற்கும் இத்தலைவர்கள் பொறுப்பேற்றுத் தங்களைத் தோற்றுப் போன தலைமை எனப் பிரகடனப்படுத்தி ஒதுங்குவது தான் அரசியல் நாகரிகம்.

**- சங்கர சிவன்**

சந்தேகத்தின் பேரில் சிறை வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்என்ற கோரிக்கை வலுவடைந்து வருகின்றது. தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் சிவில் சமூகத்தினரும் மாத்திரமின்றி சிங்கள முற்போக்கு சக்திகளும் இக்கோரிக்கையை வலியுறுத்துகின்றனர். சிறையில் தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இருவர் இறந்துவிட்டதால் மற்றவர்களுக்கும் அதே கதி ஏற்படலாம் என்ற அச்சமும் தெரிவிக்கப்படுகின்றது. ஒன்றில் இக்கைதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும். அல்லது அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கை மிகவும் நியாயமானது.

இக்கைதிகளின் எதிர்காலம் பற்றி அக்கறை செலுத்துபவர்கள் தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றி அக்கறை செலுத்துவதாக இல்லை. தமிழ் மக்கள் காலத்துக்குக் காலம் வெவ்வேறு உடனடிப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்ககின்ற போதிலும் அவர்களின் பிரதான பிரச்சினையாக இனப்பிரச்சினையே உள்ளது.இனப்பிரச்சினைக்குத் தீர்வு இல்லாததாலேயே காலத்துக்குக் காலம் வெவ்வேறு உடனடிப் பிரச்சினைகள் தலைதூக்குகின்றன. சிறையிலுள்ள இளைஞர்கள் எப்போது விடுவிக்கப்படுவார்கள் என்ற கேள்வியைப் போலவே இனப்பிரச்சினைக்கு எப்போது தீர்வு கிடைக்கும் என்ற கேள்வியைத் தமிழ் மக்கள் கேட்கின்றனர். எப்போது விடுதலை கிடைக்கும் என்ற ஏக்கத்தோடு அவர்கள் சிறையில் இருக்கின்றார்கள். எப்போது தீர்வு கிடைக்கும் என்ற ஏக்கத்தோடு தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள்.

வருடா வருடம் தமிழ் மக்களின் சனத் தொகை குறைகின்றது. மொத்த சனத் தொகையில் அவர்களின் விகிதாசாரம் வீழ்ச்சி அடைகின்றது.ஆயுதப் போராட்டத்தின் விளைவாக இடம்பெற்ற உயிரிழப்புகளும் புலம் பெயர்தலும் இதற்கான காரணங்கள். மறுபுறத்தில், தமிழ் பேசும் மக்களின் வரலாற்று ரீதியான வாழ்புலம் எனக் கருதப்படும் பிரதேசம் சுருங்கி வருகின்றது. அரசாங்கம் மேற்கொள்ளும் குடியேற்றங்களும் அரசாங்க ஆதரவு பெற்ற தனியார் .குடியேற்றங்களும் இதற்குக் காரணம். இவை எல்லாவற்றையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும் போது, சிறையிலுள்ள இளைஞர்களுக்கு என்ன நடக்கப்போகின்றது என்ற கேள்வி எழுவதைப் போல, தமிழ் மக்களுக்கு என்ன நடக்கப்போகின்றது என்ற கேள்வியை எழுப்ப வேண்டியுள்ளது.

இனப்பிரச்சினையைப் போலவே அபிவிருத்தியின்மையும் தமிழ் மக்கள் முகங்கொடுத்த இன்னொரு பாரிய பிரச்சினை. இலங்கையின் ஏனைய மாகாணங்களில் பல்துறை அபிவிருத்திச் செயற்பாடுகள் இடம்பெற்ற அதேவேளை, வட மாகாணத்தில் அபிவிருத்தி என்ற பேச்சுக்கே இடமிருக்கவில்லை. மக்களின் வாக்குகளைப் பெற்றுப் பாராளுமன்றம் சென்ற தமிழ் தலைவர்கள் இன உரிமைக்குப் பின்னரே அபிவிருத்தி என்று தங்களுக்கு வசதியான ஒரு கருத்தை முன்வைத்தார்கள். அவர்கள் மக்களுக்கு இன உரிமையையும் பெற்றுக் கொடுக்கவில்லை. அபிவிருத்தியையும் பெற்றுக் கொடுக்கவில்லை. இப்போது தான் வடமாகாண மக்கள் அபிவிருத்தியைப் பார்க்கின்றார்கள். தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அபிவிருத்தியும் தேவை. இன உரிமையும் தேவை. அபிவிருத்திக்காக இன உரிமையையோ இன உரிமைக்காக அபிவிருத்தியையோ பின்தள்ள முடியாது. இன உரிமை பற்றிப் பேசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் வடக்கில் இடம்பெறுகின்ற அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குத் துளியளவாவது பங்களிப்புச் செய்யவில்லை என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

அபிவிருத்தியில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவுக்கு முன்னேற்றம் காணப்படுகின்ற போதிலும் அதேயளவு முக்கியத்துவம் வாய்ந்த இன உரிமையைப் பொறுத்த வரையில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. இன உரிமைக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் எனக் கூறி அபிவிருத்தியைப் புறக்கணித்த தமிழ்த் தலைவர்கள் என்ன செய்தார்கள் என்ற கேள்வி இங்கு எழுகின்றது. குறைந்த பட்சம் வாழ்புல இழப்பு, சனத் தொகை வீழ்ச்சி போன்ற பிரதான பாதிப்புகளைத் தவிர்ப்பதற்காகவாவது இவர்கள் எதுவும் செய்யவில்லை.

இனப்பிரச்சினை தீர்வின்றித் தொடர்வதால் தமிழ் மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகின்றது என்பதை மேலே பார்த்தோம். இதற்கு யார் பொறுப்பு என்ற கேள்வி எவ்வளவு முக்கியமானதோ அதே அளவுக்கு அறுபத்தைந்து வருடங்களாகத் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய தலைவர்கள் என்ன செய்தார்கள் என்ற கேள்வியும் முக்கியமானது. தமிழ் மக்களின் தலைமை காலத்துக்குக் காலம் வெவ்வேறு பெயர்களில் அரங்குக்கு வந்தபோதிலும் எஸ்.ஜே.வீ. செல்வநாயகம், ஜீ.ஜீ. பொன்னம்பலம் போன்ற தலைவர்களின் வழிவந்தவர்களே இன்றையதலைவர்களாக இருப்பதால் அறுபத்தைந்து வருட கால செயற்பாட்டுக்கும் இவர்கள் பொறுப்புக்கூற வேண்டியவர்களாக உள்ளனர். அறுபத்தைந்து வருட காலமாகத் தமிழ் மக்களின் இன உரிமைப் போராட்டத்தில் சிறிதளவாவது முன்னேற்றத்தை அடைய முடியாததற்கும் தமிழ் மக்களுக்கு இழப்புகளும் அழிவுகளும் ஏற்படக்கூடிய வகையில் அவர்களைத் தவறாக வழிநடத்தியதற்கும் தமிழ் மக்களின் இருப்புக்கு அச்சுறுத்தலான பாதிப்புக்களைத் தவிர்ப்பதற்குப் பயனுறு வகையில் செயற்படாததற்கும் இத்தலைவர்கள் பொறுப்பேற்றுத் தங்களைத் தோற்றுப்போன தலைமை எனப் பிரகடனப்படுத்தி ஒதுங்குவது தான் அரசியல் நாகரிகம்.

அந்த நாகரித்தை இந்தத் தலைவர்களிடம் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் இவர்களுக்கு இனப்பிரச்சினையின் தீவிர்விலும் பார்க்கத் தங்கள் தலைமையைத் தக்கவைக்க வேண்டும் என்பதிலேயே கூடுதலான அக்கறை.

தமிழ் மக்கள் மத்தியிலும் வர்க்க வேறுபாடு உண்டு. ஆதிக்க சக்திகளும் அவற்றினால் பாதிப்புக்கு உள்ளாகும் அடிமட்ட மக்களும் உள்ளனர். இவ்விரு பிரிவினருக்குமிடையே பகை முரண்பாட்டுத் தன்மை கொண்ட பல பிரச்சினைகள் இருக்கின்றன. இன்றைய தமிழ்த் தலைமை பெரும்பாலும் ஆதிக்க சக்திகளின் பக்கம் சார்ந்தது. தங்கள் பக்கச்சார்பை வெளிப்படுத்தாமல் தலைமையைப் பேணுவதற்கு இனப்பிரச்சினை இவர்களுக்குக் கைகொடுக்கின்றது. இனப்பிரச்சினை இல்லையென்றால் ஆதிக்க சக்திகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டு அடிமட்ட மக்களின் பகையைத் தேட நேர்ந்துவிடும். எனவேதான் இனப்பிரச்சினை தீராமலிருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் இவர்கள் தொடர்ச்சியாகச் செயற்படுகின்றார்கள்.

இனப்பிரச்சினைக்கு ஒரே தடவையில் முழுமையான தீர்வைஅடைவதென்பது இன்றைய நிலையில் சாத்தியமற்றது. கிடைக்கும் அதிகாரங்களைப் பெற்றுக் கொண்டு முழுமையான தீர்வுக்காகத் தொடர்ந்து முயற்சிப்பதுதான் யதார்த்தபூர்வமான அணுகுமுறை. தமிழ் மக்களுக்கு அவர்களின் இன உரிமையைப் பெற்றுக் கொடுப்பதில் அக்கறை உள்ளவர்கள் இந்த அணுகுமுறையையே பின்பற்ற வேண்டும். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்த அரைகுறைத் தீர்வை ஏற்க முடியாது என்று இவர்கள் கூறுவது தீர்வைத் தவிர்ப்பதற்கான தந்திரோபாயம். எந்தத் தீர்வை முன்வைத்தாலும் அதை நிராகரிப்பதை வழக்கமாக்கிக் கொண்டார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாண சபையை நிராகரித்தார்கள். அதனிலும் பார்க்கக் கூடுதலான அதிகாரங்களைக் கொண்டதும் ஒற்றையாட்சியை நீக்குவதும் சமஷ்டித் தன்மை உடையதுமான அதிகாரப் பகிர்வு ஆலோசனைகளையும் நிராகரித்தார்கள். இப்போது கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்றார்கள். அரசாங்கத்துக்குப் பாடம் கற்பிக்கவும், தமிழ் மக்கள் தங்களுக்குப் பின்னால் நிற்கின்றார்கள் என்பதைச் சர்வதேச சமூகத்துக்குக் காட்டுவதற்காகவும் போட்டியிடுவதாகக் கூறுகின்றார்களேயொழிய மாகாண சபையைக் கைப்பற்றி அதை அடிப்படையாகக் கொண்டு இனப்பிரச்சினையின் தீர்வுக்கு முயற்சிக்கப் போவதாகக் கூற இவர்கள் தயாராக இல்லை.

, முன்வைக்கப்பட்ட தீர்வுகளையெல்லாம் போதுமான அதிகாரங்கள் இல்லை எனக் கூறி நிராகரித்தவர்கள் அத்தீர்வுகளுக்குத் தேவையான அதிகாரங்களைப் பெறுவதற்கான போராட்டத்தை அல்லது கூடுதலான அதிகாரங்களுடன் வேறொரு தீர்வைப் பெறுவதற்கான போராட்டத்தை முன்னெடுத்திருக்க வேண்டும். அப்படியான எந்தப் போராட்டத்தையும் இத்தலைவர்கள் முன்னெடுக்கவில்லை. நிராகரிப்பதுதான் தங்கள் வேலை என்றவாறு நடந்து கொண்டார்கள். நிராகரித்ததை நியாயப்படுத்த முயற்சித்தார்களேயொழியப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க ஆக்கபூர்வமான எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் நிராகரித்ததன் பாதகமான விளைவுகள் பற்றிப் பலரும் பேசத் தொடங்கியதும் இப்போது புதிய கோஷங்களை முன்வைக்கின்றார்கள். சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் வரை பொறுமை காக்க வேண்டும் என்கின்றனர் ஒரு சாரார். தமிழ்த் தேசியத்தையும் சுயநிர்ணய உரிமையையும் அரசாங்கம் அங்கீகரித்த பின்னரே தீர்வு பற்றிப் பேசலாம் என்கின்றனர் இன்னொரு சாரார். இரண்டும் இனப்பிரச்சினையின் தீர்வைஇயன்றளவு தள்ளிப் போடுவதற்கான முயற்சி. இவற்றின் போலித் தன்மை பற்றி இனி வரும் கட்டுரைகளில் பார்ப்போம். அறுபத்தைந்து வருடங்களாக எதையுமே சாதிக்காமல் தோற்றுப்போன தலைமை இனியும் தொடரவேண்டுமா என்ற கேள்வியுடன் இக்கட்டுரையை முடிப்போம்.

# வறட்சி நீடித்துச் சென்றால் மின் உற்பத்தி முடங்கும் அபாயம்

வறட்சியான காலநிலை காரணமாக மின்னுற்பத்தி துறை நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக மின்சக்தி வலுசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க நாடாளுமன்றத்தில் கூறினார்.

வறட்சியான காலநிலை இன்னும் சில நாட்களுக்கு தொடர்ந்தால் விக்டோரியா மற்றும் ரந்தெனிகல மின்னுற்பத்தி விநியோகம் முடங்கக்கூடும் என அவர் தெரிவித்தார்.

விக்டோரியா நீர்த்தேக்கத்திலிருந்து 7 சதவீதமும் ரந்தெனிகலவிலிருந்து 19 சதவீதமும், சமனவெவயிலிருந்து 14 சதவீதமும் தற்போது மின்னுற்பத்தி இடம்பெறுவதாகவும் அவர் கூறினார்.

நாட்டில் நீர்சக்தி மூலம் 300 மெகாவாற் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. எனினும் இது போதுமானதல்ல. இரவு நேரங்களில் 2000 மெகாவாற் மின்சாரம் தேவைப்படுகிறது என அவர் தெரிவித்தார்.

அனல் மின்சாரத் திட்டத்தை உரிய நேரத்தில் ஆரம்பிக்கத் தவறியமை மின்சார நெருக்கடிக்கு மற்றொரு காரணம் என அமைச்சர் கூறினார். 1980 களில் தெற்கில் இத்தகைய மின்னுற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கு முயற்சிக்கப் பட்டபோது பல்வேறு சக்திகள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தன என்பதையும் அவர் நினைவு கூர்ந்தார்.

இந்த மின்னுற்பத்தி நிலையம் 1990 களிலிருந்து இயக்கப்படுவது அவசியமாக இருந்தது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் காலத்தில் இத்திட்டம் முன்னெடுக்கப்பட விருந்தபோதிலும் எதிர்ப்புகள் காரணமாக அத்திட்டம் கைவிடப்பட்டது என அமைச்சர் கூறினார். அனல் மின்சார நிலையத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்களே தற்போதைய மின்சார நெருக்கடிக்கு பொறுப்புக்கூற வேண்டும் என முன்னாள ஜனாதிபதி தெரிவித்ததாகவும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறினார்.

# மனிதாபிமான பணிகளுக்கு நிதி வழங்குகிறது ஐ.நா.

## 55 மில்லியன் அமெ.டொலர் இலங்கைக்கு

ஐக்கிய நாடுகள் சபையின் அவசர நிதியத்தின் கீழ் இலங்கைக்கு விசேட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் கீழ் 55 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக, ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்கள் மற்றும் அவசர உதவிகள் நிதியத்தின் இணைப்பாளர் வலாரி ஆமோஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை, சூடான், கொலம்பியா, கெமரூன் உள்ளிட்ட நாடுகளுக்கு இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிக அளவான மக்களுக்கு தேவை என்ற நிலையில் இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# புலிகளின் அஸ்தமனம் தெற்காசியாவுக்கு வெற்றி

– அமெரிக்க பேராசிரியர் சொல்கிறார்.

(கொழும்பு)

புலிகள் அழிக்கப்பட்டமை தெற்காசியாவுக்கு பெரும் வெற்றியாக கருதப்படக்கூடிய விடயம் என்று அமெரிக்க பேராசிரியர் எரிக் லெக்டினஸ்கீ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற பாதுகாப்புக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக இலங்கை அரசாங்கம் பின்பற்றிய அணுகுமுறை பாரட்டுக்குரியது என அமெரிக்க பேராசிரியர் எரிக் லெக்னெஸ்கீ தெரிவித்துள்ளார்.

ஆயிரக் கணக்கான தமிழீழ விடுதலைப் புலிப்போராளிகளுக்கு அரசாங்கம் புனர்வாழ்வு அளித்துள்ளது பற்றி பயங்கரவாத அமைப்புக்கள் தொடர்பில் பல ஆண்டுகளாக ஆராய்ந்து வருகின்றேன்.

புலிகள் இல்லாதொழிக்கப்பட்டமை தெற்காசியாவிற்கே வெற்றியாகக் கருதப்பட வேண்டும்.மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கக் கூடிய வாய்ப்புக்கள் முடக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப் பிட்டுள்ளார்.

# விவசாய ஓய்வூதியம் தடையின்றிக் கிடைக்கும்



(கொழும்பு)

விவசாயிகளுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவை ஆகஸ்ட 17 ஆம் திகதி தொடக்கம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என நிதி மற்றும் நிதித்திட்டமிடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

பிரதேச செயலகங்கள் ஊடாக குறித்த கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாய ஓய்வூதியம் பெற தகுதிபெற்று அதனைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல்களை எதிர்நோக்கி வந்த விவசாயிகளுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மேலும் 2012 பெரும்போக நெற்செய்கையில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு அறிவித்துள்ளது.

நிதித் திட்டமிடல் அமைச்சு மற்றும் கமநல சேவைகள் அமைச்சு ஆகியன இணைந்து இந்நடவடிக்கையில் ஈடுபடவுள்ளன.

# மனித உரிமை நியமங்களுக்கு ஏற்ப சாட்சிகளைப் பாதுகாக்க புதிய சட்டம்

அடுத்த மூன்று மாதங்களுக்குள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ள சாட்சி பாதுகாப்பு சட்டமூலத்தை தயாரிக்கும் வேலைகளை அரசாங்கம் துரிதப்படுத்தியுள்ளதாக அதிகாரிகள் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

சர்வதேச மனித உரிமைகள் நியமங்கள், தராதரங்களுக்கு அமைய இலங்கையில் இவ்வாறான சட்டத்தை கொண்டுவரும்படி சர்வதேச நிறுவனங்கள் இலங்கையிடம் கேட்டிருந்தன. இந்த சட்டமூலத்தை சட்டவரைஞர் திணைக்களம் தயாரித்து வருகிறது என சட்டமா அதிபர் பாலித பெர்னாண்டோ தெரிவித்தார். சட்டமா அதிபர் இதை அங்கீகரித்ததும் இச்சட்டமூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என அவர் கூறினார். ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமும் இச்சட்டமூலம் குறித்து தெரிவித்திருந்தார்.

இந்த சட்டமூலம் சர்வதேச மனித உரிமைகள் நியமங்கள் மற்றும் நடைமுறைகளுக்கு அமைவாக இருப்பதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டுமென நீதியமைச்சருக்கு சர்வதேச ஜூரிகள் ஆணைக்குழு கடந்த ஏப்ரல் மாதத்தில் எழுதிய கடிதத்தில் கோரியிருந்தது.

# சமரசப் பேச்சு தோல்வி போராட்டம் தொடர வாய்ப்பு

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்க சம்மேளன பிரதிநிதிகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஜனாதிபதி செயலாளர் லலித் வீர துங்க ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற மற்றுமொரு பேச்சுவார்த்தையும் தோல்வியடைந்துள்ளது.

இப்பேச்சுவார்த்தை நேற்று முன்தினம் இரவு 3 மணித்தியாலங்கள் இடம்பெற்றுள்ளது.

இதன்போது அரசாங்கம் சார்பில் விசேட ஆவணம் ஒன்று தங்களிடம் சமர்பிக்கப் பட்டதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்க சம்மேளனத்தின் செயலாளர் கலாநிதி டெரன்ஸ் மதுஜித் தெரிவித்தார்.

அந்த ஆவணத்தில் இன்றைய நிலையில் எவ்வித சம்பள உயர்வும் வழங்க முடியாதெனவும் ஆனால் கல்விக்காக ஒதுக்கப்படும் நிதித் தொகையை அதிகரிக்க முடியும் எனவும் கூறப பட்டுள்ளதென அவர் குறிப்பிட்டார்.

எனினும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களை விசேட பிரிவினராக மதித்து அரசாங்கம் செயற்படும் என அந்த ஆவணத்தில் கூறப்பட்டுள்ளதாக கலாநிதி டெரன்ஸ் மதுஜித் தெரிவித்தார்.

தமது சம்மேளனத்தின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு முடிவெடுக்கும்வரை அரசின் வாக்குறுதிகளை நம்ப முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசின் நிலைப்பாடு குறித்து தமது உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்தி எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அதுவரை தொழிற்சங்க நடவடிக்கை தொடரும் எனவும் கலாநிதி டெரன்ஸ் மதுஜித் தெரிவித்தார்.

# தேர்தல் வன்முறை இதுவரை 11பேர் கைது

(கொழும்பு)

மூன்று மாகாண சபைகளுக்குத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தேர்தல் சட்டங்களை மீறிய 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டங்கள் மீறப்பட்டமை குறித்து இதுவரை 14 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதென அவர் குறிப்பிட்டார்.

இதில் அதிகமானவை சட்டவிரோத பிரச்சாரம் மற்றும் அச்சுறுத்தல் தொடர்பானவை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இசை மட்டும் போதும் விரும்பிய மொழியில் பாடலாம்

யோகராஜன் எம்.பி விசித்திர யோசனை

(கொழும்பு)

தேசிய கீதம் தொடர்பான இசை மட்டும் இசைக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தெரிவித்துள்ளார்

தேசிய நிகழ்வுகளின் போது தேசியகீத இசை மட்டும் இசைக்கப்பட வேண்டும். இவ்வாறு இசை மட்டும் ஒலித்தால் விரும்பியவர்கள் தங்களது மொழியில் தேசிய கீதத்தை பாட முடியும்.

இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோரிக்கை விடுக்கின்றேன். எமது இனம் புள்ளிவிபரங்களில் மட்டும் குறிப்பிடப்படக் கூடாது. ஏனைய எல்லா விடயங்க ளின் போதும் எமது இனத்திற்கும் உரிய முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் என ஆர். யோகராஜன் தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# சூழல் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தம் எதிர்ப்புக்கு மத்தியிலும் அரசு முயற்சி

(கொழும்பு)

வனங்கள் மற்றும் அவை சார் உயிரினங்களைப் பாதுகாப்பதற்கான சட்டத்தில் திருத்தத்தை மேற்கொள்ள அரசாங்கம் முயற்சிகளை எடுப்பதாகக் கூறி, அதனை பல அமைப்புக்கள் எதிர்த்துள்ளன.

இலங்கை அரசாங்கத்தின் ஆளும் கட்சியில் இடம்பெற்றிருக்கும் ஹெல உறுமய போன்ற சில கட்சிகள் அதனை எதிர்ப்பதாக ஊடகங்களில் செய்திகள் வந்திருக்கும் நிலையில், சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் அரசாங்கத்தின் அந்த முயற்சிக்கு எதிராக நடவடிக்கைகளை எடுப்பதாக சுற்றுச்சூழல் செயற்பாட்டாளரான எஸ்.விஸ்வலிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கையை பொறுத்தவரை அனைத்து காடுகளைச் சுற்றியும் ஒரு மைல் சுற்றளவுக்கு பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டு, அங்கு அபிவிருத்தி பணிகளுக்கு இந்த சுற்றுசூழல் பாதுகாப்பு சட்டத்தின் மூலம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால், ஏற்கனவே அரசியல் பின்பலத்துடன் சில நிறுவனங்கள் அங்கு அத்துமீறி நுழைந்திருப்பதுடன் அங்கு உல்லாசப் பயணிகளுக்கான விடுதிகளையும் நிர்மாணித்துள்ளன என்று கூறுகிறார் விஸ்வலிங்கம்.

அதேவேளை அவர்களது அத்து மீறலை நியாயப்படுத்தும் வகையில் அரசாங்கமும், ஒரு மைல் தடைப் பிரதேசத்தை நீக்கும் வகையில் சட்டத்தில் மாற்றம் கொண்டுவர விளைவதாகவும் அவர் கூறினார்.

வனப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட அத்து மீறல்கள் காரணமாக உயிரியற் தொகுதியின் சமநிலையில் பல பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும், யானைகளுக்கும் மனிதனுக்கும் இடையிலான முரண்பாடுகள் போன்ற பல பிரச்சினைகளுக்கு இதுவே அடிப்படையான காரணம் என்றும் விஸ்வலிங்கம் கூறுகிறார்.


தம்ரோ
இப்பொழுது
யாழ்ப்பாணத்தில்
DAISY SOFA 3+2
Rs. 29,900
3 DOOR WARDROBE
Rs. 19,900
DRESSER WITH MIRROR
Rs. 8,900
72"X48" BED Rs. 12,900
INNOVEX Lowest Prices Guaranteed
FREE 4 3D GLASSES
19" LED TV
USB MOVIE , HDMI, PC INPUT, HD
Rs. 19,900
32" LED TV
USB MOVIE , HDMI, PC INPUT, HD
Rs. 44,900
3D
42" LED TV
FULL HD , USB MOVIE , HDMI
Rs. 139,000
Pioneer
World's Best Sound
CAR AUDIO FULL SET
Rs. 18,900
MICROWAVE OVEN
• Touch Pad
• LED Display
• Multiple Power Levels
• Face Child Lock
DVD HOME THEATRE SYSTEM
Rs. 49,900
DVD PLAYER
Rs. 5,700
HAIR DRYER
STEAM IRON
SANDWICH MAKER
ஆரம்ப கட்டணமில்லாத, வட்டியில்லாத, இலகு கொடுப்பனவு முறைக்கு
இல.166, பலாலி வீதி, யாழ்ப்பாணம். ☎ 021 2 224 874
தம்ரோ

# நான் இப்பொழுது ஜாம்பவான்

(லண்டன்)

இப்போதுள்ள தடகள வீரர்களில் சிறந்த வீரர் நான் தான். இனி நிரூபிப்பதற்கு என்னிடம் எதுவும் இல்லை என உலகின் வேகமான மனிதன் என வர்ணிக்கப்படும் உசைன் போல்ட் தெரிவித்தார்.

இந்த ஒரு பதக்கமும் எனக்கு அவசியமாக இருந்தது. இந்த வெற்றியின் மூலம் தடகளத்தில் இப்போது நான் ஒரு ஜாம்பவான் ஆகிவிட்டேன். இதே போல் இப்போதுள்ள வீரர்களில் சிறந்த வீரரும் நான் தான். இனி நிரூபிப்பதற்கு என்னிடம் எதுவும் இல்லை. சிறந்த ஓட்டப்பந்தய வீரர் என்பதை இந்த உலகிற்கு காட்டிவிட்டேன். அந்த மகிழ்ச்சியை இப்போது அனுபவித்து வருகிறேன். நான் எனது அனைத்து இலக்குகளையும் வெற்றிகரமாக அடைந்து விட்டேன். அடுத்து இலக்கு நிர்ணயிப்பது குறித்து உட்கார்ந்து, நிதானமாக யோசிக்க வேண்டும்.

இப்போதைக்கு ஓய்வு பெறும் எண்ணம் இல்லை. தடகளத்தை நான் மிகவும் நேசிக்கிறேன். இந்த விளையாட்டின் மூலம் நான் அனைத்தும் சாதிக்க முடிந்தது. இது தான் எனக்கு ஏராளமான இரசிகர்களைப் பெற்றுத்தந்தது. 30 வயதை எட்டும் போது, ஓய்வு பெறுவது குறித்து சிந்திக்கலாம் என்று நினைக்கிறேன். தடகளம் எப்போதும் ரொம்ப கடினமானது. சக நாட்டவர் யோஹன் பிளேக் இப்போது 19.4 வினாடிகளில் இலக்கை எட்டுகிறார். அடுத்த 4 ஆண்டுகளில் அவர் இன்னும் வேகமாக ஓடுவார். அவர் அதிவேகமாக ஓடத் தொடங்கும் போது, நான் போட்டியில் இருந்து விலக விரும்புகிறேன்.

2016ஆம் ஆண்டு றியோடிஜெனீரோ ஒலிம்பிக்கில் பங்கேற்பது என்பது எனக்கு ரொம்ப கடினமான இலக்காகும். பிளேக், வார்ரென் வெய்ர் இருவருக்கும் தற்போது 22 வயது ஆகிறது. அடுத்த ஒலிம்பிக்கின் போது அவர்களது வயது 26 ஆக இருக்கும். அதே சமயம் எனது வயது 30 ஆக உயர்ந்து விடும்.




வாழ்க்கையில் எல்லாமே நடக்கக்கூடிய ஒன்று தான் என்றாலும், என்னை பொறுத்தவரை அடுத்த ஒலிம்பிக் என்பது கடினமாக இருக்கப் போகிறது எனத் தெரிவித்தார்.

## இணையத்திலும் சாதனை

ஜமேக்கா வீரர் உசேன் போல்ட் 200 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் தங்கம் வென்ற சாதனை பற்றி, டுவிட்டர் இணையதளத்தில் நிமிடத்துக்கு 80 ஆயிரம் தகவல்கள் வீதம் பதிவாகியதாம். உலகம் முழுவதும் தடகள இரசிகர்கள் இந்த பந்தயத்தின் முடிவை ஆவலோடு எதிர்பார்த்ததே இதற்குக் காரணம். இதையடுத்து, டுவிட்டர் இணையதளத்தில் லிவிங் லெஜண்ட் என்ற தலைப்பில் இந்த சாதனையை தனியாகப் பதிவு செய்துள்ளனர்.

## என்னால் முடியும் எல்லாம்



இலங்கை எல்லே சங்கம் மற்றும் கால்டன் ஸ்போட்ஸ் நெட்வர்க் நிறுவனம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த 2012ஆம் ஆண்டுக்கான தேசிய எல்லே போட்டியின் இறுதிப் போட்டி நேற்று வெள்ளிக்கிழமை, கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இறுதிப் போட்டியினைப் பார்வையிடுவதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே உள்ளிட்ட பலர் சென்றிருந்தனர். இதன்போது, ஜனாதிபதி எல்லே விளையாடிப் பார்ப்பதைக் காணலாம்.

## அமெரிக்கா சாதனையுடன் தங்கம்




(லண்டன்)

உலகின் மிகப்பெரிய விளையாட்டு திருவிழாவான ஒலிம்பிக் போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது. நேற்று நள்ளிரவு நடந்த பெண்களுக்கான 4ஓ100 மீற்றர் தொடர் ஓட்டத்தில் அமெரிக்க பெண்கள் அணி புதிய உலக சாதனை படைத்தது.

கேர்மிலா ஜெட்டர், அலைசன் பெலிக்ஸ், டினா மேடிசன், பினாக்கா நைட் ஆகியோரை அடங்கிய அமெரிக்க அணி பந்தய தூரத்தை 40.82 வினாடிகளில் கடந்து புதிய சாதனை படைத்து தங்கம் வென்றது. இதற்கு முன்பு 1985ஆம் ஆண்டு கிழக்கு ஜெர்மனி அணி 41.37 வினாடிகளில் கடந்ததே சாதனையாக இருந்தது. 27 ஆண்டு கால சாதனையை தற்போது அமெரிக்க அணி முறியடித்து புதிய உலக சாதனை படைத்தது. சாதனை படைத்த அமெரிக்க அணியில் உள்ள ஜெட்டர் 100 மீற்றர் ஓட்டத்தில் வெள்ளியும், 200 மீற்றர் ஓட்டத்தில் வெண்கல பதக்கமும் பெற்றவர் ஆவார். அலைசன் பெலிக்ஸ் 200 மீற்றரில் தங்கம் வென்று இருந்தார். இதனால் அவருக்கு இது 2-வது தங்கமாகும்.

ஜமேக்கா அணி 41.41 வினாடிகளில் கடந்து வெள்ளிப்பதக்கமும், உக்ரைன் அணி 42.04 வினாடிகளில் கடந்து வெண் கலப்பதக்கம் பெற்றது. 4ஓ400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் தங்கம் வெல்லும் என்று எதிர்பார்க்கப்பட்ட அமெரிக்க ஆண்கள் அணி 2-வது இடத்தையே பிடித்து ஏமாற்றம் அளித்தது. பகாமஸ் அணி 2 நிமிடம் 56.72 வினாடியில் கடந்து தங்கம் வென்றது. அமெரிக்க அணி 2 நிமிடம் 57.05 வினாடியில் கடந்து வெள்ளிப்பதக்கமும், டிரினிடாட் அணி 2 நிமிடம் 59.40 வினாடியில் கடந்து வெண்கல பதக்கமும் பெற்றன.

## பெண்கள் ஹொக்கி நெதர்லாந்து தங்கம்

லண்டன் ஒலிம்பிக்கின்பெண்கள் ஹொக்கி போட்டியில் நெதர்லாந்து அணி தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது.

நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் நெதர்லாந்து அணி வீராங்கனைகள் ஆர்ஜென்ரீனா அணி வீராங்கனைகளுடன் மோதினர்.

இதில் நெதர்லாந்துவீராங்கனைகள் 2-0 என்ற புள்ளி கணக்கில் ஆர்ஜென்ரீனா வீராங்கனைகளை வீழ்த்தி தங்கப்பதக்கத்தைத் தட்டிச் சென்றனர். தோல்வியுற்றஆர்ஜென்ரீனா அணிக்குவெள்ளிப் பதக்கம் பரி சளிக்கப்பட்டது.

இதே பிரிவில் வெண்கலப் பதக்கத்திற்காக நடைபெற்ற போட்டியில் நியூசிலாந்து வீராங்கனைகள் இங்கிலாந்து வீராங்கனைகளுடன் மோதினர். இதில் இங்கிலாந்து வீராங்கனைகள் 3 - 1 என்ற கணக்கில் நியூசிலாந்து வீராங்கனைகளை வீழ்த்தி வெண்கலப் பதக்கத்தை கையகப்படுத்தினர்.



## பதக்கம் வென்ற தந்தையின் சாம்பலை மைதானத்தில் தூவிய பெண்

(லண்டன்)

அவுஸ்ரேலிய தடகள வீரர் ஜார்ஜ் அவெரி. இவர் 1948ஆம் ஆண்டு லண்டனில் நடந்த ஒலிம்பிக் போட்டியின் ஆண்கள் ஹாப் ஸ்கிப் அண்ட் ஜம்ப் பிரிவில் (இப்போது ட்ரிபிள் ஜம்ப்) வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார். 2012இல் லண்டனில் மீண்டும் ஒலிம்பிக் போட்டி நடக்கப் போகிறது என்பதை அறிந்ததும், நேரில் சென்று பார்க்க வேண்டும் என்ற ஆசையுடன் இருந்த அவெரி, துரதிர்ஷ்டவசமாக 2006ஆம் ஆண்டு தனது 81வது வயதில் இறந்துவிட்டார்.

இந்த நிலையில், அவரது மகள் ராபின் லின் தனது குடும்பத்தினருடன் லண்டன் வந்து போட்டிகளைக் கண்டு இரசித்ததுடன், தனது தந்தையின் சாம்பலை ஒலிம்பிக் தடகள மைதானத்தில் தூவினார். இது குறித்து ராபின் லின் கூறுகையில், எனது தந்தை லண்டன் ஒலிம்பிக் போட்டியை நேரில் பார்க்க வேண்டும் என ஆசைப்பட்டார். ஆனால் துர திர்ஷ்ட வசமாக அவர் இறந்துவிட்டார். களத்தில் சாம்பலைத் தூவியதன் மூலம் அவரது கடைசி ஆசையை நிறைவேற்றியதாக திருப்தி அடைகிறேன்.



## மீண்டும் அணியில் இடம் உணர்ச்சிபூர்வமான நாள்

(குர்கயான்)

இந்திய அணியில் மீண்டும் இடம்பிடித்தது எனது வாழ்க்கையில் உணர்ச்சிபூர்வமான நாள். இந்த மகிழ்ச்சியை வானில் மிதப்பதாக உணர்கின்றேன் என' இந்திய அணியின் அதிரடி வீரர் யுவராஜ்சிங் தெரிவித்தார்.

அணியில் மீண்டும் இடம் பெற்றிருப்பதை அறிமுக ஆட்டத்தை ஆடப்போவதை போல் உணருகிறேன். ருவென்ரி 20 போட்டியே நான் அணிக்கு திரும்ப சிறப்பானது என்று நான் எப்பொழுதும் நம்பினேன். எனது வாழ்க்கையில் உணர்ச்சிபூர்வமான நாள் இது. உத்தேச அணியில் இடம் பிடித்த போதே நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். தற்போது நான் மகிழ்ச்சி வானில் மிதக்கிறேன். ஒருநாள், டெஸ்ட் போன்ற நீண்ட நேர போட்டியில் விளையாட நான் என்னும் தயாராகவில்லை. நீண்ட நேர போட்டியில் விளையாடுவது குறித்து அக்டோபர் இடைவெளியில் முடிவு செய்வேன். 20 ஓவர் போட்டிக்காக ஒரு மாதம் தீவிரமாக தயாராகுவேன். சர்வதேச போட்டியைப் பொறுத்தமட்டில் உடல் வலிமையை விட மனதைரியம் தான் முக்கியமானதாகும் என்று தெரிவித்தார்.

## தேசிய கால்பந்து; இறுதிப் போட்டியில் வடமாகாணம்



(கொழும்பு)

38ஆவது தேசிய விளையாட்டுவிழாவின் கால்பந்துப் போட்டித்தொடரின் இறுதிப்போட்டிக்கு வடமாகாண அணி தகுதி பெற்றுள்ளது. 38ஆவது தேசிய விளையாட்டு விழாவின் கால்பந்துப் போட்டி கொழும்பு ஆர்.சி.சி. விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றுது. ஆண்கள் பிரிவில் வடமாகாண அணி ஊவாமாகாண அணியை எதிர்கொண்டது. இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வடமாகாண அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளது.

தொடர்ந்து நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் மேல்மாகாண அணியும், வடமாகாண அணியும் மோதின. இதில் இரு அணிகளும் பலம் வாய்ந்த அணி என்பதால் ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்றது. இதில் அதிரடியான கோல் ஒன்றைப் போட்ட வடமாகாண அணி தொடர்ந்தும் அதைத் தக்கவைத்திருந்தது. இறுதியில் 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற வடமாகாண அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. இன்றைய தினம் இடம்பெறும் இறுதிப் போட்டியில் தென்மாகாண அணியோடு வடமாகாண அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, பெண்கள் பிரிவில் இடம்பெற்ற போட்டியில் வடமாகாண அணி முதல் சுற்றுடனேயே வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

# கடற்கரை கரப்பந்து வடக்கு மாகாணத்தில் அறிமுகம் முல்லைத்தீவில் ஏற்பாடுகள் பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் முதன் முறையாக கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டிகள் மாகாண ரீதியாக நடத்தப்படவுள்ளது.


வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பில் வடமாகாண கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 16,17,18ஆம் திகதிகளில் முல்லைத்தீவு கடற்கரை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முதற்தடவையாக வடமாகாணத்தில் நடைபெறவுள்ள கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் அணிகள் கலந்து கொள்ளவுள்ளன.

கடற்கரை கரப்பந்தாட்டத்தை வடமாகாணத்தில் பிரபல்யமடையச் செய்து தேசிய மட்டப்போட்டிகளில் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கும் நோக்கில் வடமாகாண ரீதியில்கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டிகளை நடத்துவ தற்கு நடவடிக்கைகளை வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் எடுத்துள்ளதாக விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை தெரிவித்தார்.

வடமாகாண கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் வெற்றிபெறும் அணிகள் அடுத்த வாரம் நடைபெறவுள்ள தேசியமட்ட கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றவுள்ளன எனவும் தேசிய மட்டகடற்கரை கரப்பந்தாட்டம் மாறவில கடற்கரை மைதானத்தில் நடைபெறவுள்ளன எனவும் வடமாகாணம் சார்பில் பங்குபற்றவுள்ள அணிகள் பயிற்சிப் போட்டிகளிலும் பங்குபற்ற முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (93)

# வடக்கு மாகாணத்திற்கு மூன்று இலட்சத்து 40 ஆயிரம்



(கொழும்பு)

எதிர்வரும் தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் பங்குபெறவுள்ள தேசிய அணிக்கான 30 வீரர்களைத் தெரிவு செய்வது சம்பந்தமான கூட்டம் ஒன்று கொழும்பு விளையாட்டுத்துறை அமைச்சில் நடைபெற்றது.

விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

இதன்போது ஒவ்வொரு விளையாட்டுப் பிரிவுக்கும் தலா 10,000 வீதம் வழங்குவதற்கான காசோலை வழங்கப்பட்டது. வட மாகாணத்தின் 34 பிரிவிற்குமான 3,40,000 ரூபா பெறுமதியான காசோலையினை வட மாகாண விளையாட்டுப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை அமைச்சரிடம் பெற்றுக் கொண்டார். அணிக்கான வீரர்களின் தேர்வு முதலில் பிரதேச செயலர்பிரிவுமட்டத்திலும் பின்னர் மாவட்ட ரீதியிலும்மாகாண ரீதியிலும் நடாத்தப்பட்டு இறுதியாக தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்படுவார்கள்.

ஒவ்வொரு மாகாணத்திற்குமுரிய விளையாட்டுத்துறைப் பணிப்பாளர்கள் கூட்டத்திற்கு சமூகமளித்திருந்தனர்.

# எட்டு விக்கெட்டுக்களால் யாழ். இந்து வெற்றி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மத்திய கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி ஒன்றில் யாழ். இந்துக் கல்லூரி அணி இலகுவாக வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி ஒன்று கடந்த புதன்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி 21.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 75 ஓட்டங்களைப் பெற்றது. இதில் யுவராஜ் ஐந்து நான்கு ஓட்டங்கள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 32 ஓட்டங்களைப் பெற்றார். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் அன்ரன் றோய் ஆறு ஓவர்கள் பந்து வீசி ஏழு ஓட்டங்களை மட்டும் விட்டுக்கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும், ஜிந்துசன் ஏழு ஓவர்கள் பந்து வீசி 10 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 76 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ். இந்துக் கல்லூரி அணி 17.4 ஓவர்கள் நிறைவில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மிதுசன், ஸ்ரீபன்ராஜ் ஆகியோர் ஆட்டமிழக்காது முறையே 22, 27 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தனர். பந்து வீச்சில் லக்ஸன், யுவராஜ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இதேவேளை, இவ்வருடம் முதன் முறையாக கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் அகில இலங்கை ரீதியாக ஆடும் கிளிநொச்சி மத்திய கல்லூரி அணியின் யுவராஜின் ஆட்டத் திறனைக் கண்டு களித்த பார்வையாளர்கள் வெகுவாகப் பாராட்டியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டம் நிறைவடையும் நிலையில் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் விரைவில் இடம்பெறும் எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.(42)

# தேசியத்திற்குத் தகுதி



**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது. மன்னார் பொதுவிளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியுடன் மோதிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானமை குறிப்பிடத்தக்கது. (116)**

# கிரிக்கெட் சபை தலையீடு

இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் வீரர்களுக்கு ஊதியம் வழங்கி வைக்கப்படவில்லை என்ற பிரச்சினை தொடர்பாக இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நேரடியாகத் தலையிட்டுள்ளது.

ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்ததன்படி ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் வெளிநாட்டு வீரர்களில் பலருக்கும், இந்திய வீரர்கள் பலருக்கும் இன்னமும் ஊதியத்தின் வழங்கப்பட வேண்டிய பங்கு வழங்கி முடிக்கப்படவில்லை. இது தொடர்பான இழுபறி தொடர்ந்து நீடித்து வந்த நிலையிலேயே தற்போது இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தலையிட்டுள்ளது.

அணியின் வீரர்களுக்கான ஊதியங்கள் தாமதாக வழங்கப்படுவதற்கு வீரர்கள் எவருக்கும் ஆட்சேபனை இல்லை என்ற சான்றிதழைப் பெற்றுச் சமர்ப்பிக்குமாறு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி நிர்வாகத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

ஒவ்வொரு அணியும் வருடாந்தம் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்குச்செலுத்தவேண்டிய தொகை தாமதப்பட்டால் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை காத்திருக்கும் எனத் தெரிவித்த இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, எனினும் வீரர்கள் ஊதியம் வழங்கப்படாமல் காணப்படுவது சரியானது அல்ல எனத் தெரிவித்துள்ளது.

# அரச அதிபர் வெற்றிக் கிண்ண வலைப்பந்து துரையப்பாவில் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டச் செயலக நலன்புரிச் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்திற்கான வலைப்பந்தாட்டப் போட்டி இன்றைய தினம் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கிடையிலான அரச உத்தியோகத்தர்களுக்கான யாழ். அரச அதிபர் வெற்றிக்கிண்ண கிரிக்கெட்,வலைப்பந்து, காற்பந்து மற்றும் உள்ளக விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றது. இதில் சதுரங்கம், கரம், ஆகிய போட்டிகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளதுடன் அதன் முடிவுகள் அறி விக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஆண், பெண்களுக்கிடையில் இடம்பெற்ற சதுரங்கப் போட்டியில் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஆர். செந்தில்மாறன், இரண்டாமிடத்தை வேலணை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஆர். மதன், மூன்றாமிடத்தை மாவட்டச் செயலகத்தைச் சேர்ந்த பி. பிரதீபன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை யாழ்ப்பாண பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ். சுரேஜினி, இரண்டாமிடத்தை பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எச். சாமந்தி, மூன்றாமிடத்தை உடுவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ரி. தாட்சாயினி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

கரம் போட்டியில் ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை மாவட்டச் செயலகமும், இரண்டாமிடத்தை ஊர்காவற்றுறை பிரதேச செயகமும் பிடித்துக் கொண்டன.

பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை பருத்தித்துறை பிரதேச செயலகமும், இரண்டாமிடத்தை உடுவில் பிரதேச செயலகமும் பிடித்துக் கொண்டன.

# சென். ஜோன்ஸ் பெரு வெற்றி

ஸ்ரான்லிக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி பெரு வெற்றி பெற்றது. இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஆட்டமொன்று அண்மையில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 47 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 325 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டிலக்ஷன் 36 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பந்து வீச்சில் ஜெயகரன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 326 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய ஸ்ரான்லிக் கல்லூரி அணி 14.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 39 ஓட்டங்களை மட்டுமே பெற்று படுதோல்வியடைந்தது. இதில் சுவிகரன் மட்டுமே 11 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் கருனியன், ஈமில்ரன் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (எஸ்.பி.)



எனக்கு டயரி எழுதும் பழக்கம் கிடையாது. அதற்கு முதல் காரணம் சோம்பேறித்தனம். இரண்டாவது, நாம் மறக்க விரும்பும் விஷயங்களை எழுதித் தொலைப்போம்.

# சமூகசேவை!


எப்போதாவது டயரியைப் புரட்டினால் அதுதான் முதலில் கண்ணில் படும்! அந்த விஷயத்தை வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாதபடி பாடாய்ப்படுத்தும்!

என்னைக் கேட்டால் டயரிகளில் 80 சதவீதம் புதுக்கருக்கு அழியாமல் இன்னும் பல வருஷங்கள் பலர் வீட்டில் பாதுகாப்பாக இருக்கும். பத்து சதவீத டயரிகள் முதல் இரண்டு பக்கம் மட்டும் எழுதப்பட்டு (இன்று, புத்தாண்டு. புது வருஷம் பிறந்தது!) இருக்கும். மீதி பத்து சதவீத டயரிகள் பால் கணக்கு, தயிர்க் கணக்கு, நோட்டுப் புத்தகமாக உபயோகப்படுத்தப்படும்.

எல்லாருமா அனந்தரங்கம் பிள்ளை மாதிரியோ, சாமுவேல் பீப்ஸ் மாதிரியோ டயரி எழுத முடியும்?

சாமுவேல் பீப்ஸ் டயரி சுமார் ஒன்பதரை வருடக் குறிப்புகள். கிட்டத்தட்ட 15 லட்சம் வார்த்தைகள்! தனது தனிப்பட்ட எண்ணங்களை யாரும் படித்துவிடக் கூடாது என்று கருதி "டேக்கி கிரா∴பி" என்ற ஏறக்குறைய உலகமே மறந்துவிட்ட சுருக்கெழுத்து முறையில் எழுதியிருந்தார். அப்படியும் 100 வருஷங்களுக்குப் பிறகு பெரும் முயற்சி எடுத்து அதையும் படித்துவிட்டார்கள். எனக்கு டேக்கி கிரா∴பி தெரியாது. நான் டயரி எழுதாததற்கு அதுவும் ஒரு காரணம்.

இன்னொரு அல்ப காரண-மும் உண்டு. உதாரணமாக டயரியில் குப்புசாமிக்கு இன்று 5 ரூபாய் கடன் கொடுத்தேன் என்று எழுதியிருந்தேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். பத்து வருஷம் கழித்து இதைப் பார்த்தால் யார் இந்தக் குப்புசாமி? அவருக்கு எதற்கு 5 ரூபாய் கடன் கொடுத்தேன்? உண்மையிலேயே வெறும் 5 ரூபாய்தானா அல்லது ஐயாயிரம் என்பதைச் சுருக்கி "ஐந்து" என்று எழுதினேனா? என்பது போன்ற பல கேள்விகளால் தலையைப் பிய்த்துக் கொள்ள நேரிடும்! இவையெல்லாம் போகட்டும் என்று விட்டுவிட்டால்கூட, கொடுத்த பணத்தை குப்புசாமி திருப்பிக் கொடுத்தானா, மறந்து விட்டோமா? பணம் கோவிந்தாதானா? என்று பல கேள்விகள் மண்டையைக் குடையும்! எதற்கு இத்தனை தொல்லை? டயரி எழுதாவிட்டால் ஒரு வம்பும் இல்லையே! அதனால்தான் நான் டயரி எழுதுவதில்லை! இது ஒரு சமூக சேவை என்று உங்களில் சிலர் சொல்வீர்கள் என்று எனக்குத் தெரியும்!



**- 'டயரியும் நானும்' என்ற கட்டுரையில் நகைச்சுவை எழுத்தாளர் 'கடுகு'**

# மூன்று நண்பர்கள்



அந்த ஹோட்டலுக்கு மூன்று நண்பர்கள் தங்க வந்திருந்தனர். அவர்களுக்கு ஏழாவது மாடியில்தான் தங்க அறை கிடைத்தது. ஹோட்டல் முதலாளி அவர்களிடம், "இரவு பத்து மணிக்கு மேல் வந்தால் லி∴ப்ட் வேலை செய்யாது. அப்புறம் நூறு படிகளை ஏறித்தான் உங்கள் ரூமுக்குப் போக முடியும். அதனால் பத்து மணிக்குள் வந்துவிடுங்கள்" என்றார் கண்டிப்புடன்.

ஆனால் நண்பர்கள் வெளியே போய்விட்டுத் திரும்பி வரும்போது இரவு 11 மணியாகிவிட்டது. லி∴ப்ட் வேலை செய்யவில்லை. மூவரும் மூச்சு வாங்க படியேறி அறை வாசலை அடைந்தனர்.

நண்பர்களில் ஒருவன் சொன்னான்: "நான் அறைச் சாவியை ரிசப்ஷனில் கொடுத்திருந்தேன். வரும்போது ஞாபக மறதியால் அதை வாங்கி வரவில்லை. யாராவது கீழே போய் எடுத்துட்டு வர முடியுமா?"

இன்னொருவன் சாவியை வாங்க படிகளில் இறங்கி கீழே போய்விட்டு மூச்சிரைக்க இரைக்க மாடிப்படி ஏறி வந்தான்.

"ரிசப்ஷனில் சாவியைக் கொடுக்கவில்லையாமே" என்றான் சிறிது கோபத்துடன்.

"அட' ஆமாம். சாவி என் காற்சட்டைப்பையில்தான் இருக்கு" என்று சாவியை எடுத்துப் பூட்டைத் திறக்க முயன்றான். பூட்டுத் திறக்கவில்லை.


"ஏன் திறக்குதில்லையே... நாம் ரூம் மாறி வந்துட்டோமா?" என்று கேட்டான்.

அதற்கு மூன்றாமவன் சொன்னான்: "நாம் தங்கியிருந்தது இந்த ஹோட்டல் இல்லை. அது பக்கத்துத் தெருவில் இருக்கு"

# ஜெய்சங்கர்

**- R.P.ராஜநாயஹம் -**

பாக்கியம் ராமசாமியின் அப்புசாமித்தாத்தா-சீதாப்பாட்டி கதையொன்றில் அப்புசாமி ஒரு முக்கிய மனிதரைக் கவர்வதற்காக சில துறுதுறுப்பான உற்சாகமான வாலிப



சேட்டைகள் செய்வார். பல்டியடிப்பார். விசிலடிப்பார். தாவிக்குதிப்பார்.. அப்புசாமியைப் பார்த்து வியந்து போய் அந்த மனிதர் கேட்பார். "நீர் உண்மையிலேயே கிழவர் தானா? அல்லது கிழவர் வேடம் போட்டு வந்த ஜெய்சங்கரா?"

டப்பா படத்தில் நடித்தாலும் ஏதோ வெள்ளிவிழா படத்தில் நடிப்பது போல மிகுந்த உற்சாகமாக பெருமிதத்துடன் நடிப்பார். முகத்தில் மின்சாரம் பாய்ச்சியது போல சிரிப்பார். அவரோடு பழகிய யாரும் அந்த சிரிப்பை நிமிடத்திற்கு ஒரு முறை பார்க்கவேண்டியிருந்திருக்கும்.

குழந்தையும் தெய்வ்மும், பட்டணத்தில் பூதம், நூற்றுக்கு நூறு, வீட்டுக்கு வீடு என்று ஒரு நாலே நாலு படம் தான் தேறும். அதிலும் நாகேஷ் பங்கு தான் அதிகம். வீட்டுக்கு வீடு படத்தில் தன்னுடைய தென்னகத்து ஜேம்ஸ்பாண்ட் இமேஜை உடைத்து ஒரு பொண்டுகச்செட்டியாக பிரமாதமாக நடித்திருப்பார்!

வருசத்துக்கு பன்னிரண்டு படம் வீதம் ஜெய்சங்கர், கதாநாயகனாக மட்டுமே குறுகிய ஒரு காலகட்டத்திற்குள் ஒரு இருநூறு படமாவது நடித்திருப்பார்.

வேறு பொழுதுபோக்கே அறியாத அந்தக்கால தமிழ் சினிமாப் பைத்தியங்களுக்கு ஜெய்சங்கர் படங்கள் பார்த்த போது தான் சினிமாப் படம் கூட போர் அடிக்கும் என்ற வி'யமே தெரிய வந்தது. கடுங்காவல் தண்டனைக் கைதிகளுக்கு "ராஜாவீட்டுப்பிள்ளை" அன்புவழி "புத்திசாலிகள்" "அத்தைமகள்"கெட்டிக்காரன்" "மாப்பிள்ளை அழைப்பு" போன்ற படங்களைப் போட்டுக் காட்டலாம். (சித்திரவதை செய்வதாக மனித உரிமைக் கழகம் தலையிடும் வாய்ப்பு உண்டு.) இத்தனைக்கும் "புத்திசாலிகள்" ஸ்பென்ஸர் ட்ரேசி நடித்த It's a mad, mad, mad, mad world படத்தின் கொப்பி.

போர் அடிக்காத சில படங்கள் பஞ்சவர்ணக்கிளி, வல்லவன் ஒருவன், இருவல்லவர்கள், பெண்ணே நீ வாழ்க, நர்ன் யார் தெரியுமா, பூவா தலையா, மன சாட்சி, நிலவே நீ சாட்சி, மாணவன், வீட்டுக்கு ஒரு பிள்ளை, அக்கரைப் பச்சை, கல்யாணமாம் கல்யாணம் ஆகியவை.

மாடர்ன் தியேட்டர்ஸ் 1966இல் திரையிட்ட "இருவல்லவர்கள்" (தம்பியாக ஜெய்சங்கர், அண்ணனாக ஆர்.எஸ். மனோகர்) ஹிந்தியில் ரந்திர் கபூர், வினோத் கன்னா நடித்து "ஹாத் கி ச∴பாய்" ஆக படமாக்கப்பட்டு மீண்டும் தமிழில் 1981இல் கமல், ஜெய்சங்கர் நடித்து "சவால்" என்ற பெயரில் பாலாஜி தயாரிப்பில் வெளியானது.

சி.ஐ.டி சகுந்தலா, கெட்டிக்காரன் லீலா, ராஜ்கோகிலா போன்ற க்ரூப் டான்ஸ், எக்ஸ்ட்ரா நடிகைகள் ஜெய்சங்கர் படங்களால் கதாநாயகிகளாக முடிந்தது.

பழைய தமிழ் படங்களில் பாடல்கள் அமரத்துவம் வாய்ந்தவை என்பதால் ஜெய்சங்கர் படப் பாடல்கள் விசேஷ அந்தஸ்து பெற்றன. முக்கியமான ஒரு அம்சம் - T.M.சௌந்தர ராஜன் பாடல்கள் இவருக்கு சிவாஜி, எம்.ஜி.ஆருக்கு போலவே நன்கு பொருந்தியது. TMS பாடல்கள் கேட்டவுடன் இது எம்.ஜி.ஆர் பாட்டு, இது சிவாஜி பாட்டு என்பது போல ஜெய்சங்கர் பாடல்களும் கண்டுபிடிக்க முடியும். குரல் கூட ஜெய்சங்கர் போலவே இருக்கும். உதாரணம்: "காதல் பறவை" படத்தில் "பட்டுப்பூச்சி பட்டுப்பூச்சி பாப்பா."

பாட்டு என்றதும் ஜெய்சங்கரின் funny dance பற்றி குறிப்பிட்டே ஆகவேண்டியிருக்கிறது. இருகால்களையும் மாற்றி மாற்றித் தூக்கி குதிப்பது தான் ஜெய்சங்கர் டான்ஸ். "பிருந்தாவனத்தில் பூவெடுத்து இளம்பெண்ணே உனக்கு சூடட்டுமா" "நாணத்தாலே கால்கள் பின்ன பின்ன" "பூவா தலையா போட்டாத் தெரியும் நீயா நானா பார்த்து விடு" "காலம் பொன்னானது கடமை கண்ணானது" என்று ஆரம்பித்து அவர் ரஜினி படத்தில் ஆடிய "மாத்தாடு மாத்தாடு மல்லிகை" வரை குதித்துக்கொண்டே தான் இருந்தார்.




ஒளிப்பதிவாளர் கர்ணன் இயக்கிய கங்கா, எங்க பாட்டன் சொத்து போன்ற படங்கள் ஜெய் சங்கருக்கு "கரடி" பட்டத்தை உறுதி செய்தன. மயக்க ஊசி போடப்பட்ட சிங்கத்தை தூக்கத்திலிருந்து எழுப்பி சண்டை போட்டு சித்திரவதை செய்வார். "என்னை தூங்க விடேன்டா" என்று சிங்கம் கெஞ்சும். 1970களில் எம்.ஜி.ஆர் நடித்த படங்களை கொஞ்சம் தள்ளி நின்று இரசித்தால், சிரித்து வயிறு புண்ணாகி விடும். அவர் ரொம்ப சீரியஸாகத்தான் நடிப்பார். ஆனால் நமக்கு சரியான காமெடியனாகத்தான் அந்தப் படங்களில் தெரிவார். அது போலத்தான் பல, பல ஜெய்சங்கர் படங்களும்.

எம்.ஜி.ஆர் தனிக்கட்சி ஆரம்பித்த பின் கருணாநிதியிடம் ஜெய்சங்கர் சிக்கிக்கொண்டு வண்டிக்காரன் மகன் தொடங்கி பல படங்கள் செய்திருக்கிறார். கருணாநிதி வசனம் எழுதிய ஜெய்சங்கர் படங்கள் எதுவும் கருணாநிதிக்கு பெருமை சேர்ப்பவையல்ல.

எம்.ஜி.ஆரின் கதாநாயகி ஒருவர் ஜெய்சங்கரைக் காதலித்தார். மற்றொரு நடிகை எல். விஜயலட்சுமியைக் கூட ஜெய்சங்கர் கல்யாணம் செய்ய இருக்கிறார் என்ற பரபரப்பு இருந்ததுண்டு.

வில்லனாக ரஜினியின் "முரட்டுக்காளை" படத்தில் நடித்த பிறகு மீண்டும் ஒரு ரவுண்ட் வந்தார்.

ரொம்ப பரோபகாரி. பல சிரமப்பட்ட திரையுலகத்தவர்க்கு பொருளுதவி செய்தவர் என அறியப்பட்டவர் ஜெய்சங்கர்.

அக்பர் அரசாண்ட காலத்தில் அருகி[...] காடொன்றில் சாது ஒருவர் குடிசை போ[...] வசித்து வந்தார். அப்பகுதி மக்கள், [...] சென்று ஆசி பெற்று வருவதுண்டு. ஆ[...] பொருள்கள் எதுவுமில்லாது இருந்ததால்[...] உபசரிப்பது அவருக்கு க்'டமாக இருந்த[...]

இந்தக் குறையைப் போக்க அரசர் [...] சென்று சிறிது பணத்தைப் பெற்று வர [...] விரும்பினார் அந்த சாது.

இதற்காக அந்த சாது அரசவைக்குச்[...] அங்கு அரசர் அக்பர் தொழுது கொ[...] அவரருகே அமர்ந்து கொண்டார்.

அவர் தொழுகையின் போது, "இறை[...] இன்னும் பொன், பொருள், ராஜ்யம் பே[...] கொடுத்தருள வேண்டும்" என்று வேண்[...]


இதைக் கேட்ட சாது அங்கிருந்து எ[...] சாது எழுந்து செல்வதைப் பார்த்த [...] கூப்பிட்டு அமரச் சொன்னார்.

சாது அங்கே மீண்டும் அமர்ந்தார்.

தொழுகை முடிந்ததும், அக்பர் அந்[...] பார்த்து, "தாங்கள் என்னைக் காண வ[...] என்னிடம் எதையும் சொல்லாமல் திரும்[...] நினைத்தீர்களே?" என்றார்.

சாது, "நான் என்னைத் தேடி வரும் [...] தயாவது செய்ய வேண்டுமென்று விரு[...] தேவையான பணத்தை உங்களிடம் கே[...] வந்தேன். ஆனால் தங்களை க்'டப்படுத்[...]

# மியாவ் மியாவ்...




- பூனை ஒரு நாளைக்கு 16 மணி நேரம் வரை தூங்கும்.
- பூனை விழித்திருக்கும் நேரத்தில் மூன்றில் ஒரு பங்கு நேரத்தை தன்னை சுத்தப்படுத்துவதற்காக பயன்படுத்திக் கொள்ளும்.
- நிலநடுக்கத்தை 15 நிமிடங்களுக்கு முன்பே உணரும் திறன் பூனைகளுக்கு உண்டு.
- பெரிய பூனைகளுக்கு 30 பற்கள் உண்டு.
- பூனைக்குட்டிகளுக்கு 26 பற்கள்தான் காணப்படும்.
- பூனையின் இதயத்துடிப்பு மனிதர்களைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகம். ஒரு நிமிடத்துக்கு 110- 140 வரை இதயத்துடிப்பு இருக்கும்.
- பூனைக்கு மொத்தம் 230 எலும்புகள் உண்டு. மனிதர்களுக்கோ 206 எலும்புகள்தான். பூனைக்கு தோள்பட்டையில் உள்ள காறை எலும்பு கிடையாது.

# கதை சொல்லும் நானம்மா!

லவ-குசர் என்ற இரட்டையர் இராமபிரானின் குழந்தைகளா, இல்லை வால்மீகியின் கற்பனைப் பாத்திரங்களா?

பீர்பாக் யார்? பீமனின் மகன் கடோற்கஜனின் மகன். அவனுக்கு மட்டும் மகாபாரதப் போர் முழுதையும் மலை உச்சியில் இருந்து பார்க்கும் வாய்ப்பு எப்படிக் கிடைத்தது? அதன் பின்னணிக் கதை




என்ன? - என்று அத்தனை கதைகளையும் "நானம்மா" ஜெயா வேணு கோபால் சுவாரசியமாகச் சொல்வதைக் கேட்க வேண்டுமா? மிகவும் எளிது. நீங்கள் கம்ப்யூட்டர் முன்னால் அமர்ந்து, www.nanamma.co என்று வலைத் தளத்தில் தட்டினால், இந்தப் பாரம்பரியக் கதைகளைப் படத்துடன் பார்த்து இரசித்துக்கொண்டே இருக்கலாம்.

"கதை சொல்லு பாட்டி, கதை சொல்லு..." என்று இரவில் பாடாய்ப் படுத்தும் சின்னஞ்சிறு குழந்தைகளிடம், இனி சாக்குப் போக்குச் சொல்லாமல் சமாளிக்கலாம்.


மொத்தம் 1008 கதைகள். அதில் 365 வீடியோ வடிவத்தில் பார்க்கலாம், கேட்கலாம். கேட்டுக்கொண்டே தூக்கம் வந்தால் தூங்கலாம் "என்ன கணக்கு 1008 கதைகள்?" என்று கேட்கிறவர்களுக்குக் கணக்குச் சொல்லியாக வேண்டும். இதோ கணக்கு. கூட்டல் போட்டுப் பார்த்துக்கொள்ளுங்கள்:

ஆன்மிகக் கதைகள்: 622
சரித்திர வகைக் கதைகள்: 210
கலாசார வகைக் கதைகள்: 176

ஆன்மிகக் கதைகளில் புராண, இதிகாசங்கள் அடங்கும். விஷ்ணு, சிவன், பிரம்மா என்று கடவுள் பாத்திரங்கள் வருவார்கள். கிருஷ்ணரைப் பற்றிய கதைகள், இராமாயண, மகாபாரதப் பாத்திரங்களையும் பார்க்கலாம். படங்கள் உண்டு. பார்க்கவும் கேட்கவும் சுவாரசியமாக இருக்கும். சரித்திர வகைக் கதைகளில் சந்திரகுப்த மௌரியர், சாணக்கியர், பிந்துசாரர், அசோகர் என்று பல மன்னர்கள், சக்கரவர்த்திகள்.

கலாசார வகைக் கதைகளில், பண்டிகைகள், திருவிழாக்கள், சடங்குகள், பூஜைகள் என்று ஒரு நீண்ட பட்டியலே இருக்கிறது. விரும்பியதை "க்ளிக்" செய்து பார்க்கலாம். நானம்மா சொல்லும் கதையைக் கேட்கலாம். எல்லாமே மூன்று முதல் பத்து நிமிடங்கள்தாம். பல ஒரு பக்கக் கதைகள். பீர்பாக் கதை மட்டும்தான் பதிமூன்று நிமிடங்கள். கலாசார வகைக் கதைகளில், உட்கார்ந்த இடத்திலிருந்தே புனிதத் தலங்களைப் பற்றியும் அறிந்துகொள்ளலாம். புஷ்கர் எங்கே இருக்கிறது அங்கு என்ன விசேஷம்? ஏழு மோட்ச தலங்கள் என்னென்ன? எல்லாமே சொல்கிறார் நானம்மா.

# கண்டுபிடிப்புகள் அதிகரிக்க காரணம்



புதிய பொருட்களும், புதுவிதமான தகவல் பரிமாற்ற முறைகளும் கூட கண்டுபிடிப்புகளை விரைவுபடுத்துகின்றன. எ.்.கு (ஸ்டீல்), பிளாஸ்டிக் மற்றும் சில செயற்கைப் பொருட்களின் வரவால் இதற்கு முன் சாத்தியமே இல்லாத கண்டுபிடிப்புகள் உருவாகியிருக்கின்றன. முன்பெல்லாம் புத்தகங்களும் பத்திரிகைகளும் மற்ற கண்டுபிடிப்பாளர்கள் என்ன செய்கிறார்கள் என்று அறிய உதவின. இப்போதோ வானொலி, தொலைக்காட்சி, தொலைபேசி, இணையம் ஆகியவை வெகுவேகமாக தகவல்களைப் பரப்புகின்றன.

ஒரு புத்தகத்திலிருந்தோ, ஒரு தொலைபேசி அழைப்பு மூலமோ, கணனியுடன் இணைக்கப்பட்ட நூலகம் மூலமோ, எந்த ஒரு துறையிலும் லேட்டஸ்ட் என்ன என்று தெரிந்து கொள்ளமுடியும். மரம், நைலோன், ்.பைபர்கிளாஸ், ஸ்டீல் என நூற்றுக்கணக்கான பொருட்களிலிருந்து கண்டுபிடிப்புகளை உருவாக்க முடியும். அதே போல மின்சக்தி, ஒரு சிறிய எஞ்சின், ஒரு பற்றரி, சூரிய சக்தி, காற்றாலை மின்சக்தி என தங்களுக்குத் தகுந்த சக்தி மூலத்தைப் பயன்படுத்த முடியும். முன் எப்போதை விடவும் இப்போது மிக அதிக கண்டுபிடிப்புகள் தோன்றுவதில் ஆச்சரியம் ஏதும் இல்லைதானே.

# மூன்று..!


விஞ்ஞானி ஐன்ஸ்டீனிடம் எப்போதும் மூன்று கண்ணாடிகள் இருக்கும்.

ஐன்ஸ்டீனைக் காண வந்த நண்பர் ஒருவர், "ஏன் மூன்று கண்ணாடிகள் வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"படிப்பதற்கு ஒன்றைப் பயன்படுத்துகிறேன். மற்றொன்றை தூரப் பார்வைக்குப் பயன்படுத்துகிறேன்..." என்றார் ஐன்ஸ்டீன்.

நண்பருக்குப் பொறுக்கவில்லை... "அதெல்லாம் சரிதான், அந்த மூன்றாவது கண்ணாடி எதற்கு?" என்று ஆவலாகக் கேட்டார்.

"நான் வைத்திருக்கும் இரண்டு கண்ணாடிகளும் அடிக்கடி காணாமல் போய்விடுகின்றன. அவற்றைத் தேடுவதற்காக மூன்றாவது கண்ணாடியைப் பயன்படுத்துகிறேன்" என்றார்.



# சிறுவன்..!

நியூயோர்க் பல்கலைக்கழகத்தின் வெளியே சப்பாத்து துடைக்கும் சிறுவன் ஒருவனை பிரபல விஞ்ஞானி அல்பேர்ட் ஐன்ஸ்டீன் சந்தித்தார். அப்போது அந்தச் சிறுவன் உங்கள் சப்பாத்தை பளிச்சென்று துடைத்துத் தருகிறேன் என்றான். ஐன்ஸ்டீன் புன்னகையுடன் தலையை ஆட்டிக்கொண்டே, "வேண்டாம். ஆனால் நீ முகத்தை கழுவிக்கொண்டு வந்தால் நான் உனக்கு ஒரு டொலர் பணம் தருகிறேன்" என்றார். அந்தப் பையன் வேகமாக ஓடி பக்கத்து தண்ணீரக் குழாயில் முகத்தை கழுவிக்கொண்டு திரும்பி வந்தான்.

"முன்னைவிட நன்றாக இருக்கிறாய்" என்ற ஐன்ஸ்டீன் ஒரு டொலரைக் கொடுத்துவிட்டு, "இந்தப் பணத்தைக் கொண்டு என்ன செய்யப் போகிறாய்" என்று கேட்டார். அதற்கு அந்தச் சிறுவன், "நீங்கள் தலை முடியை வெட்டிக் கொள்வதாக உறுதியளித்தால், இந்தப் பணத்தை உங்களுக்கே திருப்பிக் கொடுத்துவிடலாமென விரும்புகிறேன்" என்றான்.

# யாசகனிடம்* யாசகம்* கேட்கலாமா?

ருகிலுள்ள
போட்டு அங்கு
அவரைத் தேடிச்
ஆனால் அவரிடம்
தால், வந்தவர்களை
ந்தது.
ர் அக்பரிடம்
ர வேண்டுமென்று
குச் சென்றார்.
கொண்டிருந்தார். சாது
றைவனே! எனக்கு
போன்றவைகளைக்
ண்டினார்.
எழுந்தார்.
அக்பர், அவரைக்
ந்த பக்கிரியைப்
வந்தீர்கள். ஆனால்
நம்பிச் செல்ல
ம் மக்களுக்கு எை-
ரும்பினேன். அதற்குத்
கேட்டுப் பெறலாமென
டுத்த வேண்டாமென்று

நினைத்துக் கிளம்பினேன். அதற்குள் தாங்கள் அமரச் சொல்லி விட்டீர்கள்" என்றார்.

"அதனால் என்ன, இப்போது தங்களுக்குப் பணம் அளிக்கிறேன்" என்றபடி அருகிலிருந்த அரண்மனைக் காவலரை அழைத்தார்.

"அரசே எனக்குப் பணம் எதுவும் வேண்டாம். தாங்கள் தொழுகையின் போது இறைவனிடம் பொன், பொருள், பணம் வேண்டி யாசித்தீர்கள். எனவே யாசகனான தங்களிடம் நான் ஏன் யாசிக்க வேண்டும்? யாசகம் வாங்காமல் இந்த செயலைச் செய்ய முடியாதெனும் நிலையில் நானும் இறைவனிடமே யாசித்துக் கொள்ளலாமென்றுதான் திரும்பினேன்" என்றார்.



# அப்படியா!

- வானொலியைக் கண்டுபிடித்த மார்க்கோனி 51 வயதில்தான் திருமணம் செய்து கொண்டார்.
- கலப்படம் செய்ய முடியாத ஒரே உணவுப் பொருள் கோழிமுட்டை.
- வாத்து போடும் "குவாக் குவாக்" சத்தம் எப்படிப்பட்ட இடத்திலும் எதிரொலிக்காது.
- உலகில் அதிகம் பயன்படுத்தப்படும் மூலிகை கொத்தமல்லி.
- மருதோன்றி சிவப்பு நிறமாக லாஸன் என்ற நிறமி காரணமாகிறது.
- ஒரு கிலோ குங்குமப் பூவைச் சேகரிக்க வேண்டுமானால் சுமார் 1,40,000 செடிகளிலிருந்து பூக்களைச் சேகரிக்க வேண்டும்.
- வில்லோ மரப்பட்டையிலிருந்து அஸ்பிரின் மருந்து தயாரிக்கப்பட்டது.




# கணினி உலா


A.J.Nimalrajan

## BIOS இணை Reset செய்தல்

உங்களது கணினியின் Password மறந்து விட்டால் Mother Board இல் உள்ள Jumber Settings இணை மாற்றி அமைப்பதன் மூலம் அல்லது BIOS இற்கான சிறிய Battery இணை 30 செக்கன்களுக்கு கழற்றி வைப்பதன் மூலம் BIOS இணை Reset செய்யலாம்.




30 செக்கங்களுக்குப் பிறகு Battery இனை அதற் குரிய இடத்தில் பொருத்தி விட்டு கணினியை Power On செய்யுங்கள். உங்கள் கணினி புதிதாக BIOS பொருத்தப் பட்டது போல் இயங்கத் தொடங்கும்.



## கூகுள் பிளசில் பிரபலமான Hangouts வசதி

கூகுள் நிறுவனம் கூகுள் பிளஸ் என்ற சமூக வலைதளத்தை வெளியிட்டு ஏறக்குறைய ஓராண் டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. குறுகிய காலத்தி லேயே மிகப்பெரிய வளர்ச்சியை கூகுள் பிளஸ் இணையதளத்தில் பல்வேறு பயனுள்ள வசதிகள் உள்ளன. அவற்றில் முக்கியமானதும் மிகப்பிர பலமான வசதி என்றால் அது Hangouts என்ற வீடியோ சாட்டிங் வசதி தான். கூகுள் பிளஸ் நண்பர்களுக்கு இடையே மணிக்கணக்கில் இலவசமாகவும், ஒரே சமயத்தில் பல்வேறு நண்பர்களுடன் உரையாடலாம். இப்படி மேலும் பல பயனுள்ள வசதிகள் உள்ளதில் ஹாங் அவுட்ஸ் மிகவும் பிரபலமாகி உள்ளது.



இப்பொழுது கூகுள் நிறுவனம் ஹாங் அவுட்ஸ் வீடியோ சாட்டிங் வசதியை ஜிமெயிலி லும் சேர்த்து உள்ளனர். ஜிமெயிலில் பழைய வீடியோ சாட்டிங் வசதியை நீக்கி விட்டு புதிய தொழில் நுட்பத்தினாலான ஹாங்அவுட்ஸ் வசதியை இணைத்துள்ளனர். இனி ஜிமெயிலில் உள்ள நண்பர்களும் மற்றும் கூகுள் பிளசில் உள்ள நண்பர்களுடன் ஜிமெயிலில் இருந்து கொண்டே வீடியோ சாட்டிங் செய்யலாம்.

ஒரே நேரத்தில் ஒன்பது நண்பர்களுடன் சாட்டிங் செய்ய முடியும் மற்றும் சாட்டிங் செய்து கொண்டிருக்கும் பொழுது யூடியுப் வீடியோக்களை பார்க்கவும் நண்பர்களுக்கு பகிரவும் முடியும்.

இந்த வசதியை கூகுள் நிறுவனம் படிப்படி யாக அனைவருக்கும் வழங்கி கொண்டு உள் ளது. ஆகவே ஒரு சில வாரங்களில் அனைத்து ஜிமெயில் கணக்கிற்கும் இந்த வசதி சேர்க்கப் படும் என்று தெரிவித்துள்ளனர்.

முதலில் நாம் இணையத்திற்கு வயர்கள் மூல மாக இணையத்தில் உலாவந்தோம். ஆனால் இப் பொழுது அனைவரும் வயர் பிரீ அல்லது வயர்லெஸ் மூலமாக வேகமாக இணையத்தில் உலா வருகிறோம்.

ஆனால் அதிலும் சில சிக்கல்கள் உள்ளது. நம் வீட்டில் வயர்லெஸ் மோடம் வைத்து நாம் அடுத்த ரூமில் இருந்து கொண்டு லேப்டாப்பில் இணையத்தில் உலாவருவோம்.

அதே நேரத்தில் நம் வீட்டுக்கு வெளியே காரில் இருந்து கொண்டு அல்லது பக்கது வீட்டில் இருந்து கொண்டு யாராவது நம் வயர்லெஸ்

## wi-Fi மோடத்தில் இணைந்திருப்பவர்களை யார் என்று கண்டுபிடிக்க




மோடம் வழியாக நம் காசில் இணையத்தில் உலாவந்தால் என்ன ஆகும்.

நம் காசும் போச்சு நம் தனி மனித இணைய பாதுகாப்பும் போச்சு என்று கொள்ள வேண் டியது தான். இது போல நடந்தால் கண்டுபிடிக்க நம் கணனி தவிர வேற எந்த கணனிகள் நம் வயர்லெஸ் மோடம் வழியாக இயங்குகிறது என்று தெரிந்து கொள்ள Who is on my Wifi என்ற மென்பொருள் உதவுகிறது.

இதன் பெயர் 1Click YouTube Batch Downloader. இதனை Eurekr.com என்ற முகவரி யில் உள்ள தளத்திலிருந்து இலவசமாக டவுண்லோட் செய்திடலாம். ஒன்றுக்கு மேற்பட்ட YouTube வீடியோக்களை, அவற்றின் இணைய தள முகவரி சென்று தேடிப் பெற்று காப்பி செய்வதனைக் காட்டிலும், இதன் மூலம் ஒரே கிளிக்கில் உழில செய்திடலாம்.

அது மட்டுமின்றி, இந்த வீடியோக்களை mp4, wmv, மற்றும் mov என்ற பார்மட்டுகளுக்கு மாற்றவும் இந்த புரோகிராம் உதவுகிறது. அத் துடன் பல வீடியோ பைல்களை ஒரே பைலாக மாற்றும் வசதியையும் இது தருகிறது.

## Safe mode ஏன்? எதற்காக?




மிக எளிதான திறனுடன் கூடிய கம்ப்யூட்டர் பயன்பாட்டினை வழங்குவதில் விண்டோஸ் இயக் கம் எப்போதும் முதல் இடத்தில் உள்ளது. ஆனால் சில வேளைகளில், இது ஏமாற்றத்தைத் தரும் சிஸ்டமாக அமைந்துவிடுகிறது.

குறிப்பாக, சில புதிய சொப்ட்வேர் அப்ளிகேஷன் களை இன்ஸ்டோல் செய்வதற்காகவும், ஹார்ட் வேர் சாதனங்களை இணைப்பதற்காகவும், புதிய ட்ரைவர்களை இணைத்து, கம்ப்யூட்டரை ரீஸ் டார்ட் செய்தால், கம்ப்யூட்டர் தொடர்ந்து இயங் காமல் முரண்டு பிடிக்கும் அல்லது கிராஷ் ஆகும்.

உடனே நாம் கம்ப்யூட்டரை மீண்டும் இயக்கு வோம். ஆனால் திடீரென புதிய தோற்றத்தில் கம்ப்யூட்டர் திரை காட்சி அளிக்கும். நான்கு மூலை களிலும் Safe Mode என்ற சொற்கள் காட்டப் படும். இது என்ன?

வழக்கமான முறையில் இயக்கத்தினைத் தொடங்க முடியாமல் விண்டோஸ் தத்தளிக்கையில், விண் டோஸ் தான் இயங்க ஒரு எளிய வழியைத் தேர்ந் தெடுக்கிறது. விண்டோஸ் இயக்கத் தொகுப்பில் அல்லது வேறு இடத்தில் எத்தகைய தவறு நேர்ந் துள்ளது எனக் கண்டறிய, விண்டோஸ் தானாக வழங்கும் ஒரு வழி இது.

இந்த வழியைக் கண்டறிந்து சரி செய்த பின், இதனை மீண்டும் இயக்கினால், விண்டோஸ் வழக் கம்போல தனக்கு வேண்டிய வழியில் இயங்கத் தொடங்கும். விண்டோஸ் சேப் மோடில் இயங்குகை யில், வழக்கமான இயக்கம் இல்லாமல், மாறுபாடான சில வழிகளைக் கையாள்கிறது. அவை என்ன வெனப் பார்க்கலாம்.

1. சேப் மோடில் autoexec.bat அல்லது config.sys பைல் இயக்கப்படமாட்டாது.

2.பிரிண்டர் மற்றும் ஸ்கேனர் போன்ற பல துணை சாதனங்களுக்கான ட்ரைவர்கள் இயக் கப்படாமல் இருக்கும். இந்த ட்ரைவர்கள் தான், அந்த துணை சாதனங்களுக்காக கம்ப்யூட்டருக்கு அவை குறித்து அறிவித்து, இயங்குவதற்குத் துணை புரிபவை.

3. வழக்கமான கிராபிக்ஸ் டிவைஸ் ட்ரைவருக் குப் பதிலாக, சேப் மோடில் ஸ்டாண்டர்ட் விஜிஏ கிராபிக்ஸ் மோட் பயன்படுத்தப்படும். இந்த வகை கிராபிக்ஸ், விண்டோஸுக்கு இணையாக இயங்கு கின்ற அனைத்து வீடியோ கார்ட்களையும் சப்போர்ட் செய்திடும்.

4. config.sys script பைலின் ஒரு பகுதியாக லோட் செய்யப்படும் himem.sys என்னும் பைல், சேப் மோடில் testmem:on என்ற ஸ்விட்சுடன் இணைத்து தரப்படும். இந்த ஸ்விட்ச், கம்ப்யூட்டருக்கு, இயக்கத் தினைத் தொடரும் முன் அதன் மெமரியை சோதனை யிடச் சொல்லி நினைவூட்டும்.

5. விண்டோஸின் மற்ற பைல்கள் எங்கு உள் ளன என்பதற்கான தகவல்களைக் கண்டறிய, சேப் மோட் msdos.sys என்ற பைலைச் சோதனை யிடும். இந்த பைலைக் கண்டறிந்த பின்னரே, சேப் மோடில் விண்டோஸ் லோட் ஆகும். அப்போது win /d:m என்ற கட்டளையைப் பயன்படுத்தும். விண் டோஸ் பைல்களைக் கண்டறிய முடியவில்லை என்றால், command.com என்ற பைலை இயக்கும். இதன் மூலம் சி ட்ரைவில் கமாண்ட் ப்ராம்ப்ட் இயக்கப்படும்.

6. விண்டோஸ் வழக்கமாக system.ini என்ற பைலுக்குப் பதிலாக, எஸ்எஸஅஉடி என்ற தொகுப்பு (batch) பைல் ஒன்றை இயக்கும். இந்த பைல் அனைத்து விர்ச்சுவல் டிவைஸ் ட்ரைவர்கள் (Virtual Device Drivers – VxDs) என்று அழைக்கப் படும், சாதனங் களை இயக்குவதற்கான ட்ரைவர் பைல்களை லோட் செய்திடும். இதுவே கம்ப்யூட்டரின் முக்கிய பாகங்களுடன் தகவல் பரிமாற்றத்திற்கு உதவிடும்.

7. சேப் மோடில் வழக்கமான system.ini பைலு டன் win.ini மற்றும் Registry செட்டிங்ஸ் லோட் செய் திடும். அப்போது பூட் மற்றும் சார்ந்த வரிகளை விலக்கிச் சென்று செயல்படும். மேலும் win.ini பைலில் பட்டியலிடப்பட்டுள்ள எந்த புரோகிராமை யும் இயக்காது.

8. விண்டோஸ் டெஸ்க் டொப் 16 வண்ணங்க ளில் லோட் ஆகும். இதன் ரெசல்யூசன் பிக்ஸல் கள் 640 x 480 என்ற வகையில் இருக்கும். "Safe Mode" என்ற சொற்கள் ஒவ்வொரு மூலையிலும் காட்டப்படும். தன் முதல் முயற்சியில் இயங்க முடிய வில்லை என்றால், விண்டோஸ் தானாக, சேப் மோடில் இயக்கத்தைத் தொடங்குகிறது.

நாமும் சேப் மோடில் கம்ப்யூட்டரை இயக்க லாம். கம்ப்யூட்டர் இயக்கத்திற்கான ஸ்விட்சை இயக்கியவுடன், தொடர்ந்து பூட் மெனுவின் போது F5 அல்லது F8 என்ற கீயை அழுத்தி சேப் மோடு குக் கம்ப்யூட்டரைக் கொண்டு வரலாம்.

சேப் மோடில் கம்ப்யூட்டர் இயங்கினால், நாம் என்ன செய்ய வேண்டும். முதலில், கம்ப்யூட்டரை வழக்கமாக பூட் செய்திட இயலாமல், எது தடுத் தது என்று கண்டறிய வேண்டும். ஏதேனும் புதிய தாக, ஒரு ஹார்ட்வேர் சாதனத்தினை இணைத் திருந்தால், கண்ட்ரோல் பேனல் சென்று அதனை நீக்கவும்.

அதற்கான ட்ரைவர் தொகுப்பு இன்ஸ்டோல் செய்யப்பட்டிருந்தால் அதனை முழுமையாக நீக்க வும். நீக்கிவிட்டு மீண்டும் கம்ப்யூட்டரை இயக்கிப் பார்க்கவும். விண்டோஸ் வழக்கம்போல இயங்கத் தொடங்கினால், அந்த சாதனத்தின் ட்ரைவர் பைலுக் கும், விண்டோஸ் இயக்க பைலுக்கும் பிரச்னை உள்ளது என்று அறிய கிடைக்கும்.

இதே போல ஏதேனும் கேம்ஸ் இன்ஸ்டோல் செய்திருந்தாலும், நீக்கிப் பார்க்கவும். கண்ட்ரோல் பேனலில் Add/Remove Programs மூலம் நீக்கலாம். பிரச்சினை புதிதாக இணைக்கப்பட்ட சாதனம் அல லது சொப்ட்வேர் மூலம் இல்லை என்றால், உங் கள் விண்டோஸ் ரெஜிஸ்ட்ரி ஏதோ ஓர் இடத்தில் கெட்டுப் போயிருக்கலாம்.

ரீ பூட் செய்வதன் மூலம் ரெஜிஸ்ட்ரி தானே சரி செய்து கொள்ளும் வாய்ப்பு உண்டு. ரெஜிஸ்ட்ரி பைலை அண்மைக் காலத்தில் பேக் அப் செய்து வைத்திருந்தால், அதனை, இந்த ரெஜிஸ்ட்ரி பைல் உள்ள இடத்தில் கொப்பி செய்து இயக்கலாம். இல்லையேல் விண்டோஸ் இயக்கத்தினை மீண்டும் இன்ஸ்டோல் செய்வதனை தவிர வேறு வழியில்லை.

# புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மக்கள் மீள்குடியேற்றம்

(முல்லைத்தீவு)

வவுனியா செட்டிக்குளம் நலன்புரி முகாமில் தங்கியுள்ள புதுக்குடியிருப்பு மல்லிகைத்தீவு கிராமத்தைச் சேர்ந்த மக்கள் சொந்த இடத்தில் நாளை திங்கட்கிழமை மீள்குடிமர்த்தப்படவுள்ளனர்.

இதில் கதிர்காமர் நலன்புரி முகாமிலுள்ள 96 குடும்பங்களைச் சேர்ந்த 297 பேரும் ஆனந்த குமாரசாமி நலன்புரி முகாமிலுள்ள 78 குடும்பங்களைச் சேர்ந்த 272 பேருமாக 174 குடும்பங்களைச்சேர்ந்த 569 பேர் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இம் மக்கள் 12 பேருந்துகளிலும் இவர்களது உடமைகள் 20 பாரஊர்திகளிலும் ஏற்றிச் செல்லபடவுள்ளனர்.

மேலும் இம்முகாமிலுள்ள புதுக்குடியிருப்பு மேற்கு கிராம அலுவர் பிரிவைச்சேர்ந்த 300 குடும்பங்களைச் சேர்ந்த 974 பேர் சொந்த இடத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இதில் கதிர்காமர் நலன்புரி முகாமில் உள்ள 129 குடும்பங்களைச்சேர்ந்த 411பேரம், 171 குடும்பங்களைச் சேர்ந்த563பேரும் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இம்மக்கள் 20 பேருந்துகளிலும் உடமைகள் 27பாரவூர்த்திகளிலும் அழைத்து வரப்படவுள்ளனர்.

இவ் இரு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்களும் கைவேலி கணேச வித்தியாலயத்திற்கு அழைத்து வரப்பட்டு குறிப்பிட்ட அன்றைய தினங்களில் அவ்வவ் கிராமமக்களிடம் குடும்ப பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு அதன்பின்னர் சொந்த இடத்தில் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இவர்களுக்கு 2லீற்றர் மண்ணெண்ணெய், சமைத்த உணவு, உலர் உணவுப் பொருட்கள் என்பன மாவட்டச் செயலகத்தினால் வழங்கப்படவுள்ளது (04)

# அடிக்கடி தடைப்படும் மின்சாரம் உயர்தர மாணவர்கள் பாதிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பிரதேசத்தில் முன்னறிவித்தலின்றி இரவு வேளைகளில் மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதால் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்கள்பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக மாணவர்களின் பெற்றோர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இரவு வேளைகளில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதாகவும் அதிகாலை 3 மணிமுதல் 7 மணிவரை மின்சாரம் தடைப்பட்டிருப்பதாகவும் இதனால் பரீட்சைக்கு படிக்கின்ற மாணவர்கள் மண்ணெண்ணெய் விளக்கில் படிக்கவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

க.பொ.த உயர்தரப்பரீட்சை நிறைவடையும் வரையாவது மின்விநியோகம் ஒழுங்கான முறையில் இடம்பெற்றால் மாணவர்கள் சிரமமின்றி கல்விகற்கக்கூடியதாக இருக்கும் என பெற்றோர்கள்கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கைதடி மேற்கு பிரதேசத்திலும் இவ்வாறு இரவு வேளைகளில் மின்தடைப் படுவதாகவும் குறிப்பாக இரவு வேளையில் குறிப்பிட்டநேரத்தில் தடைப்படும் மின்சாரம் அதிகாலையே மீண்டும் வருவதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (109)

# கிளி.புதிய அஞ்சல் அலுவலகத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி

(கிரு-சிகரம்)

போரினால் முற்றுமுழுதாக அழிவடைந்த கிளிநொச்சி அஞ்சல் அலுவலகத்தின் புதிய கட்டடம் செப்டெம்பர் மாதம் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட என்றிப் திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் விஜயகுமார் தெரிவித்தார்.

1996இல் நடைபெற்ற யுத்தத்தின்போது அஞ்சல் அலுவலகத்தின் பாதிக் கட்டடம் முற்றாக சேதமடைந்தது. இந்த நிலையிலேயே தொடர்ந்து தனது சேவைகளை அஞ்சல் அலுவலகம் வழங்கி வந்தது.

இந்நிலையில், மீண்டும் போர் உக்கிரமடைந்த காலப்பகுதியான 2008ஆம் ஆண்டு இறுதியில் அஞ்சல் அலுவலகத்தின் கட்டடம் முற்றாக அழிவடைந்தது.



இதனையடுத்து, தற்போதய சமாதான சூழலில் கிளிநொச்சி மாவட்டம் மிக விரைவாக அபிவிருத்தி கண்டுவரும் நிலையில், அஞ்சல் அலுவலகம் முதலில் இயங்கிவந்த அதே இடத்திலேயே, பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வடக்கின் துரித மீட்சித்திட்டத்தின் கீழ் 46 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கபட்டு வருகின்றது.

இந்தக் கட்டட நிர்மாணப் பணிகள் 2011 ஜனவரி 11ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. இதனபடி 2011செப்டெம்பர் 08 திகதியுடன் நிறைவடையவேண்டிய கட்டட நிர்மாணப் பணிகள் ஒப்பந்தக்காரர்களின் அசமந்தப் போக்கு காரணமாக இழுபறியில் இருந்ததாகவும், தற்போது தமது நேரடிக்கண்காணிப்பின் கீழ் நடைபெற்றுவந்த கட்ட நிர்மாணப் பணிகள் நிறைவுக் கட்டத்தை எட்டியுள்ளதாகவும் இதன்படி, கிளிநொச்சி அஞ்சல் அலுவலகம் செப்டெம்பர் மாதம் மக்கள் பாவனைக்குத் திறந்துவைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.



சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஏற்பாட்டில் சந்நிதியான் அடியார்கள் கதிர்காமத்திற்கான தல யாத்திரையை மேற்கொண்டபோது அதில் கலந்து கொண்ட அடியார்கள் ஆச்சிரம பீடாதிபதி மோகனதாஸ் சுவாமிகள் ஆகியோர் கதிர்காம முருகன் ஆலயத்தில் நிற்பதைக் காணலாம். (116)



# பெற்றோருக்கான விழிப்புணர்வுக் குறிப்பு

ஜே.பி.ஏ.றஞ்யித்குமார்

சிறுவர் பாதுகாப்பு இணைப்பாளர் (வட-கிழக்கு)

LEADS

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை யாழ் செயலகத்துடன் இணைந்து LEADS நிறுவனம் நடாத்தவிருக்கும் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு விழிப்புணர்வுக் கண்காட்சி நல்லூர் ஆலய முன்றலில் இம்மாதம் 15ம் 16ம் 17ம் திகதிகளில் நடைபெறவுள்ளதையொட்டி இக்கட்டுரைத்தொடர் இடம் பெறுகின்றது

➢ *உறவைத் தன்னுடைய வசதிக்கு ஏற்றவாறு கையாளுதல்*

இது துஷ்பிரயோகி பாலுறவில் ஈடுபடுவதற்கான வழிகளைத் தேடுவதோடு சம்பந்தப்பட்டது. துஷ்பிரயோகி சிறுவரின் பலவீனத்தைப் பயன்படுத்தி சிறுவர் மேல் ஆதிக்கம் செலுத்துவார். உதாரணமாக ஒரு சிறுவர் தன் தந்தையின் மேல் அதிக பயம் வைத்திருந்தால் அச்சிறுவரை, தந்தைக்கு கோபம் வரும் படியான காரியத்தைச் செய்ய வைத்து பின்னர் அதனைத் தந்தையிடம் கூறுவதாகக் கூறி, பயம் காட்டி சிறுவரைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்வார். அவர்கள் வேறு வகையான அச்சுறுத்தல்களையும் உபயோகிக்கலாம். அவையாவன,

- "அவர் என்னைக் கொல்லுவதாக கூறினார்"
- "அவர் ஒரு கத்தியைக் காட்டி என்னை அச்சுறுத்தினார்"
- "எமது குடும்பம் உடைந்து விடும் என்று கூறினார்"
- "அவர் தன்னைத் தானே சுட்டுக் கொள்வ தாக கூறினார்"

சில சம்பவங்களில் துஷ்பிரயோகி சிறுவரை அச்சுறுத்தும் நோக்கத்தோடு சிறுவரின் செல்லப் பிராணியை கொன்று விடுகின்றனர்.

*வேறு அச்சுறுத்தல்களாவன ;*

"நான் இழிந்தவனும் ஒரு விபச்சாரியும் என்று எல்லோரும் கூறுவர் என்று கூறினார்"

"நான் மிகவும் கண்டிப்பானவர்"

"அவர் என்னுடைய மாமா நான் அவருக்கு பயத்திலிருந்தேன்"

"நான் உண்மையாலும் அவருக்கு விருப்பமில்லை. அவர் எந் நேரமும் எனக்கு
புத்திமதிகளைக்கூறுவதோடு அவரை அப்பா என்று கூப்பிட சொலலும்போதும் அவர் மேல் சரியான கோவத்தில் இருந்தேன்.

துஷ்பிரயோகிகள் உடல் ரீதியான வலிமையை உபயோகித்து அல்லது தமது சொல்/செயல் மூலம் சிறுவர்களை அச்சுறுத்துகின்றனர். எவ்வாறு சிறுவர்களைக் கட்டாயப்படுத்தினார்கள் என்று துஷ்பிரயோகிகளிடம் கேட்ட போது அவர்கள் அதனை மறுதலித்தார்கள். எப்படியேனும் அவர்கள் கதைத்த விதத்திலிருந்து அவர்கள் தங்கள் வலிமையை சிறுவர்கள் மேல் உபயோகித்துள்ளனர் என்று எமக்கு தெளிவாகின்றது.

பாலியல் துஷ்பிரயோகத்தின் பாதிப்புக்கள்

1. உடல் ரீதியான
2. உளரீதியான
3. நடத்தை ரீதியான

உடல் ரீதியான பாதிப்புக்கள்/அறிகுறிகள் :

- ஊமைக்காயங்கள் அல்லது பாலியல் உறுப்புக்களில், மார்பு, வாய், தொடை போன்ற பிரதேசங்களில் ஆபத்தான காயங்கள் காணப்படுதல்.
- சிறுநீர் கழிக்கும் போது நோ அல்லது அசௌகரியமான நிலை ஏற்படுதல்.
- பாலியல் உறுப்புக்களில் இருந்து இரத்தம் வடிதல்.
- பாலியல் உறுப்புக்களில் நோ அல்லது சொறி ஏற்படுதல்
- நித்திரைக் கோளாறுகள் ஏற்படுதல். - பயம் காரணமாக
- தீய கனவுகள், திடீரென முன்னடைந்த சம்பவம் தற்பொழுது நடப்பது போல் அனுபவித்தல். (Flash backs)
- பாலியல் ரீதியான தொற்று நோய்கள் (STDs)
- கர்ப்பமடைதல்
- எச்.ஐ.வி/எயிட்ஸ் (HIV/AIDS) – (Acquired Immune Deficiency Sysdrome)

5 வயதிற்கு குறைந்த சிறுவர்கள்

- பாதுகாப்பு அற்ற அல்லது பய உணர்வோடு பெற்றோர்களைப் பற்றிக்கொள்ளல்
- குறிப்பிட்ட நபரைக் க்ண்டதும் அதிகளவு பயம் காட்டுதல்
- ஆடைகளை கழற்றும் போது விஷேசமாக உள்ளாடைகளை கழற்றும் போது அந்தரப்படுவார்கள்.
- முந்தின வளர்ச்சி கட்டத்துக்குரிய நடத்தையைக் காட்டுதல்.
- சாதாரணமாக எதையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வத்திற்கு மாறாக, தமது வயதிற்கு ஒவ்வாத பாலியல் நடத்தையுடையவர்களாக இருப்பார்கள். அவர்கள் மற்றைய பிள்ளைகளுடன் அல்லது விளையாட்டுப் பொருட்களுடன் விளையாடும் போது பாலியல் ரீதியான நடத்தையை வெளிக்காட்டுவார்கள்.
- பின் வாங்கல் ஏற்படும், சாப்பிடுவதை விட்டு விடுவார்கள், அக்கடி தீய கனவுகளை காண்பார்கள், ஏற்கனவே காய்ந்திருந்தவர்கள் மீண்டும் படுக்கையை நனைப்பார்கள்.
- வெறுமையாக உற்றுப் பார்த்தல், சந்தோஷமின்றி கவலையாக இருத்தல், மனக்குழப்பம், கவலை.
- சிறுவர்களுடன் சேர்ந்து செய்யும் நடவடிக்கைகளை நிறுத்துதல். உதாரணமாக கதைகளைக் கேட்டலோ, அல்லது கதை சொல்லுதலோ அல்லது விளையாட்டு விளையாடுவதோ.

ஒரு இரகசியத்தைப் பேணுவது போல் சங்கடமாக அல்லது கவலையாக காணப்படுவார்கள் ஆனால் காரணம் என்னவென்று கூற மாட்டார்கள்.

(மிகுதி தொடரும்...)

# மாற்றம் கண்டு வருகிறது நெடுந்தீவு சாதனை படைக்கிறது பிரதேச சபை



## மனம் திறந்து பேசுகிறார் தவிசாளர்

கடந்த 2011 இல் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எமது கட்சி (ஈழமக்கள் ஜனநாயக்கட்சி) இணக்க அரசிலின் வெளிப்பாடாக ஐக்கிய மக்கள் சுகந்திரக்கூட்டமைப்பு அமைப்பின் அங்கத்துவ கட்சியாக தேர்தல் களத்தில் போட்டியிட்டது. 3082 வாக்காளர்களைக் கொண்ட 47.5 சதுரகிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டதுமான நெடுந்தீவு பிரதேச சபையின் ஒன்பது உறுபபினர்களுக்காக ஈழமக்கள் ஜனநாயக்கட்சி தலைமையில் பன்னிரண்டு போட்டியாளர்களை ஐக்கிய மக்கள் சுகந்திரக்கூட்டமைபபு அமைப்பின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடவைத்தோம். நாம் மக்களிடம் பொய் வாக்குறுதியளித்து வாக்கு கேட்கவில்லை. ஒரு பிரதேச சபையால் செய்யக்கூடிய விடயங்களையே மக்களிடம் கொண்டு சென்றோம். இப்பிரதேச சபையின் தவிசாளர் தானியேல் றெக்சியன் என்கிறார்.

தேர்தல் முடிவுகளின்படி எமது தலைமையில் எட்டு வேட்பாளர்கள் வெற்றிபெற்று நெடுந்தீவு பிரதேச சபை உறுப்பினர்களாக தெரிவாகினோம். மாற்றுக் கட்சியிலிருந்து ஒரு அங்கத்தவர் வருகை தராதநிலையிலும் நெடுந்தீவு பிரதேசசபையின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்றோம்.

நடைமுறைக்கு சாத்தியமானதும் இணக்க அரசியலினூடாகவும் வெற்றிப்பாதையை நோக்கிய பயணத்தில் ஒருவருடத்திற்குள் தவிசாளரகிய நானும் என்சக உறுப்பினர்கள் எழுபேரினதும் கூட்டுழைப்பினால் எமது நெடுந்தீவு பிரதேச சபை வெட்டுக்களி குளம் புனரமைபபு, பெரியகளிக்குளம் புனரமைப்பு, தெற்பட்டைக்குளம் புனரமைப்பு, வெல்லைக்களி புனரமைப்பு, கேணிகள் ஆழமாக்கி துப்பரவு செய்தது, குமுதினி நினைவுத் தூபி மண்டபம் , இறங்குதுறை மண்டபம், மாவிலி அலங்கார வளைவு புனரமைப்புச் செய்தமை, கொல்களம் அமைத்தது, நெல்வரை விதானையான் மகன் கிணற்றடி வீதி புனரமைத்தது, நெடுந்தீவு கிழக்கு தீர்த்தக்கரை மணடபம் அமைத்தது அலைஓசை கடற்தொழிலாளர் சங்கத்துக்கு குடிநீர்தொட்டி அமைத்தல், ஆவூர் சனசமூக நிலையம் புனரமைப்பு, விகாயடி தெற்கு கூடலை வீதி திருத்தியது, முருகன் கோவில் கோபாலபிட்டி வீதி திருத்தியமை, பிரதான நீர்க்குழாய் மாற்றியமை, பொதுநூலக மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைத்தது. புதிய கிணறு ஒன்று அமைத்ததும், பழைய கிணறு ஆறும் புனரமைத்ததும் மத்தி பெருக்கடி பிள்ளையார் கோபுரப பனரமைப்பு, புனித தோமையார் ஆலயம் ஒலிபெருக்கி, சீக்கிரியாம்பள்ளம் அ.த.க.வித்தியாலய சுற்றுமதில், யா:.நெடுந்தீவு மங்கையற்கரசி வித்தியாலய மடிக்கணினி, சுப்பிரமணிய வித்தியாலய வகுப்பறை மறைப்பு, வைத்தியசாலை துவிச்சக்கரவண்டி தரிப்பு நிலையம், சென்ஜேண்ஸ் முன்பள்ளி தளபாடம், சென் ஜோன்ஸ், சென் அன்ரனீஸ், ஸரார், உதயசூரியன், சென் அன்ரனீஸ் யுத், பல்துறை, ஐக்கியதீபம், விளையாட்டுக்களகங்களுக்கான பெண்களுக்கான விளையாட்டு உடை, ஆலமாவணப்பிள்ளையார் கோவில் புனரமைப்பு நிதி, மாவிலி துறைமுகம் ஆளமாக்குதல். குடவிலி, வெல்லை, காளாமுனை மீன்பிடிதுறைமுகங்கள் புனரமைப்பு, விவசாய சங்கங்களுக்கான உழவு இயந்திரம் வழங்கப்பட்டது, பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு லொறி, கடன் என்பனவும், நெடுந்தீவு பிரதேச சபைக்கு உழவு இயந்திரம், தண்ணீர் வவுசர் என்பன பெறப்பட்டது, புதிய பஸ்வண்டி பெறப்பட்டது, இடம்பெயர்ந்தவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகள் வழங்கியமை, கடற்தொழிலாளர் சமாஜத்துக்கு கடனுதவி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உதவியுடன் மாவட்ட வைத்திய அதிகாரி நியமனம், மற்றும் தாதிய உத்தியோகத்தர் நியமனம் ஆகியவற்றை பெற்றுக் கொடுத்தோம்.

அபிவிருத்தி நோக்கிய பயணத்தில் ஒருவருடத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளோம். எமது சபையில் எதிர்க் கட்சி ஒன்று இருந்தாலும் அவர் எமது சபை நடவடிக்கை யில் பங்கேற்காதது மனவருத் தப்பட வேண்டிய நிலையிலும் நாம் எட்டுபேரும் ஒரு குடையின் கீழ்தான் செயற்பட்டுக் கொண்டு இருக்கிறோம். காரணம் நாம் எமது சபைக்குட்பட்ட விடயங்களையே கையாள்கின்றோம். சபை மாதாந்தக் கூட்டங்கள் ஆரம்பித்தவுடன் எங்கள் எட்டு பேரின் மனங்களிலும் எப்படி எமது சபைக்குட்பட்ட அபிவிருத்தியில் பின்தங்கிய பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதும் அதனை விரைவாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவே நாம் உன்னிப்பாக ஆராய்ந்து தீர்மானங்களை நிறைவேற்றி அதனை சிறப்பாக அமுலாக்கியும் வருகின்றோம்.

தீவகப் பிரதேச சபைகள் தவிர்ந்த ஏனைய சபைகளினைப் போன்று நாம் மக்களிடம் சுயநிர்ணயம் கேட்டு மக்களை ஏமாற்றுகின்றவர்களல்ல. நாம் குறுகிய நோக்குக் கொண்டவர்களல்ல. தூரநோக்கினைக்கொண்டு நாம் செயற்பட்டு வருகின்றோம். எமது தலைவர் கௌரவ டக்ளஸ் தேவானந்தாவின் அரசியல் பயணத்தில் நிச்சயமாக தமிழ்பேசும் மக்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் கிடைக்குமென்ற நம்பிக்கை எம[illegible]குண்டு என்றும் தெரிவித்து[illegible]ளார்.

### இஸட் புள்ளி விவகாரம் சூடு பிடிக்கிறது

(கொழும்பு)

இஸட்புள்ளி கணிப்பீடு தொடர்பாக மேலும் ஐந்து அடிபபடை உரிமை மீறல் மனுக்களை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு அனுமதித்தது.

22.07.2012 ஆம் திகதி வெளியிடப்பட்ட இஸட் புள்ளி பட்டியல் தொடர்பாக ஏற்கனவே 33 மாணவர்களின் மனுக்களை ஆகஸ்ட் 6 ஆம் திகதி உயர் நீதிமன்றம் விசாரணைக்கு அனுமதித்தமை குறிப்பிடத்தக்கது.

பிரதம நீதியரசர் ஷிராணி ஏ பண்டாரநாயக்க, நீதியரசர்கள் என்.ஜி. அமரதுங்க, கே. ஸ்ரீபவன் ஆகியோர் கொண்ட நீதியரசர்கள் குழாம் மேற்படி மனுக்கள் தொடர்பான வாதங்களை முன்வைப்பதற்கு செப்ரெம்பர் 3 ஆம் திகதி நாள் குறித்தனர்.

### விளையாட்டு விழா

(கொழும்பு)

காரை கிட்ஸ்பார்க் ஆங்கில மொழி மூல சிறுவர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு தலைவர் ரி.சத்தியானந்தன் தலைமையில் முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண காணி ஆணையாளர் பி.தயானந்தன் பிரதம விருந்தினராகவும் தீவக கல்வி வலய பிரதிக் கலவிப் பணிப்பாளர் ஐ.புவனேந்திரன் சிறப்பு விருந்தினராகவும் தொழிலதிபர் புரவலர் எஸ்.சிவஞானம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். (10)

## இலங்கை தமிழ் மூதாட்டியை நாடு கடத்தியது கனடா

இலங்கை உறவினர்கள் எவரும் இல்லாத காரணத்தால் 70 வயதுடைய மூதாட்டி ஒருவர் கனடாவின் ரொரொன்ரோவிலிருந்து நாடு கடத்தப்பட்டுள்ளார்.

இலங்கை தமிழரான குணபூசனி கந்தசாமி என்ற மூதாட்டியே இன்னும் சிலருடன் நேற்றுமுன்தினம் நாடு கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் நாடு கடத்தப்பட்ட விமானத்தில் கனேடிய எல்லை பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் தாதியர் உதவிக்காக சென்றுள்ளதாக கனேடிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமக்கு வழங்கப்பட்ட தவறான ஆலோசனையின் கீழ் புகலிடக் கோரிக்கைக்கு விண்ணப்பித்ததால் இவருடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது தாயை நாடு கடத்த வேண்டாம் என குணபூசனி கந்தசாமியின் மகள்கள[illegible] சந்திராதேவி உதிரகுமரன் மற்றும் தட்சா உதிரகுமரன் ஆகியோர் கோரிக்கை விடுத்த போதும் அவர் நாடுகடத்தப்பட்டுள்ளார்.

## முரசின் இன்றைய பலன்

(12.08.2012 - ஞாயிற்றுக்கிழமை)

நந்தன வருஷம் ஆடி மாதம் 28 ஆம் திகதி. தசமி மாலை 6.20 வரை.
நட்சத்திரம் ரோகிணி பிற்பகல் 01.34 வரை. சித்தயோகம்.
இராகுகாலம் 4.35 - 6.05 வரை. சுபநேரம் 09.05 - 10.35 வரை.
எமகண்டம் 12.05 - 1.35 வரை. குளிகன் காலம் 3.05 - 4.35 வரை.
நல்லூர் முருகன் கைலாச வாகனம்

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பணவரவு, வாகன அனுகூலம், அதிகாரிகள் பாராட்டு, சுபகாரியங்கள். |
| ரிஷபம் | பொருள் சேர்க்கை, திட்டங்கள் ஈடேறும், குடும்பத்தில் உறவு, உறவினர்களால் நன்மை. |
| மிதுனம் | வீண் முயற்சி, சஞ்சலங்கள் அகலும், பொன் பொருள் சேரும், அனுசரித்துப் போகவும். |
| கடகம் | அதிகாரிகள் உதவி, கழுத மூல நன்மை, திருப்திகரமான வருவாய், அலைச்சல் மிகுதி. |
| சிம்மம் | புகழ் வந்து சேரும், பொன் பொருள் சேரும், கல்வியில் மேன்மை, மருத்துவச் செலவுகள். |
| கன்னி | பயண நிறைவு, குடும்பத்தில் கசப்பு, தூர தேச நினைவுகள், தொழில் தடை அகலும். |
| துலாம் | முன்தினம் போல் கவனம் தேவை, குடும்பத்தில் விரக்தி, மேலதிகாரிகள் கோபம், வெற்றி. |
| விருச்சிகம் | பெரியோர் ஆசி, கடன் தொல்லை தீரும், குடியிருப்பில் மாற்றம் , போக்குவரத்தில் கவனம். |
| தனுசு | வெற்றிகள், உறவினர் ஆதரவு, அரச நன்மைகள், பொதுச் சேவையில் ஈடுபாடு. |
| மகரம் | சுகவீனம், குடும்பத்தில் கருத்து ஒற்றுமை, கடின உழைப்பு, எதிர்பாராத தனவரவு. |
| கும்பம் | எழுத்துமூல நன்மை, தாராளமான பணப் புழக்கம், போக்குவரத்தில் கவனம், அலைச்சல். |
| மீனம் | கால தாமதம், போக்குவரத்தில் கவனம், வியாபாரத்தில் இலாபம், கடன் தொல்லை தீரும். |

## ரமழான் சிந்தனை



ரஸூல் (ஸல்) கூறியுள்ளார்கள் இஃதிகாப் இருப்பவருடைய விஷயத்தில் அவர் பாவங்களை விட்டும் பாதுகாக்கப்படுகின்றார்.

நற்செயல்கள் அனைத்தையும் செய்பவரைப் போன்ற நன்மைகள் கிடைக்கின்றன.

(105) (நூல் : மிஷ்காத்)

உயிரியல்

க.பொ.த.(சாதாரணதர)
அலகு ரீதியான குறிப்புகள்

# கல்வி முரசு

34 T II
Grade - 10

ஆசிரியர் :
S.T.ஜனார்த்தனன்
(Bsc)

*(தொடர்ச்சி).....*

102) மேலணி இழையம் என்றால் என்ன?

◆ உடலின் உள்ளான வெளியான மேற்பரப்புக்களை மூடிக் காணப்படுகின்ற அடித்தள மென்சவ்வின் மீது கலங்கள் ஒரு கலப்படையாக ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும் இழையம் எளிய மேலணி இழையம் எனப்படும்.

103) மேலணி இழையத்தின் தொழல்கள் எவை?

- உள்ளான அமைப்புக்களுக்கு பாதுகாப்பை வழங்குதல்
- சுரத்தல்
- அகத்துறிஞ்சல்

104)

| மேலணி இழையங்கள் | அமைப்பு | அமைவிடம் |
|---|---|---|
| தனிச்செதில் மேலணி | கலங்கள் தட்டையானவை | சுவாசப்பையின் சிற்றறைகள் |
| | கரு மையத்தில் காணப்படும் | சிறு நீரகத்தின் போமனிர் உரை |
| | கல விளிம்புகள் ஒழுங்கற்றுக் காணப்படும் | குருதிக் குழாய்களின் அகவணி |
| | அடித்தள மென்சவ்வின் மீது ஒரு படையாக கலங்கள் காணப்படும். | |
| எளிய செவ்வகத் திண்ம மேலணி | கலங்கள் கனவடிவானவை அல்லது செவ்வகத் திண்ம வடிவானவை ◆ கலத்தின் மத்தியில் கோண வடிவான கரு காணப்படும். ◆ மேற்பரப்புத் தோற்றத்தில் கலங்கள் பல்கோண அல்லது (அணு கோண) வடிவில் காணப்படும். | உமிழ் நீர் சுரப்பிற்கான் வியர்வைச் சுரப்பி தையிரோயிட் சுரப்பி சிறுநீரகத்தின் அண்மையான சேய்மையான மடிப்படைந்த சிறு குழாய் |
| எளிய கம்ப மேலணி | ◆ கலங்கள் உயரமானவை ◆ ஒடுங்கியது ◆ அதிக குழியவுருவை உடையவை. ◆ வெண்டிக்கலங்கள் காணப்படலாம். ◆ சுயாதீன மேற்பரப்பில் பிசிர்களை கொண்டிருக்கலாம். | ◆ இரைப்பை ◆ சிறுகுடல் ◆ சுவாசச் சிறுகுழாய்கள் ◆ சூலகக் கான் |
| போலிப்படை கொண்ட மேலணி | ◆ மென்சவ்வின் மீது கலங்கள் ஒரு வரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும். கலங்களில் கருக்கள் வெவ்வேறு மட்டங்களில் காணப்படும். | வாதனாளியின் அகவறி நாசிக் குழி |
| படை கொண்ட மேலணி | ◆ மிக வெளிப்புறமான கலங்கள் கெரற்றீன் ஏற்றம் அடைந்து காணப்படும். ◆ கலங்கள் பல படைகளில் ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கும். | ◆ வாய்க்குழி ◆ யோனிமடல் ◆ தொண்டை ◆ களம் |
| நிலை மாறுகின்ற மேலணி | ◆ கலங்கள் அடித்தள மென்சவ்வின் மீது பல படைகளில் ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கும். ◆ கலங்கள் தமது வடிவத்தை மாற்றக் கூடியவை. ◆ இழுவை அதிகம் ஈடு கொடுக்கக்கூடியவை. ◆ விரிவிற்கு இடமளிக்கக் கூடியவை. | ◆ சிறுநீர்ப்பை ◆ சிறுநீர்க்குழாய் ◆ சிறுநீரக இடுப்பு |

105) தொடுப்பிழையம் என்றால் என்ன?

◆ அங்கங்கள் அல்லது இழையங்களை ஒன்றாகக் கட்டும் தொழிலில் ஈடுபடுவதும் அதிகளவு தாயம், கலங்கள், நார்கள் என்பவற்றால் ஆக்கப்பட்டதுமான இழையம் தொகுப்பிழையம் எனப்படும்.

இது இடைத்தோற்பிடை எனும் மூலவுயிர்ப்படையில் இருந்து உருவாக்கப் பட்டது.

106) தொகுப்பிழையத்தின் வகைகள் எவை?

- சிற்றிட விழையம்
- கொழுப்பிழையம்
- வெண்நாரிழையம்
- மஞ்சள் மீள் சக்தி இழையம்
- கசியிழையம்
- என்பு
- குருதி

107) என்பின் தொழில்கள் எவை?

- உடலிற்கு ஆதாரம் அளித்தல், உடலுக்கு வடிவத்தை வழங்குதல்.
- உடலின் உள்பகுதிகளை பாதுகாத்தல்.
- கல்சியம், பொசுபரஸ் அயன்களை சேமித்தல்.
- குருதிக்கலங்களை உற்பத்தி செய்தல்.
- தசைகள் இணைக்கப்படுவதற்கான முகப்புகளை வழங்குதல்.
- அசையில் உதவுதல்.
- கொழுப்பைச் சேமித்தல்.

108) உயிரங்கிகளின் தொகுதிகளும் அவற்றின் பிரதான தொழில்களும்

| தொகுதிகள் | தொகுதியிலுள்ள பிரதான அங்கங்கள் | பிரதான தொழில்கள் |
|---|---|---|
| சமிபாட்டுத் தொகுதி | குடல், ஈரல், சதையி | சமிபாடு அடையச் செய்தலும், உறிஞ்சலும். |
| சுவாசத் தொகுதி | வாதனாளி, சுவாசப்பைகள் | வாயுப்பரிமாற்றம் |
| குருதிச் சுற்றோட்டத் தொகுதி | இதயம், குருதிக்கலங்கள் | உடலின் பல்வேறு பகுதிகளுக்கும் உணவு, ஒட்சிசன் கடத்துதல் |
| கழிவுத் தொகுதி | சிறுநீரகங்கள், சிறுநீர்ப்பை | நைதரசன் கழிவுகளை வெளியேற்றுதல் |
| புலன் தொகுதி | கண், காது, மூக்கு | பாாவை, கேட்டல், மணத்தல் |
| நரம்புத் தொகுதி | மூளை, முண்ணான் | உடலில் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்கு தகவல்களை கடத்தல். |
| தசை, என்புத்தொகுதி | தசைகள், என்புகள் | உடற்பயிற்சி ஆதாரம், அசைவினை வழங்கல். |
| இனப்பெருக்கத் தொகுதி | விதைகள், சூலகங்கள் | இனப்பெருக்கத்தை நிகழ்ததி எச்சங்களை உருவாக்கல். |

தாவரக்கலத்திற்கும் விலங்குக் கலத்திற்கும் இடையிலான வேறுபாடுகள்

| விலங்குக் கலம் | தாவரக் கலம் |
|---|---|
| ஆக வெளிப்புறமாக கல மென்சவ்வு காணப்படும் | ஆக வெளிப்புறமாக கலச் சுவர் காணப்படும். |
| திட்டமான வடிவம் இல்லை | திட்டமான வடிவம் உண்டு. |
| பச்சையவுருமணி இல்லை | பச்சையவுருமணி உண்டு. |
| கரு மத்தியில் காணப்படும் | கரு கரையில் காணப்படும் |
| புன்மையத்தில் உண்டு | புன்மையத்தில் இல்லை. |
| புன்வெற்றிடம் இல்லை (குறைந்தளவில் சிறிய , புன்வெற்றிடம் உண்டு) | புன்வெற்றிடம் உண்டு. |

## அங்கிகளின் உடல் ஒழுங்கமைப்பு

◆ ஒவ்வொரு உயிர்க்கலத்தினுள்ளும் ஓரங்கியின் தொடர்ச்சியான நிலவுகைக்கு அவசியமான உயிரிரசானத்தாக்கங்கள் நடைபெறுகின்றன.
உதா:- கலச்சுவாசம், ஒளித்தொகுப்பு, புரதத்தொகுப்பு

◆ இவ்விரசாயனத்தாக்கங்களுக்காக அடிப்படைப் பதார்த்தங்களும் (Substates), விளைபொருட்களும் (End Products) கலத்திற்கும் சூழலிற்கும் இடையில் தொடர்ச்சியாக பரிமாற்றப்பட வேண்டும். இது குறிப்பிட்ட கலத்தின் மேற்பரப்பினூடாகவே (Cell Surface) நடைபெறுகின்றது.

◆ தனிக்கல அங்கிகளுக்கு தங்கள் கலமேற்பரப்பு, பதார்த்தப் பரிமாற்றத்திற்கு போதுமானதாக இருக்கின்றது.

◆ எனினும் பல்கல அங்கிகளுக்கு தங்கள் மொத்தக் கலங்களின் மேற்பரப்பு, மொத்தக் கலங்களின் பதார்த்தப் பரிமாற்றத்திற்குப் போதுமானதாக இல்லை.

◆ எனவே பல்கல அங்களின் இழையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.


◆ தாவரங்களின் இழையங்கள் ஒன்று சேர்ந்து அங்கங்களை உருவாக்கும். அங்கங்கள் ஒன்று சேர்ந்து தொகுதிகளை உருவாக்கும். தொகுதிகள் ஒன்று சேர்ந்து தனியனை (Individual) உருவாக்கும்.


◆ தனிக்கல அங்கிகளைப் போலல்லாது பல்கல அங்கிகளின் சிக்கற்தன்மை அதிகரித்துக் காணப்படுகின்றது. இச்சிக்கற் தன்மையிலிருந்து விடுபட தொகுதிகள் உதவி செய்கின்றன.


உதா:- சுவாசிக்க, சுவாசத் தொகுதி
கழிவகற்ற, கழிவகற்றற்தொகுதி
பதார்த்தக்கடத்தலுக்கு, சுற்றோட்டத்தொகுதி


◆ தனிக்கல அங்கிகளில் கலம், சூழலுக்கிடையிலான பதார்த்தப் பரிமாற்றம் பரவல் (Diffusion) மூலம் நடைபெறும்.

◆ எனினும் பல்கல அங்கிகளில் பரவலை விட திணிவுப் பாய்ச்சலே (Mass flow) மூலம் நடைபெறும்.
உதா:- குருதி, அமுக்கம் கூடிய இடத்திலிருந்து குறைந்த இடத்திற்கு பாயும்.







கொல்கியுடலின் முப்பரிமாண அமைப்பு


பச்சையவுருமணியின் முப்பரிமாண அமைப்பு


## கொல்கியுடலின் முப்பரிமாண அமைப்பு




நரம்புக்கலம்




மழமழப்பான தசையிழையம்




இதயத்தசையிழையம்




தொடுப்பிழைய உறைகள்








தெளிவாத் தெரியும் குறுக்குவரிகள்













ஒட்டுக்கலவிழையம்
நெடுக்குவெட்டுமுகம்




ஒட்டுக்கலவிழையம்
குறுக்குவெட்டுமுகம்


வல்லுருக்கலவிழைய நார்
நெடுக்கு வெட்டுமுகம்




வல்லுருக்கலவிழைய நார்
குறுக்குவெட்டுமுகம்




(தொடரும்...)

# தடையை மீறும் டெசோ
# கருணாநிதி சூளுரை



(சென்னை)


டெசோ மாநாடு திட்டமிட்டபடி நடைபெறுவதற்கு பொலிஸார் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கேட்டுக்கொண்டார்.

சென்னை ராயப்பேட்டை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் இன்று ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாடு (டெசோ) நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வந்தன. இந்நிலையில் இம்மாநாட்டுக்கு அனுமதி கொடுப்பது பற்றி பெலிஸார்தான் முடிவு செய்ய வேண்டும் என்று உச்ச நீதி மன்றம் தெரிவித்தது.

இதுபற்றி தி.மு.க. தலைவர் கருணாநிதி நிருபர்களிடம் கூறுகையில், டெசோ மாநாடு திட்டமிட்டபடி நடைபெறும். மாநாடு நடைபெறுவதற்கு பொலிஸ் ஆணையர் அனுமதி தருவார் என நம்புகிறோம். யார் பேச்சையும் கேட்டுக்கொண்டு பொலீஸ் செயல்படக்கூடாது.


காவல்துறை ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். மேலும் ஈழம் என்ற சொல்லை பயன்படுத்தக் கூடாது என்று யாரும் சொல்ல முடியாது. ஈழம் என்ற சொல் பழங்காலம் முதலே பயன்படுத்தப்பட்டு வருகிறது. மாநாட்டுப் பணிகள் 95 சதவீதம் நிறைவு பெற்றுவிட்டன என்றார்.

ஒருவேளை டெசோ மாநாட்டுக்கு பொலிஸார் அனுமதி தர மறுத்தால் தடையை மீறி மாநாடு நடக்குமா? என்று கேட்ட போது, தடைக்கற்களும் படிக்கற்களாகும் என்று கருணாநிதி கூறினார்.



சென்னை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் மத்திய அமைச்சர் விலாஸ்ராவ் தேஷ்முக்கை கேரள காங்கிரஸ் கட்சித்தலைவர் ரமேஷ் சென்னிதாலா சந்திக்க வந்தார். அப்போது மத்திய அமைச்சர் மு.க. அழகிரியைச் சந்தித்தார்.

# கூடங்குளம் அணு உலையில் எரிபொருள் நிரப்ப அனுமதி




(நெல்லை)

கூடங்குளம் அணு மின் நிலையத்தின் முதல் அணு உலையில் எரி பொருள் நிரப்ப இந்திய அணுசக்தி ஒழுங்குமுறை வாரியம் நேற்று முன்தினம் மாலை அனுமதி வழங்கியுள்ளது. நெல்லை மாவட்டம், கூடங்குளத்தில் இந்தியா, ரஷ்யா கூட்டு முயற்சியுடன் ரூ.13 ஆயிரத்து 500 கோடி மதிப்பீட்டில் 1000 மெகாவாட் உற்பத்தி திறனுள்ள இரண்டு அணு உலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

முதல் அணு உலைக்கான பணிகள் 99 சதவீதம் முடிந்த நிலையில் கடந்த டிசம்பர் மாதம் மின் உற்பத்தி தொடங்கப்பட இருந்தது. அப்பகுதி மக்கள் அணு மின் நிலையத்திற்கு எதிராக நடத்திய போராட்டத்தில் 6 மாதம் பணிகள் பாதிக்கப்பட்டன. கடந்த மார்ச் 19 ஆம் திகதி மீண்டும் பணிகள் தொடர்ந்தன. விரைவில் மின் உற்பத்தியை தொடங்குவதற்காக இந்தியாவின் 20 அணு மின் நிலையங்களில் இருந்தும் விஞ்ஞானிகள் வரவழைக்கப்பட்டனர்.

முதல் அணு உலையின் அழுத்த கலன் தறக்கப்பட்டு அதில் இருந்த மாதிரி எரிபொருள் அகற்றப்பட்டது. ராதாபுரம் தாலுகா, நக்கநேரியில் பேரிடர் மேலாண்மை பயிற்சி நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து முதல் அணு உலையில் எரிபொருள் நிரப்ப அனுமதி கேட்டு இந்திய அணு சக்தி ஒழுங்கு முறை வாரியத்திடம் கூடங்குளம் அணு மின் நிலையம் அனுமதி கோரியது.

விண்ணப்பத்தை பரிசீலித்த இந்திய அணுசக்தி ஒழுங்குமுறை வாரியத்தின் பாதுகாப்பு நிபுணர்கள் அடங்கிய குழு ஆய்வு செய்து அறிக்கை அளித்ததன் அடிப்படையில் அணுசக்தி ஒழுங்கு முறை வாரியத்தின் 107 ஆவது கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது





# சினிமாவில் புகைப்பிடித்தல் காட்சிகளுக்கு தடையில்லை

(சென்னை)

சினிமாவில் புகைப்பிடிக்கும் காட்சிகளுக்கு விதிக்கப்பட்ட தடை மற்றும் கட்டுப்பாடுகளை மத்திய அரசு விலக்கிக் கொள்ள முடிவெடுத்துள்ளது.

திரைப்படங்களில் புகை பிடிக்கும் காட்சிகள் இடம்பெறுவதற்கு மத்திய அரசு தடை விதித்து இருந்தது.நடிகர்களைத் தாண்டி, நடிகைகளும் ஏகாந்தமாக தம்மடிப்பது போல காட்சிகளை வைக்கும் அளவுக்கு முன்னேறி விட்டதால், திரையுலகினர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

முன்னணி நடிகர் நடிகைகளும் கண்டித்தனர். ஆனால் தடை உத்தரவை நடைமுறைப் படுத்துவதில் உறுதியாக இருந்தது மத்திய அரசு.



இந்தியச் செய்திகள்

நடிகர்கள் புகை பிடிப்பதை பார்த்து இளைய தலைமுறையினர் அப்பழக்கத்துக்கு அடிமையாவதால் அத்தகைய காட்சிகள் இடம்பெறக்கூடாது என அரசும் சமூக நல ஆர்வலர்களும் கூறினர்.

ஆனால் இப்போது தனது உத்தரவை மத்திய அரசு திடீரென வாபஸ் பெற்றுள்ளது. கதைக்கு தேவை என்றால் புகைபிடிக்கும் காட்சியை வைத்துக் கொள்ளலாம் என்று மத்திய தகவல் மற்றும் ஒளி பரப்பு துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. புகை பிடிக்கும் காட்சிகளை வைப்பதற்கு சில நிபந்தனைகளையும் விதித்துள்ளது.

படம் தொடங்கும் போது புகை பிடித்தல் உடல் நலத்திற்கு கேடு என்ற வாசகத்தை இடம்பெறச் செய்யவேண்டும். இடைவேளை விட்டு படம் தொடங்கும் போதும் இந்த வாசகம் இருக்க வேண்டும். புகை பிடிக்கும் காட்சி வரும் போதும் கொட்டை எழுத்தில் இந்த வாசகம் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது. இதனால் திரையுலகினர் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஆனால் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் இனி மேல் புகை பிடிக்கும் காட்சியில் நடிப்பதில்லை என 7 ஆண்டுகளுக்கு முன்பே முடிவெடுத்து அதைத்தொடர்ந்து பின்பற்றி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஊழலுக்கு பதக்கம் என்றால் இந்தியாவுக்கு தான் – பாபா ராம்தேவ்

(சென்னை)


ஒலிம்பிக்கில், விளையாட்டுப் போட்டிகளுக்கு பதக்கம் அளிக்கப்படுவது போல், ஊழலுக்கும் பதக்கம் அளிக்க முடிவு செய்தால், அந்தப் பதக்கம் நிச்சயம் இந்தியாவுக்கு தான் கிடைக்கும். அந்தளவுக்கு ஊழல் நம் நாட்டில் நாறிப் போய் கிடக்கிறது என, யோகா குரு ராம்தேவ் குற்றம் சாட்டினார்.

வெளிநாடுகளில் இந்தியர்கள் பதுக்கி வைத்திருக்கும், கறுப்புப் பணத்தை மீட்டுக் கொண்டு வர வலியுறுத்தி, யோகா குரு பாபா ராம்தேவ், டில்லியில் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

ராம்லீலா மைதானத்தில், மூன்று நாட்கள் மட்டுமே உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ள அவர், இரண்டாவது நாளான நேற்று, மைதானத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் பேசியதாவது,

ஊழலை ஒழிப்பதற்கு, வலுவான லோக்பால் மசோதாவை மத்திய அரசு கொண்டு வர வேண்டும் வெளிநாடுகளில் உள்ள வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும், இந்தியர்களின் கறுப்புப் பணத்தை மீட்டுக் கொண்டு வர வேண்டும் சி.பி.ஐ. அமைப்புக்கு முழு சுதந்திரம் அளிக்க வேண்டும் என்ற, மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து, இந்த உண்ணாவிரதம் நடத்தப்படுகிறது.

ஒலிம்பிக்கில், பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. அவற்றுக்கு பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. அந்த விளையாட்டுகளில், ஊழலையும் சேர்த்துக் கொண்டால்,



நிச்சயம் அதற்கான தங்கப்பதக்கம் இந்தியாவுக்கு தான் கிடைக்கும். அந்தளவுக்கு இந்தியாவில் ஊழல் நாறிப்போய் கிடக்கிறது.

கறுப்புப் பணத்தை மீட்பதில் மத்திய அரசுக்கு ஆர்வம் இல்லை. கறுப்புப் பணம் எங்கெல்லாம் உள்ளது, எவ்வளவு உள்ளது, யார், யார் வைத்திருக்கின்றனர், எப்போது வெளிக்கொண்டு வரப்படும் என்ற தகவலையாவது வெளியிட்டால், நாட்டு மக்கள் தெரிந்து கொள்வர் அதைக்கூட செய்ய, அரசு மறுக்கிறது.சி.பி.ஐ. அமைப்புக்கு தன்னாட்சி அளிக்க வேண்டும். அந்த அமைப்பு, முழு சுதந்திரமாக செயல்பட வேண்டும். அரசியல்வாதிகள், ஆளும் பொறுப்பில் உள்ளவர்களின் தலையீடு இருக்கவே கூடாது. பிரதமர் நேர்மையானவர் என சொல்லப்படுகிறது. அது உண்மையெனில், கறுப்புப் பணத்தை, அவர் மீட்க வேண்டும். வலுவான லோக்பால் மசோதா கொண்டு வர வேண்டும்.இவ்வாறு ராம்தேவ் பேசினார்.

# லிபியாவில் மீண்டும் முளைவிடும் ஜனநாயகம்

## – பதவி ஏற்கிறார் புதிய ஜனாதிபதி



லிபியாவில் 35 ஆண்டுகள் ஜனாதிபதியாக இருந்த கடாபியின் ஆட்சிக்கு, போராட்டத்தின் மூலம் மக்கள் முடிவு கட்டினர்.

மேலும் போராட்டக்காரர்களினால் கடாபியும் கொல்லப்பட்டார். இதனையடுத்து தேசிய மாற்று கவுன்சிலிடம் ஆட்சி அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 200 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய நாடாளுமன்றத்திற்கு ஜனநாயக முறைப்படி தேர்தல் நடந்தது. அதில் 80 இடங்களை அரசியல் கட்சிகள் பிடித்தன.

120 இடங்களில் சுயேட்சை நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெற்றி பெற்றனர். இந்த நிலையில் தேசிய மாற்று கவுன்சில் கடந்த வியாழன் அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நாடாளு மன்றத்திடம் ஆட்சி அதிகாரத்தை ஒப்படைத்தது.

இதனைத் தொடர்ந்து புதிய ஜனாதிபதி தேர்தல் முறைப்படி நடந்து, அதில் முகமது மகரீப் 113 வாக்குகளுடன் வெற்றி பெற்றார். இவரை எதிர்த்து போட்டியிட்ட அலிஷிடான் 85 வாக்குகள் பெற்றார்.

புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள முகமது மகரீப் சர்வாதிகாரி கடாபியின் தீவிர எதிர்ப்பாளர் ஆவார். இவர் லிபியாவின் 2-வது பெரிய நகரமான பெங்காதியை சேர்ந்தவர்.

கடந்தாண்டு இங்கிருந்து தான் கடாபிக்கு எதிராக போராட்டம் தொடங்கியது. இந்த போராடடத்தை இவர்தான் தலைமை தாங்கி நடத்தி கடாபியின் ஆட்சியை முடிவுக்கு கொண்டுவந்தார்.


இவர் தேசிய முன்னணி கட்சியின் தலைவராகவும் இருக்கிறார். இவர் ஒரு பொருளாதார நிபுணர். இந்தியாவில் லிபியா தூதராகவும் பணியாற்றியுள்ளார்.

கடாபிக்கு எதிராக செயல்பட்டதால் கடந்த 1980ஆம் ஆண்டு முதல் அவர் நாடு கடத்தப்பட்டார்.

இது குறித்து அவர் கூறுகையில், என்னை ஜனாதிபதியாக தெரிவு செய்ததற்கு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இதை எனக்கு வழங்கப்பட்ட கௌரவமாக கருதுகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து லிபியாவில் புதிய அரசியல் சட்டம் அடுத்த ஆண்டு இயற்றப்பட உள்ளது. அப்போது புதிய பிரதமரும் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்படுவார்.

# எரிமலைப்பிளம்பின் எச்சம் பசுபிக்கடலில் முளைவிடும் பாறை



பசிபிக் பெருங்கடலில் சுமார் 26,000 சதுர கிலோ மீட்டர்கள் அளவுக்கு எரிமலை பாறை களால் ஆன பெரிய திட்டு ஒன்று மிதந்து வருவதாக நியூசிலாந்து கடற்படை தெரிவித்துள்ளது.

குறைந்த எடை கொண்ட நுரைக்கல்லின் சிறிய துண்டுகள் நெருக்கமாக இணைந்து இந்தப் பெரும் திட்டை ஏற்படுத்தியுள்ளன.

எரிமலையிலிருந்து வெளியான குழம்பு காற்றுக் குமிழிகளுடன் இறுகிப் போய் உருவான நுரைக்கல் படிமங்களே' பெரும் திட்டாக தற்போது மிதந்து வருகிறது.

இப்படியான ஒரு திட்டு கடலில் மிதந்து வருவதை தமது 18 ஆண்டுகால கடல் பயணத்தில் தான் கண்டதில்லை என்று நியூசிலாந்து கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த எரிமலை பாறைத் திட்டுக்கல் கடலில் பெரிய ஐஸ் படலம் மிதந்து வருவது போல இருந்தாலும், அதனால் கப்பல் துறைக்கு எந்த அபயாமும் இல்லை என்றும் கூறப்படுகிறது.

கடலுக்கு கீழே இருக்கும் எரிமலையிலிருந்து இந்தப் பாறைகள் வந்திருக்கலாம் என்றும் அறிவியல் அறிஞர்கள் கூறுகிறார்கள்

உலகச் செய்திகள்

# ஜப்பான் - தென்கொரியா விரிசலடையும் உறவு

## – டெக்ஷிமா தீவு யாருக்கு சொந்தம்

ஜப்பானும் தென்கொரியாவும் உரிமை கோரும் சர்ச்சைக்குரிய தீவொன்றுக்கு தென்கொரிய ஜனாதிபதி லீ மியூங் பேக் நேற்று திடீர் விஜயமொன்றை மேற்கொண்டமை இரு நாடுகளுக்கும் இடையில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஜப்பான் கடல் அல்லது கிழக்கு கடல் என அழைக்கப்ப டும் பகுதியில் இருநாடுகளுக்கும் இடையில் சுமார் அரைவாசி தூரத்தில் உள்ள இத்தீவு கொரியர்களால் டொக்டோ எனவும் ஜப்பானியர்களால் டெக்ஷிமா எனவும் அழைக்கப்படுகிறது. இருநாடுகளுமே இத்தீவுக்கு உரிமை கோரி வருகின்றன.



இந்நிலையில் தென்கொரிய ஜனாதிபதி லீ மியூங் பேக் அத்தீவுக்கு திடீர் விஜயமொன்றை ேற்கொண்டார். தென்கொரிய ஜனாதிபதியொருவர் இத்தீவுக்கு செல்வது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக் கது.

இவ்விஜயத்தினால் ஆத்திரமடைந்த ஜப்பானிய அரசாங்கம், தென்கொரியாவிலுள்ள தனது தூதுவரை திருப்பி அழைத்துள்ளது. அத்துடன் ஜப்பானுக்கான தென்கொரியாவின் தூதுவரை தனது அலுவலகத்திற்கு அழைத்த ஜப்பானிய வெளிவிவகார கொய்சிரோ கெம்பா ஜப்பானின் கடும் ஆட்சேபத்தை வெளிப் படுத்தியுள்ளார்.

# உலகசந்தையில் உணவுப்பொருட்களின் விலைகள் அதிகரித்துச்செல்கின்றன



உலகளவில் உணவு தானியங்கள் மற்றும் சர்க்கரையின் விலை ஜூலை மாதம் கடுமையாக உயர்ந்துள்ளதாக ஐ நாவின் அமைப்பு ஒன்று கூறியுள்ளது.

கடந்த ஜூலை மாதத்தில் மாத்திரம் கோதுமை, சோளம், கம்பு, போன்ற பல தானியங்களின் விலை 17 சதவீதம் உயர்ந்துள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பான FAO தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் ஏற்பட்ட வறட்சி மற்றும் ரஷ்யாவில் ஏற்பட்ட உற்பத்தி பிரச்சினைகளாலேயே இந்தக் கடுமையான விலையேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

உலகின் மிகப்பெரிய சர்க்கரை உற்பத்தி நாடான பிரேசிலில் மழை கரும்பு விவசாயத்தை பாதித்த காரணத்தால், சர்க்கரையின் விலையும் இது வரை இல்லாத அளவுக்கு உயர்ந்தது.

எனினும் அரிசியின் விலையில் எந்த மாற்றமும் இல்லை. குறிப்பிட்ட இந்த தானியங்கள் மற்றும் சர்க்கரை மட்டுமல்லாமல், உலகளவில் அனைத்து உணவுப் பொருட்களின் விலையும் சராசரியாக ஆறு சதவீதம் உயர்நதது.

ஆனாலும் கடந்த ஆண்டு பெப்ரவரி மாத உணவுப் பொருட்களின் விலையேற்றத்தை ஒப்பிட்டு பார்க்கும்போது, கடந்த ஜூலை மாதத் தில் அது குறைவாகவே இருந்தது

# சிரியாவுக்கு புதிய பிரதமர்



சிரியாவில் புதிய பிரதமராக வால் நடேர் அல் ஹல்கியை, அந்நாட்டு அதிபர் பஷார் ஆசாத் நியமித்துள்ளார். ஆசாத் அரசில் பிரதமராக இருந்த ரியாத் ஹிஜாப் திடீரென ஜோர்டானுக்கு தப்பியோடி விட்டார். இதையடுத்து, சுகாதார துறை அமை ச்சராக இருந்த வால் நடேர் அல் ஹல்கியை புதிய பிரதமராக நியமித்து ஆசாத் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

# எதிரிக்கு கைகொடுத்து உதவியது அமெரிக்காவின் கடற்படை



மத்திய கிழக்கு கடற் பகுதியில் தீப் பற்றி எரிந்து கொண்டிருந்த படகொன்றிலிருந்து 10 பேரை அமெரிக்க கடற் படையினர் முதன் முறை யாக காப் பாற்றி உள்ளனர்.


இவர்களில் 8 பேர் ஈரானியர்கள், மீதமுள்ள 2பேர் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க கடற்படைக்குச் சொந்தமான யு.எஸ்.எஸ் ஜேம்ஸ் ஈ. வில்லியம்ஸ் என்ற போர்க்கப்பலே இவர்களை மீட்டுள்ளது.

இது குறித்து அமெரிக்க கடற்படை பேச்சாளர் ஒருவர் கூறுகையில், விபத்திலிருந்து காப்பாற்றப்பட்ட அனைவரும் தற்போது சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவித்தார்.

அமெரிக்கப் படையினரால் ஈரானியர்கள் காப்பாற்றப்படுவது இது முதல் முறையல்ல. இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஈரானியர்கள் 13 பேரைக் கடற்கொள்ளையர்களிடமிருந்து அமெரிக்க கடற்படையினர் காப்பாற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது

# சீக்கிய ஆலயத்தில் 6 பேர் கொலை தன்னைத்தானே சுட்டுக்கொலையாளியும் பலி



அமெரிக்காவின் விஸ்கொன்சின் மாநிலத்திலுள்ள சீக்கிய கோவில் மீது தாக்குதல் நடத்திய வேட் பேஸ் என்ற நபர் தன்னை தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.


40 வயதான வேட் பேஸ் நடத்திய தாக்குதலில் ஆறு பேர் கொல்லப்பட்டதுடன், மூவர் கடும் காயங்களுக்குள்ளாகியிருந்தனர்.

பொலிஸ் உத்தியோகத்தர் நடத்திய துப்பாக்கி பிரயோகத்தை அடுத்தே அவர் தற்கொலை செய்துகொண்டதாக அமெரிக்க புலனாய்வு அமைப்பான ஏ.பி.ஐ தெரிவித்துள்ளது.

வேட் பேஸ்சின் பெண் நண்பி ஒருவர் ஆயுதங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளதை ஏ.பி.ஐ உறுதிப்படுத்தியுள்ளது.

### கிளிநொச்சி பொதுச்சந்தை கடைத்தொகுதிகள்

# விருப்பு வெறுப்பிற்கு அப்பால் உரியவர்களுக்கு கையளிக்கப்படும்



(கிளிநொச்சி)

வடமாகாண சபையினால் அமைக்கப்பட்டுவரும் கிளிநொச்சி பொதுச்சந்தை கடைத் தொகுதிகள் விருப்பு வெறுப்பிற்கு அப்பாற்பட்டு உண்மையுடனும் உரியவர்களிடமும் கடைகளைக் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

குறித்த சந்தை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று இடம்பெற்றது. அங்கு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைக்கப்பட்டு வரும் இப் பொதுச்சந்தையில் உள்ள மரக்கறி, மீன்சந்தை, இறைச்சிக் கடைகள் மற்றும் ஏனைய வியாபார கடைகள் குறித்த விபரங்களை பிரதேச சபைச் செயலரிடமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் கேட்டறிந்து கொண்டார். இது தொடர்பான ஆலோசனைகளையும் அபிப்பிராயங்களையும் தெரிவிக்கும்படி சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து வர்த்தக சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட சம்பந்தப்பட்டவர்கள் தமது அபிப்பிராயங்களை வெளியிட்டனர்.

கிளிநொச்சியில் அமைக்கப்படும் பொதுச்சந்தை கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற இக் கருத்தரங்கில் வடமாகாண பிரதம செயலாளர் விஜயலக்ஷ்மி ரமேஷ், கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் சிறிநிவாசன், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஜெகூ, கிளிநொச்சி காணி அதிகாரி, கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கரைச்சி பிரதேச சபைச் செயலாளர் வடமாகாண மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிகாரிகள் ஆகியோருடன் வர்த்தக சங்க நிர்வாகிகள் மற்றும் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

ஏற்கனவே வடமாகாண ஆளுநர் வடமாகாண பிரதம செயலாளர் உள்ளிட்டோரினால் ஆலோசிக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் கடைகளுக்கான ஒதுக்கீடுகள் யாவும் நியாயமாக இடம்பெறும் எனத் தெரிவித்த அமைச்சர் கிளிநொச்சி உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிரதேச சபைச் செயலாளர் மற்றும் வர்த்தக சங்க தலைவர் உள்ளிட்டோர் தமது அபிப்பிராயங்களை தெரிவித்த பின் நியாயமான முடிவுகளை மேற்கொள்ளலாம் எனவும் தெரிவித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மலிவு விலையில் கோழிகள்

(வரணி)

வரணிப் பிரதேசத்தில் தற்போது தினமும் தென்னிலங்கையிலிருந்து கோழிகள் எடுத்து வரப்பட்டு மிக மலிவு விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

தற்போது கடலுணவு, மரக்கறி விலைகளை விட கோழிகள் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுவதால் பொதுமக்கள் பெரிதும் விரும்பி வாங்குகின்றனர்.

கடந்த வாரம் 4 கோழி 1000 ரூபாவிற்கும், 5 கோழி 1000 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்பட்டதை காணக்கூடியதாக இருந்தது. இதனால் பொதுமக்கள் மிகுந்த ஆவலுடன் வாங்கிச் செல்வதை அவதானிக்க முடிகிறது. (150)

## மனித உரிமை...

பொறுப்பை அது கொண்டுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் ஊடாக பல உறுதிமொழிகளை வழங்கியுள்ள இலங்கை அரசாங்கம் கடந்த ஜூலையில் வெளியிட்ட குழுவின் இறுதி அறிக்கையிலும் உறுதிமொழிகளை வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழக மக்கள், இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் அதிக அக்கறை கொண்டுள்ள நிலையில், ஐக்கிய நாடுகளின் சாசனப்படி இலங்கைத் தமிழர்களின் அகதி நிலைப்பாட்டை உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

## இந்திய அணுகுமுறைக்கு...

அண்டை நாடுகளுடன் பேணப்பட்டு வரும் உறவுகள்சரியான முறையில் காணப்படுகின்றதா என்பதனை இந்தியா மீளாய்வு செய்ய வேண்டும். எவ்வாறெனினும், மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையிலான நெருக்கமான பிணைப்பில் விரிசல் ஏற்படவில்லை.

பிராந்திய வலயத்தின் இந்தியாவின் விருப்பங்களுக்கு மாறாக இலங்கைசெயற்படாது. அம்பாந்தோட்டை துறைமுகம் போன்ற பாரிய அபிவிருத்தித் திட்டங்களைமுன்னெடுக்கும் பொறுப்பு முதலில் இந்தியாவிடமே ஒப்படைக்கப்பட்டது. எனினும் அது குறித்து இந்தியா அதிக நாட்டம் காட்டவில்லை.

2009 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போதுகுறைந்த விலையில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய சீனா ஒத்துழைப்பு வழங்கியது. இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான உறவுகளை சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும. அவசரப்பட்டு தீர்மானங்களை எடுப்பதில் எவ்வித பயனில்லை.

இனப்பிரச்சினைத் தீர்விற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்கவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமன்றி அனைத்து தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுத் திட்டத்தை எட்டத் தயார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்லது வேறும் கட்சியொன்றுடன் தனியாக பேச்சுவார்த்தை நடத்தினாலும் நாட்டின் அதி உயர் தீரமானங்களை நிறைவேற்றும் நாடாளுமன்றில் அதற்காக அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை அனைவரும் நினைவில் நிறுத்திக் கொள்ளவேண்டும்.

இதன் காரணமாகவே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலமாக தீர்வுத்திட்டம் காண்பது இலகுவானது என அரசாங்கம் கருதுகின்றது. ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க வேண்டும் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு வரவேற்கப்பட வேண்டியது.

வடக்கு இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளதாக புலி ஆதரவு தரப்பினர் போலியான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர் எனினும் அந்த பிரசாரங்கள் பொய்யானவை எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

## லீசிங் கட்டத்...

மகன் திருமணம் செய்ததை அடுத்து தன்னால் கடனை மீளச்செலுத்த முடியாது போயுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து வங்கி உத்தியோகத்தர்கள் தனது வாகனத்தை பறிமுதல் செய்தது சாதாரண விடயமாக இருந்தாலும் தன்னை தாக்கியமை பிழையான விடயம் எனவும் தெரிவித்த அவர் இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பல லீசிங் வங்கிகள், நிறுவனங்கள் மக்களுக்கு வாகனங்களை தவணைக் கட்டணத்தில் பெற்றுக் கொடுத்துள்ள நிலையில் 35 வீத வாகனங்கள் கடன் கட்டத் தவறியவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மேலும் அம்பாள் குளம் கிராமத்தில் மட்டும் கடந்த மாதம் வரை 40 வரையான வாகனங்கள் கடன் கட்டத் தவறியவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (28)

## டெல்றொக்சனின்....

மக்களின் அஞ்சலிக்காக அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்று மாலை 3.00 மணியளவில் இரங்கல் உரைகளைத் தொடர்ந்து பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி இடம்பெற்று சடலம் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு குருநகர் கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த இறுதி நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிறேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், சிவஞானம் சிறிதரன், சிவசக்தி ஆனந்தன் மற்றும் மலையக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், சிவாஜிலிங்கம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி மற்றும் மலையக மக்கள் முன்னணியின் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் பிரபாஸ்கர், நவசமாஜக் கட்சியைச் சேர்ந்த ஜெனகன், புதிய ஜனநாயக சோசலிச லெனின் கட்சியின் வடபிராந்திய பொதுச் செயலாளர் செல்வம் கதிர்காம நாதன் மற்றும் பிரதேச சபைகளின் தவிசாளர்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (02)

# வன்னியில் அதிகளவில் போலி நாணயத்தாள்கள்

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரத்தில் வன்னிப் பகுதியில் போலி நாணயத் தாள்களுடன் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். போலி நாணயத் தாள்கள் குறித்து மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்று யாழ். பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

நேற்று யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 3 ஆம் திகதி பரந்தன் பகுதியில் விருந்தினர் விடுதி ஒன்றில் தங்கியிருந்த ஒருவர் 5000 ரூபா பெறுமதியான போலி நாணயத் தாள்களுடன் கிளிநொச்சி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பூநகரிப் பகுதியில் 1000 ரூபா போலி நாணயத் தாளுடன் ஒருவர் பூநகரி பொலிஸாரினால் பிடிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த 9 ஆம் திகதி புளியங்குளம் பகுதியில் உள்ள எரிபொருள் நிலையமொன்றில் 5000 ரூபா போலி நாணயத் தாள்களுடன் மோட்டார் சைக்கிளிற்கு எரிபொருள் நிரப்பிய 3 பேர் வவுனியாப் பொலிஸாரினால் பிடிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் இவர்கள் ஏற்கனவே கடந்த மாதம் 29 ஆம் திகதி குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு 5000 ரூபா போலி நாணயத் தாளுடன் வந்து எரிபொருள் நிரப்பிச் சென்றிருக்கின்றனர்.

அவர்களது இரண்டாம் முறை முயற்சியின் போதே எரிபொருள் நிரப்பு நிலையத்தினரால் வவுனியா பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டு அவர்கள் மூவரும் பிடிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

எனவே இவ்வாறான போலி நாணயத் தாள்கள் குறித்து மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை கடந்த வாரத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 27 பேர் யாழ். மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில் சுற்றிவளைத்து பிடிக்கப்பட்டிருப்பதாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

இந்தக் காலப்பகுதியில் சட்டவிரோத சாராயம் சம்பந்தமாக 10 வழக்குகளும், கஞ்சா சம்பந்தமாக 5 வழக்குகளும், சட்டவிரோத மணல் ஏற்றியது குறித்து 3 வழக்குகளும், குடிபோதையில் வாகனம் செலுத்தியது குறித்து 14 வழக்குகளும், சூழலுக்கு பங்கம் விளைவித்தல் டெங்கு நுளம்பு பெருக்கத்திற்கு ஏதுவாக செயற்பட்டது குறித்து 8 வழக்குகளும், குடித்து விட்டு பொது இடங்களுக்கு இடையூறு விளைவித்தல் குறித்து 11 பேர் மீது 11 வழக்குகளும், பொது இடங்களில் சாராயம் குடித்தல் 3 வழக்குகளும் நீதிமன்றங்களில் பதிவு செய்யபடப்பட்டதாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். (பா)

## போதனா...

விதமான விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் கூறினார்.

விசாரணைகள் தொடர்பான அறிக்கைகளை அரச கணக்காய்வுத் திணைக்களம் தன்னிடம் தரவில்லை எனவும் யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## உயர்தர...

மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் கோரிக்கை விடுத்துள்ளார்.

பிழையான வினாவுக்கு முழு புள்ளிகள் வழங்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ள போதும் திறமையான மாணவர்கள் பாதிக்கப்படுவதாகவும் இவ்வாறான வினாக்களுக்கு விடையளிக்க முனையும் மாணவர்கள் காலத்தை வீணடிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இவ்வாறான நிலை மாணவர்களை மனமுடையச் செய்யும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## இலங்கை...

முறைப்பாடுகள் குறித்து, ஆராயப்பட உள்ளதாக கூறப்படுகிறது. அடுத்த மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள உலக நாடுகளின் மனித உரிமைகள் தொடர்பான மீளாய்வு மாநாட்டில் இலங்கை விடயம் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளது.

தற்போது நடைபெறவுள்ள கூட்டத்தின் பின்னர், ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் சிரேஷ்ட அதிகாரிகள் சிலர் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளனர். அவர்கள் இலங்கையில் மனித உரிமை நிலைமைகள் தொடர்பாக ஆராயவுள்ளனர்.

# சிறுவர், பெண்கள் முறைப்பாட்டுப் பிரிவு குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும்

## யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் தகவல்



யாழ். மாவட்டப் பொலிஸ் நிலையங்களில் சிறுவர், பெண்கள் முறைப்பாட்டுப் பிரிவுகளில் காணப்படும் குறைபாடுகள் ஆராயப்பட்டு நிவர்த்தி செய்யப்படுமென யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ் விடயத்தைத் தெவித்தார்.

கடந்த வியாழக்கிழமை யாழ். கிறின்கிறாஸ் விடுதியில் நடைபெற்ற இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவிற்கும் சிவில் சமூகப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பின் போது யாழ். கிளிநொச்சிப் பொலிஸ் நிலையங்களில் சிறுவர், பெண்கள், முறைபாட்டுப் பிரிவுகளில் தமிழ் மொழி மூலமாக முறைப்பாடு எடுக்கும் பெண் பொலிஸார்கள் குறைவாக இருப்பது அவர்களது பிரச்சினைகளைச் சரிவர இனம் காணமுடியாமல் உள்ளதாகவும் யாழ். மனித உரிமை ஆணைக்குழுக் காரியாலய அதிகாரிகளினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. கிளிநொச்சி, யாழ் மாவட்டங்களில் இவ்வாறு கடமையாற்றும் 195 தமிழ் பேசும் பொலிஸாரில் பத்துவீதம் கூட தமிழ்பேசும் பெண் பொலிஸார் சேவையில் இல்லை எனவும் மேலும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இவ்விடயம் குறித்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழு கவனம் செலுத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இவ்விடயம் குறித்து நேற்றைய செய்தியாளர் சந்திப்பில் பத்திரிகையாளர்களால் பிரதி பொலிஸ்மா அதிபரிடம் வினாவப்பட்டது. இதற்குப் பதிலளித்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் யாழ். மாவட்டங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களில் சிறுவர், பெண்கள் முறைப்பாட்டுப் பிரிவுகளில் காணப்படும் குறைபாடுகள் ஆராயப்பட்டு நிவர்த்தி செய்யப்படும் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த வாரத்தில் யாழ். மாவட்டத்தில் இரண்டு கொலைச் சம்பவங்கள் அடங்கலாகச் சில பாரிய குற்றங்கள் மட்டுமே நடைபெற்றிருப்பதாகவும் தெரிவித்தார். (பா)

# குடிவரவு, குடியகல்வு சட்டத்தில் வருகிறது பாரிய மாற்றம்

(கொழும்பு)

இலங்கை குடிவரவு குடியகல்வு சட்டங்களில் பாரிய மாற்றங்கள் கொண்டு வரப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட உள்ளதாக குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார். நாட்டில் அண்மைக் காலமாக சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகள் உயர்வடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைளை தடுக்கும் நோக்கில் இவ்வாறு புதிய சட்டங்கள் அறிமுகம் செய்யப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சட்டவிரோதமான முறையில் நாட்டை விட்டு வெளியேற முயற்சிப்போருக்கும் அதற்குத் துணை நிற்போருக்கும் எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கக் கூடிய வகையில் சட்டத்திருத்தங்கள் கொண்டு வரப்பட உள்ளன. அண்மைக்காலமாக்க் கடல் வழியாக அவுஸ்ரேலியா நோக்கி புகலிடம் கோருவோரின் எண்ணிக்கையில் உயர்வு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




| Rank by Gold | Country | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | அமெரிக்கா | 41 | 26 | 29 | 96 |
| 2 | சீனா | 37 | 26 | 21 | 84 |
| 3 | பிரித்தானியா | 26 | 15 | 18 | 59 |
| 4 | ரஷ்யக் கூட்டமைப்பு | 19 | 24 | 28 | 71 |
| 5 | தென்கொரியா | 13 | 7 | 7 | 27 |
| 6 | ஜேர்மனி | 10 | 19 | 14 | 43 |
| 7 | பிரான்ஸ் | 10 | 9 | 12 | 31 |
| 8 | கங்கேரி | 8 | 4 | 5 | 17 |
| 9 | அவுஸ்ரேலியா | 7 | 16 | 12 | 35 |
| 10 | இத்தாலி | 7 | 6 | 8 | 21 |
| 11 | நெதர்லாந்து | 6 | 5 | 8 | 19 |
| 12 | கசகஸ்தான் | 6 | 0 | 4 | 10 |
| 13 | யப்பான் | 5 | 14 | 17 | 36 |

# வட, கிழக்கில் சேவையாற்ற 400 தாதியர்கள் இணைப்பு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சேவையாற்றுவதற்காக 400 தாதியர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

அந்த மாகாணங்களில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்களே இதன்பொருட்டு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் கல்வி, பயிற்சி மற்றும் ஆய்வுப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் சுனில் டி அல்விஸ் குறிப்பிட்டார்.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் எந்தவொரு பாடவிதானமாயினும், அதில் சித்தியடைந்தவர்கள் இந்தச் சேவைக்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதுதவிர அந்த மாகாணங்களில் நிலவுகின்ற குடும்ப சுகாதார தாதியர்களின் வெற்றிடங் களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுககப்பட்டுள்ளதாக டாக்டர் சுனில் டி அல்விஸ் தெரிவித்தார்.

இதன்பொருட்டு அமைச்சரவை மற்றும் அரச சேவை ஆணைக்குழு ஆகியவற்றின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அவர் கூறினார்.

இந்த மாத இறுதிக்குள் சுமார் 200 குடும்ப சுகாதார தாதியர்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இணைத்துக்கொள்வதற்கான நடவடிக்கைக்ளையும் மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# ஜேர்மனிக்கு விளக்கம்

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கையின் தேசிய செயற்திட்டம் தொடர்பில் ஜேர்மனிக்கு இலங்கை அரசாங்கம் விளக்கம் அளித்துள்ளது.

மனித உரிமைப் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தல் தொடர்பிலான தேசிய செயற்திட்ட அறிக்கையின் பிரதியும் ஜேர்மனிய வெளிவிவகாரச் செயலாளர் டொக்டர் ஹெரால்ட் புவானிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனிக்கான இலங்கைத் தூதுவர் சரத் கொங்காஹகே இந்த அறிக்கையை ஒப்படைத்துள்ளார்.

தற்போது நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் நல்லிணக்க முனைப்புக்கள் தொடர்பில் இலங்கைத் தூதுவர் விளக்கம் அளித்துள்ளார்.

இலங்கையில் நிலக்கண்ணி வெடி அகற்றுதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகள் வரவேற்கப்பட வேண்டியவை என ஜேர்மனிய வெளிவிவகாரச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

முதலீடு மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையில் கூடுதலான உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# டெசோ வழக்கை விசாரிக்க உயர் நீதிமன்றம் மறுப்பு

(சென்னை)

டெசோ மாநாட்டிற்கு தமிழக அரசு தடைவிதித்துள்ளதனை எதிரத்து தி.மு.க.தொடுத்த வழக்கை விசாரிப்பற்கு நீதிபதி மறுப்புத் தெரிவுத்துள்ளார்.

டெசோ மாநாடு தொடர்பான ஏற்பாடுகள் மும்முரமாக இடம் பெற்றுக்கொண்டிருந்த தருணத்தில் மாநாட்டை நடத்த தமிழகப் பொலிஸார் தடைவிதித்தனர்.

இதனையடுத்து தி.மு.க., அடுத்த கட்ட நடவடிக்கையாக, தடையை மீறி மாநாடு நடத்துவதா அல்லது ஒத்திவைப்பதா என்ற ஆலோசனையில் கட்சியின் உயர்மட்டக்குழு கூடி விவாதித்தது.

இது தொடர்பாக நேற்று சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியிடம் அவசர மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

டெசோ மாநாடுக்கு அனுமதி கோரி தொடரப்பட்ட மனுவை அவசர வழக்காக எடுத்து விசாரிக்க டெசோ மாநாட்டு அமைப்பாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இருதரப்பு வாதத்தையும் கேட்டறிந்த நீதிபதி போல் வசந்த குமார் இருதரப்பினரிடமும் பல கேள்விகள் கேட்டார்.

இது குறித்த வழக்கு நிலுவையில் இருப்பதால் இந்த வழக்கை விசாரிக்க மறுத்துவிட்டார். மாநாட்டுக்கு 2500 பேருக்கு மாத்திரம் அழைப்பிதழ் அனுப்பப்பட்டுள்ளது.

எனவே 8000 இற்கும் குறைவானவர்களே வருவார்கள் என்று டெசோ மாநாட்டு அமைப்பாளர்கள் சார்பில் வாதம் முன் வைக்கப்பட்டது.

மாநாடு நடத்துவது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று உளவுத்துறைத் தகவல் அளித்துள்ளதாகவும், பயங்கரவாதத் தாக்குதல் ஏதேனும் நடத்தப்படலாம் என்பதால் அனுமதி மறுக்கப்பட்டதாகவும் மத்திய அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு தரப்பு வாதத்தையும் கேட்ட நீதிபதி போல் வசந்தகுமார், டெசோ மாநாட்டுக்கு 8000 இற்கும் மேற்பட்டவர்கள் வந்தால் என்ன செய்வீர்கள்? மாநாட்டுக்கு வருபவர்களின் பாதுகாப்புக்கு டெசோ மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்கள் பொறுப்பேற்றுக் கொள்வார்களா? எனவும் வினவியுள்ளார்.

அத்துடன், சில நிபந்தனைகளுடன் பொலிஸாரின் 'அனுமதி அளித்தால் அதனை ஏற்றுக் கொள்வீர்களா? எனவும் டெசோ மாநாட்டு ஏற்பாட்டாளர்களிடம் கேள்விகளை எழுப்பினார்...

இதுதவிர, டெசோ மாநாட்டுக்கு வருபவர்களின் பாதுகாப்புக்கு பொறுப்பு ஏற்பதாக தெரிவித்து எழுத்து மூலம் உறுதி செய்து கொடுத்தால் பொலிஸ் அனுமதி அளிக்குமா எனவும் அரசிடம் நீதிபதி வினவியுள்ளார்.

பின்னர் டெசோ மாநாடு குறித்த முக்கிய வழக்கு தொகுதி நீதிபதிகள் குழாமிடம் முன்வைக்கப்பட்டுள்ளதால் வழக்கை தான் விசாரிப்பது உகந்ததல்ல எனவும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த வழக்கு ஆவணங்களையும் தலைமை நீதிபதிக்கு அனுப்பி வைக்கவுள்ளதாகக் கூறி வழக்கை விசாரிக்க மறுப்புத் தெரிவித்துள்ளார். இதேவேளை அண்ணா அறிவாலயத்திலாவது டெசோ மாநாடு நடைபெறுமென தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

# சாரதிக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம் பஸ்தியான் சந்தியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் சம்பந்தப்பட்ட நால்வரில் மூவர் யாழ். நீதவான் நீதிமன்றினால் நேற்று முன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டனர். பஸ்ஸின் சாரதி சுப்பிரமணியம் ஆனந்தராஜா (வயது - 30) தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இவர் கண்டி மாவட்டம் தெல்கொட என்னும் இடத்தைச் சேர்ந்தவராவார். இது சம்பந்தமாக பஸ்ஸின் சாரதி உட்பட 4 பேர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் மா.கணேசராசா உத்தரவிட்டிருந்தார். நேற்றுமுன்தினம் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சந்தேகநபர்கள் நால்வரில் மூவர் தலா 20 ஆயிரம் ரூபாவுக்கான 2 ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். பஸ்ஸின் சாரதி தொடர்ந்தும் எதிர்வரும் 23 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். (137)

# விசாரணைகள் ஆரம்பம்

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு எரிபொருள் கொள்வனவு செய்யப்படுவது தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த விசாரணைக்காகச் சில குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் எச்.ஏ.எஸ்.சமரவீர தெரிவித்தார். நாடாளுமன்ற பொது முயற்சிகளுக்கான தெரிவுக்குழுவின் பணிப்புரைக்கமைய இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். 2011 ஆம் ஆண்டின் ஜூன் மாதம் முதல், இந்த வருடத்தின் ஜூலை மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கூட்டுத்தாபனம் எரிபொருள் கொள்வனவு செய்துள்ளமை குறித்து விரிவான விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த விசாரணையின் அறிக்கை செப்ரெம்பர் மாதமளவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகக் கணக்காய்வாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டார்.

# நயினாதீவில் நகைதிருடிய பெண்கள் மாட்டினர்

(நயினாதீவு)

நயினாதீவில் நகைத்திருட்டில் ஈடுபட்ட இரண்டு இளம் பெண்கள பக்தர்களிடம் வசமாக மாட்டிய சம்பவம் ஒன்று நேற்று முன்தினம இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, கரவெட்டியைச் சேர்ந்த குடும்பத்தினர் கோயில் வீதியில் சாமி தரிசனம் செய்த பின்னர் வீபூதி, சந்தனம் வாங்கினர். பின்னர் பிள்ளைக்கு வீபூதி அணியும் போது பிள்ளையின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலி காணாமற் போயுள்ளதை அவதானித்தனர்.

உடனடியாகவே அருகில் நின்ற பெண்ணில் சந்தேகம் கொண்டு விசாரித்தனர். ஆனாலும் குறித்த பெண் மறுத்துள்ளார். பெற்றோர் அப் பெண்ணை அங்கு கடமையில் இருந்த பொலிஸாரிடம் விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். பொலிஸாரின் விசாரணையில் சங்கிலி திருடியதை ஏற்றுக்கொண்ட பெண் தன்னுடைய நண்பியிடம் கொடுத்ததாகத் தெரிவித்தார்.

குறித்த பெண்ணின் நண்பியும் கைதுசெய்யப்பட்டு தற்போது ஊர்காவற்றுறைப் பொலிஸாரின் விசாரணையில் உள்ளனர். குறித்த இரு பெண்களும் வட்டகச்சி, விசுவமடுப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என அடையாள அட்டைகளில் இருந்து தெரியவருகின்றது. (12)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஆகஸ்ட் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.